NN2 5672
14 OCT 1954

# உழைப்பின் உயர்வு



CONNEMARA PUBLIC LIBRARY
20 MAR 1958
MADRAS

தி ஐடியல் பப்ளிஷர்ஸ்

திருச்சிராப்பள்ளி.

# உழைப்பின் உயர்வு

ஆக்கியோர்

திருலோக சீதாராம்

தி ஐடியல் பப்ளிஷர்ஸ்
சின்னகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை]

[விலை அணா 0-14-0

First Edition - 1952
Second Edition - 1954.

*(Approved by the Madras Text-Book Committee for Class use (Vide Fort St. George Gazette) Supplement to Part I-B Dated 19—5—54, Page 120 of Part II.)*

அச்சியற்றியது
சிட்டி பிரஸ்,
மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி

# முன்னுரை

நாட்டின் நலம் நாடி ஒவ்வொரு துறையிலும் தொண்டாற்றிப் பெரும் புகழ் ஈட்டிய பெரியார்களின் வாழ்க்கையைப் பற்றியும், அவர்களது சாதனைகளைப் பற்றியும் அறிந்துகொள்வது மிகவும் பயனுடையதாகும்.

தென்னிந்தியாவில் தொழில் விஞ்ஞானத் துறைகளில் மேலை நாட்டவரும்கண்டு வியந்து போற்றத் தக்க புகழ் படைத்த பெரியார் கோவைத் தொழில் மன்னர் திருவாளர் ஜி. டி. நாயுடு அவர்கள் ஆவர்.

உடனிருந்து பழகிப் பல அரிய செய்திகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு இந்தச் சிறு நூலாக விளைந்திருக்கிறது. தமிழுலகம், குறிப்பாக் மாணவர் உலகம் பயனடைய வேண்டுமென்ற விருப்புடன் இதை வெளியிட முன்வந்த பதிப்பாளர் **தி ஐடியல் பப்ளிஷர்ஸ்** அவர்கட்கு எனது நன்றி.

திருச்சி,
5-11-53

**திருலோக சீதாராம்**
ஆசிரியர் "சிவாஜி"

## இதனுள்


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் ... | 5 |
| 2. | உலக யாத்திரை ... | 20 |
| 3. | விஞ்ஞான சாதனைகள் | 59 |
| 4. | வாழ்க்கை லட்சியம் ... | 106 |

# உழைப்பின் உயர்வு

## 1. தோற்றுவாய்

### தமிழகத்தின் மாண்பு :

உலகப் புகழ்படைத்த மேலோரின் வாழ்க்கை ஏடுகளை புரட்டிப்பார்க்கும்போது, ஏதோ கற்பனைச் சுவை மிகுந்த நவீனம் ஒன்றைப் படிப்பது போன்ற உணர்வே எழக்கூடும். ஏனெனில், அணுகிப்பார்த்து அறிந்து கொள்ளும் வரையில் நம்புவதற்கியலாத கற்பனையைப் போலக் காணப்படுவதே "உண்மை"யின் இயல்பு ஆகும்.

உலகோர் வியந்து போற்றும் வண்ணம் பொருள் பொதிந்த உயர்வாழ்க்கையைப் படைத்துள்ள தனி மனிதர்களே ஒரு நாட்டின் சரித்திர நாயகரராகத் திகழ்கிறார்கள். ஏனெனில், இவர்கள் தனி மனிதர்களாக மட்டும் வாழ்ந்து மறைந்து விடாமல் தாங்கள் தோன்றிய நாட்டின் நலனுக்காகவே எண்ணிச் செயல்புரிகின்றார்கள். இத்தகைய உயர் மனிதர்களைப் பெற்றெடுத்த பெருமையில் தமிழகம் வேறெந்த நாட்டினும் தாழ்ந்ததல்ல.

"உழைப்பால் மனிதன் உயர்வடையலாகும்" என்ற பேருண்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்க்கையை நடத்துகின்ற பெற்றியினரில் இன்று நம்முடன் வாழும் கோவைத் தொழில் மன்னரான **கோபால் துரைசாமி நாயுடு** அவர்கள் ஒருவராவார். வியத்தகு மாண்பினை

யுடைய இப்பேரறிவாளரின் வாழ்க்கை வரலாறு அதிசயம் நிறைந்தது; ஆனால், உண்மை என்று கருதுதற்கு உரியதாகும்.

மிக மிகச் சாதாரண மனிதராக வாழ்வைத் தொடங்கிய இவர் தொழில் ஊக்கத்திலும் விஞ்ஞான அறிவாற்றல்களிலும் உயர்வடைந்து உலகப்புகழ் பெற்றுள்ள தமிழ் மகனாராவார். பிள்ளைப் பருவத்தில் யாவருக்கும் அடங்காமல் திரிந்து கொண்டிருந்த சிறுவன் துரைசாமி, பள்ளியில் படித்துப் பட்டங்கள் பெற வாய்ப்பில்லாது போனதில் வியப்பில்லை. ஆயினும் அச்சிறுவரின் வாழ்வில் தற்செயலாக நேர்ந்த ஒரே ஒரு நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றி அமைத்து விட்டது. அதனுள் தான் அவர் வரலாற்றின் கருப்பொருள் அமைந்து கிடக்கிறது.

## அடங்காப் பிள்ளை :

கோவை மாவட்டத்தில் **கலங்கல்** என்ற சிற்றூரில் செல்வரான **கோபால் நாயுடு** அவர்களின் அருமை மகனாகப் பிறந்த துரைசாமி வீட்டிலும் ஊராரிடத்திலும் "ஒன்றுக்கும் உதவாதவன்" என்று கைவிடப்பட்ட துட்டப் பிள்ளைகளில் ஒருவனாகவே இருந்தான்.

சிற்றூரின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் வினைத் தெரியாத இளம்பிராயத்தில் எப்போதோ மணலில் விரலால் கீறி முறைவைத்துப் படித்ததைத் தவிர ஒழுங்காகப் படித்து அறியான் துரைசாமி. ஆசிரியர் கண்களில் மணலைத் தூவிவிட்டு, வைக்கோல் வண்டிக்குத் தீயிட்டு, கல்லும் கையுமாகத் திரிந்துகொண்டிருந்தால் யார்தான் அவனை மெச்சுவார்கள்? தந்தையே மனம் நொந்து தம் அருமைப் பிள்ளையைப் பண்ணையாட்

களுடன் சேர்த்துப் புலங்களில் பணிபுரியுமாறு போக்குக் காட்டி அனுப்பிவிட்டாரென்ருல் சிறுவனுடைய துடுக்குத் தனத்தை விவரிக்க வேண்டியதில்லை. கடினமான உழைப்பிணைச் செய்யத் தந்தை இட்ட கட்டளையையும் அடங்காத் தன்மையையும் ஒருங்கு கொண்டு திரிந்த அந்த நாட்களில்தான் துரைசாமியின் வாழ்வில் ஒரு தற்செயலான நிகழ்ச்சி தோன்றலாயிற்று.

## ஒரு திருப்பம் :

அந்தப் பக்கத்தில் சர்வேயராக இருந்த ஒரு வெள்ளைக்கார துரை **மோட்டார் சைக்கிளில்** உத்தியோக அலுவலாக ஒரு சமயம் அவ்வூருக்கு வர நேர்ந்ததுதான் சிறுவன் துரைசாமி தன் வாழ்வில் கொண்ட புதியதோர் பாதைக்கு ஒரு திருப்பமாக அமைந்துள்ளது.

அதற்கு முன்பு அவ்வளவு பயங்கரமான வெண் குட்டம் பிடித்த நோயாளியைச் சிறுவன் துரைசாமி பார்த்திருக்கவில்லை. ஆகையால், ஒரே வியப்புப் பொருளாக அந்த வெள்ளை மனிதர் விளங்கிஞர். பழுதாகி நின்றுவிட்ட அந்த வண்டியை ஓட்டுவதற்குக் கந்தல் துணியும் மண் எண்ணெயும் தேவைப்பட்டன. சூழ்ந்திருந்து வியப்புடன் வேடிக்கை பார்த்த அந்தக் குப்பத்து மக்களின் கூட்டத்தில் கூர்ந்த நோக்குடன் அவ்வெண்குட்டப் பேர்வழியையும் அவருடைய வேதனையையும் கவனித்துக்கொண்டிருந்த சிறுவன் துரைசாமி அவருக்கு உதவிசெய்ய முன் வந்தனன்.

வண்டி பழுது பார்க்கப்பட்டு அதை விட்டுப் புறப்பட்டுச் சென்றது. ஆனுல், அந்த வேடிக்கையான யந்திர ஊர்தி சிறுவன் துரைசாமியின் மனத்தில் பெரிய ஆவலை நிறைத்துவிட்டுப் போய்விட்டது.

எப்படியாவது நகரத்திற்குச் சென்று அவ்விதமான வாகனம் ஒன்றை வாங்கி அதில் சவாரிசெய்து பார்த்து விடவேண்டுமென்ற அளவிட முடியாத ஆவல் ஒன்று எழுந்தது அந்த இளம் உள்ளத்தில். கோவை நகரத்திற்கு முதன் முதலில் வந்த துரைசாமிக்கு மிகப்பெரிய ஆச்சரியம். ரயில் வண்டி வடிவத்தில் காத்திருந்தது. பெரிய தண்டவாளங்களில் நீண்ட குழாய்களில் புகையைக் கக்கிக்கொண்டு பயங்கரமான குரலோசையுடன் விரைந்து சென்ற ரயில் எஞ்சின், நாட்கணக்கில் அருகிலிருந்து பார்க்கக்கூடிய அதிசயப் பிராணியாகத் தோன்யது. நகரத்தில் நடமாடும் யந்திர ஊர்திகளும் யந்திர சாலைகளும் துரைசாமி திரிந்து சென்று ஆராயும் பொருள்களாயின.

## முதல் முயற்சி:

மோட்டார் சைக்கிள் வாங்கும் லட்சியம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு நிறையப் பணம் வேண்டும் என்ற உண்மையைத் தெரிந்துகொண்ட சிறுவன் ஒரு ஹோட்டலில் மேசை துடைக்கும் வேலையில் மாதம் மூன்று ரூபாய் சம்பளத்திற்கு அமர்ந்து வேலைசெய்தான். மூன்று வருடத்திற்குப் பிறகு தன் சேமிப்புத் தொகை சுமார் நானூறு ரூபாய்கள் என்று கண்ட துரைசாமிக்கு அவன்கொண்ட லட்சிய சித்தி வெகு அருகில் வந்து விட்டது. அந்த வெண் குட்ட துரையிடமே சென்று விலைபேசி அதே மோட்டார் சைக்கிளை வாங்கிச் சவாரி செய்து திருப்தியடைந்தார் என்றால் அவருடைய முயற்சியின் திறத்திற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கையில் கிடைத்த மோட்டார் சைக்கிள் அவரிடம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதைச் சொல்லவேண்டிய

இல்லை. முரட்டுத்தனமாகத் திரிந்துகொண்டிருந்த மூளைக்கு ஒரு போக்குக்கிடைத்தால் அதன் விளைவைச் சொல்லவும் வேண்டுமோ ?

யந்திர ஊர்தியை அக்குவேறு ஆணிவேருகக் கழற்றுவதும், கழற்றிய ஞாபகத்துடன் மீண்டும் பொருத்திப் பார்ப்பதும், இப்படி அதன் ஒவ்வொரு மறையுடனும் துரைசாமிக்கு உயிர்த்தொடர்பு ஏற்பட்டுவிட்டது.

துரைசாமி மெக்கானிஸ்ட் ஆகிவிட்டார். மோட்டார் சைக்கிளில் இப்படி முளைத்த மெக்கானிஸ ஆவல் இன்று அதில் நிபுணத்துவம் படைத்து விளங்கும் **ஜி. டி. நாயுடு**வை நமக்கு அளித்திருக்கின்றது.

தோட்டக்காடுகளில் திரிந்து இளைத்த அந்த நாட்களிலே தமிழைத் தாமே படித்துக்கொண்ட துரைசாமி பழைய இலக்கியங்களிலும் கூட நல்ல பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். அளவற்ற ஆற்றல் ஊறிக் கொண்டிருந்த இளம் உள்ளத்தில் எதிர்ப்பட்ட வியப்புக்களெல்லாம் ஆராய்ச்சிக்கும் அது பற்றிய அறிவுக்கும் பாத்திரமாகிவிட்டன. வெறுங்கதைகளையும் நாவல்களையும் அவர் விரும்பியதே இல்லை.

துரைசாமி வளர்ந்து இல்லறப் பிணைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனல் தாலிகட்டும் சமயத்தில் மாப்பிள்ளையைக் காணேம். தோட்டத்துக் குடிசையில் தனி மூலையில் ஆளைக் கண்டுபிடித்தார்கள். அர்த்தம் தெரியாமல் எதையோ முணுமுணுக்கும் அந்தப் புரோகிதர் எழுந்து போனல்தான் மணவறைக்கு வரமுடியுமென்று பிடிவாதம் செய்துவிட்டார் மணமகன். கடைசியில் மந்திரமும், புரோகிதர் தலையீடுமின்றி மணமகளின் கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டினர் தாமே சிந்தித்துத்

தமக்குப் புலனாகும் முடிவுகளை மட்டும் ஏற்றுச் செயல் புரியும் அந்த இளம் சிந்தனையாளர்.

**வாணிபம் :**

அளப்பரும் விஞ்ஞான ஆற்றல் ஊறிக்கொண்டிருந்த இளம் உள்ளத்தில் சாதாரண மெக்கானிஸ ஞானம் மட்டும் ஆவலைத் தணித்துவிட இயலுமோ? இடையில் பொருளீட்டும் முயற்சி தலைதூக்கலாயிற்று.

கோவை மாவட்டத்திலே வியாபாரத்துக்கு முதல் கவர்ச்சி, சாதாரணமாகவே பஞ்சு வியாபாரந்தான். அவரும் அதில்தான் ஆரம்பித்தார். வாணிபத் தந்திரங்கள் மிக்கவும் நிறைந்த வியாபாரம் அது. சில நூறு ரூபாய்களை வைத்துக்கொண்டு பஞ்சு வாங்கி விற்க ஆரம்பித்தார். ஒரு நொடியில் முதல் காணமல் போய்விடும். மறுபடியும் கடன் வாங்கிப் போடுவார். கொஞ்சம் லாபம் வருவதுபோல் இருக்கும். கடைசி முடிவு நஷ்டந்தான். என்றாலும் ஒரு கை பார்க்காமல் விடுவதில்லை யென்ற பிடிவாதம் மாத்திரம் குறையவில்லை. இதிலெல்லாம் அதிர்ஷ்டம் வேண்டுமென்று அனுபவசாலிகள் சொல்லுவார்கள். அந்த அதிர்ஷ்டம் என்பது கருப்பா சிவப்பா என்பதைப் பார்த்துவிட வேண்டும் என்று துடித்தார். எனவே, துரதிர்ஷ்டங்களைக் கண்டு அஞ்சாமல் எதிர்க்கும் துணிவு அவரிடம் பிறந்தது.

எதையும் அலட்சியமாக ஒதுக்காமலும் எதையும் மகத்தானதென்று அஞ்சி வெறுக்காமலும் வியாபாரத் துறையில் முழு மனத்துடன் துரைசாமி உழைத்து வரலானார். சிங்கநல்லூரில் பஞ்சு அரைக்கும் தொழிற்சாலையொன்றில் சில காலம் வேலைக்கு இருந்தார். சோறு இலவசம்; அத்துடன் மாதம் பன்னிரண்டு

ரூபாய் சம்பளமும் கொடுத்தார்கள். ஆனால், சொந்தமாகத் தொழில் செய்ய வேண்டு மென்ற ஆவலில் அதைவிட்டும் விலகிவிட்டார் துரைசாமி.

திருப்பூரில் சொந்தத்தில் ஒரு பஞ்சரைக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப் பணம் சேகரிக்கத் தொடங்கினார். சுமார் பதினேழாயிரம் ரூபாய்கள் முதலீட்டில் தொடங்கிய இந்த வியாபாரம் முதல் உலகப் பெரும் போர் நடை பெற்ற அந்தக் காலத்துப் பொருளாதார வர்த்தகச் சூழ்நிலையின் விளைவாக ஒரு லட்சத்து ஐம்பதினாயிர ரூபாயாக உருவெடுத்தது. இதுதான் வர்த்தகத் துறையில் அவர் விரைந்து கண்டெடுத்த முதல் வெற்றி.

## மோட்டார் மன்னன் :

கோவையில் இப்போது நாயுடு ஒரு பிரமுகர். பொதுநலச் சேவையிலும் இவருடைய கவனம் திரும்பியதன் காரணமாக, நாட்டின் பல்வேறு இடங்களில் தொலை தூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்கெல்லாம் இவர் சென்று வர ஆரம்பித்தார்.

பல இடங்களுக்கும் சுற்றித் திரிந்ததனாலோ அல்லது அனுபவத்தின் மிகுதியாலோ கோவை நகரம் இப்போதெல்லாம் மிகச் சிறிய இடமாக அவருக்குக் காணப்பட்டது போலும். தமது வாணிபத் துறை முயற்சிகளுக்குப் பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் நல்ல பயன் கிடைக்குமென்ற எண்ணமும் நம்பிக்கையும் அவருக்கு ஏற்பட்டது. இது வடக்கேயிருந்து பஞ்சு வியாபாரிகள் கோவைப் பக்கங்களில் வந்திருந்து ஏராளமான பணத்தை வாரியிறைத்துப் பஞ்சு வியாபாரம் செய்வதைக் கண்டதனால் ஏற்பட்ட எதிரொலியாக ஏற்பட்டிருக்கலாம். நினைத்த திட்டத்தை நிறைவேற்றும் அவ

ருடைய ஊக்கம் பம்பாய்க்கு அவரைத் தள்ளிக்கொண்டு போய்ச் சேர்த்தது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல் பம்பாய் நகர வாசமும் முகமறியாத புது மனிதர் களிடையே தொடங்கிய வர்த்தகமும், அவர் சம்பா தித்து வைத்திருந்த ஒன்றரை லட்ச ரூபாயையும் விழுங்கி ஏப்பமிட்டு விட்டதுதான் கண்ட பலன். கையில் காலணா இல்லாமல் திரும்பி வந்த நாயுடுவுக்குக் கோவையிலேயே மீண்டும் எங்காவது வேலைக்கமர்ந்து கொண்டால் போதும் என்று தோன்றியிருக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் வர்த்தகம் தொடங்கச் செப்புக் காசு கூட முதல் கண்டுபிடிக்க முடியுமென்று தோன்ற வில்லை.

வர்த்தகத் துறையில் ஏற்பட்ட பொருளாதார லாப நஷ்டங்கள் எப்படியிருப்பினும் அவருடைய நாணய மும் ஒழுங்கும் உயர்ந்து அந்தத் துறையில் அவருக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுக்க தவறவில்லை. ஒன்றரை லட்ச ரூபாய்வரை சம்பாதித்து அதைப் போக் கடித்து விட்ட பிறகும் அவரிடம் எஞ்சியிருந்தது இந்த கீர்த்தி ஒன்றுதான். வயதான தந்தையார் குமாரன் தமது அருகில் இருக்க வேண்டுமென்று விரும் பினர். ஆயினும் துரைசாமி அங்குச் செல்ல இயல வில்லை.

சர் ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற பிரபல வியாபாரி, ஒரு அந்நிய நாட்டார். கோவையில் அச்சமயம் வர்த்தகம் புரிந்து வந்தார். ரப்பர், காப்பி, தேயிலைத் தோட்டங்கள், பெரிய மில் ஒன்று. இவற்றுடன் மோட்டார்த் துறையி லும் ஈடுபட்டிருந்தார் அவர். அவரிடம் சென்று மோட் டார் மெகானிஸ்டாகத் தம்மை வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார் துரைசாமி. அவ ரைப்பற்றி ஓரளவு அறிந்திருந்த ஸ்டேன்ஸ் துரை

விசால நோக்கம் படைத்தவர். அவர் துரைசாமியைத் தம்மிடம் வேலைக்கமர்த்திக்கொள்ள விரும்பவில்லை. ஆற்றல்மிக்க இளைஞர் இப்படி சோர்ந்து விடுவதை அவர் ஏற்றுக்கொள்ளாமல், இந்தத் தடவை பஞ்சு வியாபாரத்தை விட்டுவிட்டு வேறு துறையொன்றில் முழுமனத்துடன் ஈடுபட்டால் வெற்றியடையாலா மென்று ஆலோசனை கூறி துரைசாமியை உற்சாகப்படுத் தினர்.

ஸ்டேன்ஸ் துரை வெறும் வாய்ப் பேச்சுடன் துரை சாமியை விடைகொடுத்தனுப்பிவிட வில்லை. நாலாயிர ரூபாய் பணமும் கடனுகைக் கொடுத்து அதைக்கொண்டு, துரைசாமிக்குப் பிடித்தமான தொழிலாக மோட்டார் ஒன்றை வாங்கிப் பிரயாணிகளின் போக்குவரத்துக்கு நடத்தும்படி ஆலோசனை கூறினர். மேற்கொண்டு நாலாயிரம் எப்படியோ கடன் வாங்கிப் போட்டு புதுத் துறையில் இறங்க முயற்சித்துக் கொண்டிருந்தார். "கைமுதலை, ஒரு பாதி தொழிலில் ஈடுபடுத்தி மறு பாதியை அவசர வசதிகளுக்காக இருப்பு வைத்துக் கொள்வது எந்தத் தொழிலிலும் அடிப்படையான கொள்கையாக இருக்க வேண்டும்" என்ற உபதேசமும் துரைசாமிக்குக் கிடைத்தது. இந்தப் பொருளாதார தத் துவத்தை துரைசாமிக்கு உபதேசித்த பெரியவர் காலம் சென்ற திவான்பகதூர் சோமசுந்தரம் செட்டியார்.

இந்த உபதேசமும் ஸ்டேன்ஸ் துரையின் உதவி யும் துரைசாமியின் உற்சாகத்திற்கு உறுதுணையாக இருந்தன. 1920-ம் ஆண்டில் முதன் முதலாக மோட் டார் போக்குவரத்துத் துறையில் இறங்கினர் துரைசாமி என்னும் நமது ஜி. டி. நாயுடு.

விரைவில் பொள்ளாச்சிக்கும் பழனிக்குமிடையில் நாயுடுவின் முதல் மோட்டார் வண்டி பிரயாணிகளின் போக்குவரத்துக்கு ஓடிக்கொண்டிருந்தது. சுமார் நாற்பது மைல் தூரத்தையும் துரைசாமியே அமர்ந்து ஓட்டிக் கொண்டிருந்தார்.

சாதாரண பஸ் டிரைவராக இப்படி ஆரம்பித்த நாயுடுவின் புது வாழ்வு, இன்று இந்தியாவிலேயே மிகப் பெரும் அளவில் கணக்கற்ற மோட்டார் வண்டிகளை ஸ்தாபன ரீதியாகப் புது விஞ்ஞான முறைகளில் வைத்து நடத்திய மோட்டார் மன்னன் என்ற கீர்த்திக்கு அவரை உயர்த்தியது. இந்தியாவின் மோட்டார்த் துறையில் பேரறிஞர் என்று அவரை அன்னிய நாட்டாரும் கூட இன்று உணர்ந்து மதிக்கிறார்கள்.

**கூட்டுறவாளர்:**

" இருவர் ஒரு தொழிலில் இரண்டுநாள் ஒத்திருந்த
சரிதம் அரிது நம் தாய் நாட்டில்.................."

என்று புதுயுகக் கவிஞர் பாரதிதாஸன் இரக்கப்படுகிறார். இந்த நாட்டு மக்களின் வாணிபத் தொழிற்றுறைகளில் நிலவிவரும் ஒற்றுமையின்மையைக் கண்டு.

கூட்டுறவு முறையில் பலபேர் சேர்ந்து சிறு துளியாகப் பெரும் மூலதனம் சேர்த்துப் பண்டகசாலைகள். தொழிற்சாலைகள், விவசாயம் போன்ற தொழில்களை நடத்துவது ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

விலைவாசிகள், உற்பத்தி, விநியோகம் ஆகியவை கால நிலைக்கு ஏற்பவும் சர்வதேசச் சூழ்நிலைகளுக்கேற்பவும் மாறுபடும்போது தனிப்பட்ட எவரும் பாதிக்கப் படாமல் இருக்கவும், தனி எவரும் கொள்ளை லாபம்

சேர்த்துக் கொழுக்காமல் இருக்கவும் கூட்டுறவு முறை மிகச் சிறந்ததென்று பொருளாதார தத்துவம் கூறுகிறது.

ஆனால் இன்று நம் நாட்டில் நடைபெறும் லிமிடெட் கம்பெனிகளும், சில கூட்டாளிகளின் பொது நிர்வாகத்திலும் உடமையிலும் இயங்கும் ஸ்தாபனங்களும் இந்தத் தத்துவத்தை மெய்ப்பிப்பதாக இல்லை.

இத்தகைய ஸ்தாபனங்களில் நிர்வாகத்திலிருப்போர் சிறிய பங்குதாரர்களுக்கு ஏதோ கொஞ்சம் லாபத்தையோ பெரியநஷ்டத்தையோ கணக்குக் காட்டிவிட்டு இலாபம் முழுவதையும் ஏப்பமிட்டுவிடும் புலிகளாகவே பெரும்பாலும் காணப்படுகிறார்கள். ஒரு கம்பெனியை ஆரம்பிக்கும்போதே நிர்வாக ஊதியமென்று திட்டமான மாதாந்திர வருமானமும், வருடவாரி லாபத்தில் கமிஷன் பெரும் பகுதியுமாக இப்படி ஒரு சிலர் தங்கள் சொந்த பணப்பையை வீங்கச் செய்து கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது கண்கூடு.

இந்த நிலை வளர்ந்து வருவதின் காரணமாக, மிகச் சிறந்து விளங்க வேண்டிய கூட்டுத் தொழில் முறை இன்று நம் நாட்டில் சூதுவாதுகள் நிறைந்ததாக மாறி விட்டிருக்கிறது!

திறமை மட்டும் படைத்த தொழிலாளிக்குப் போதிய முதலும், முதல் படைத்த பணக்காரனுக்கு ஏற்ற தொழிலும், தொழில் தேர்ச்சி பெற்ற நிர்வாகியும் கிடைப்பதில்லை. தொழில் திறமை பயனற்று கிடக்கிறது. முதலும் துருப்பிடித்துக் கிடக்கிறது. இரண்டையும் ஒன்றாக இணைத்து அனைவரும் வெற்றி காணக் கூடிய தொழில்முறை கூட்டுத் தொழில்தான்.

இந்த உண்மையையும் நாட்டு நிலையையும் அறிந்த நாயுடு, மோட்டார் போக்குவரத்துத் துறையில், கோவை ஜில்லாவில் சிதறிக் கிடந்த பல கம்பெனிகளை ஒன்ருக்கி பெரிய ஸ்தாபனமாக செய்து தாமே அவற்றின் நிர்வாகப் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடத்திக் காட்டியதுடன் கூட்டுறவு முறையின் மேன்மையை உணரும்படி செய்தார். பின்னுல் அவர் அடைந்த சில கசப்பான அனுபவங்களால் அவர் இந்தப் பொறுப்புக் களிலிருந்து தம்மை மீட்டுக் கொண்டுவிட்ட போதிலும் அவர் காட்டிய கூட்டுறவுத் தொழில் நேர்மை இன்னும் அனைவராலும் போற்றப் படுவதற்குரியதாயிலங்கு கின்றது.

1920-ம் ஆண்டில் ஒற்றை பஸ்ஸுடன் புதுத் துறையில் ஊன்றிய சிந்தையையும் ஓங்கிய உழைப்பையும் ஈடுபடுத்திய நாயுடு அத்துடன் மோட்டார் சம்பந்தமான நுண்ணிய பாகங்களை பழுதுபார்த்தல், திருத்தியமைத்தல்போன்ற வேலைகளைச் செய்வதற்கென்ற உலைக்கூடம் ஒன்றையும் ரூ. 4000-ம் மூலதனத்தில் ஆரம்பித்து வாடகை இடத்தில் வைத்து நடத்தி அதிலும் தேர்ச்சி பெற்றனர். ஒரு மோட்டார் போக்குவரத்து வெற்றிகரமாக நடைபெறுவதற்கான வழி துறைகளை அனுபவப் பூர்வமாக உணர இது அவருக்கு இடமளித்தது.

கிடைக்கும் வருமானத்தையெல்லாம் முதலீடாக்கிக்கொண்டு மேலும் மேலும் உழைத்ததன் விளைவாக ஆண்டுதோறும் உயர்வடைந்து வந்தார். ஒருவர் ஒரு தொழிலில் வெற்றியடைந்தால் மற்றவரும் அதே துறையில் இறங்கிப் போட்டியிட ஆரம்பிப்பதேயன்றி புது முயற்சிகளில் இறங்குவது நம்மவர் வழக்கம் இல்லையல்லவா? கீரைக் கடைக்கும் எதிர்க் கடை ஒன்று போடாவிட்டால் தூக்கம் வராது சிலருக்கு. இத்தகை

யோர் நாயுடுவின் மோட்டார் தொழில் வெற்றியைக் கண்டு வாளாவிருத்தல் இயலுமா? பல மோட்டார் போக்குவரத்துக் கம்பெனிகள் உடனே தோன்றிப் போட்டியிடலாயின. நாயுடு தேனீ போல் உழைத்துச் சிறு மூலதனம் படைத்துத் தொழில் புரிந்திருக்க, ஏனை யோர் துருப்பிடித்துக்கிடந்த செல்வத்தைத் தொகை தொகையாய்க் கொண்டுவந்து கொட்டி எதிர்க்கடை போட்டார்கள். போட்டியைக் கண்டு அஞ்சாது கர்ம யோகத்தில் நிலை நின்றார் நாயுடு.

நாயுடுவின் உழைப்பும் குறிக்கோளும் திறமையான மோட்டார்ப் போக்குவரத்து நடத்துவதும், இயன்றவரை வசதிகளைக் கூட்டிப் பிரயாணத்தை இனிமையாகவும் செலவு சிக்கனமாகவும் ஆக்குவதும் ஆகிய கலைப்பயனே யாகும். ஆனால் ஏனையோர் இத்துறையில் கிடைக்கும் லாபத்தை மட்டுமே கவனத்தில் இருத்தியிருப்பவர். எனவே, பொதுமக்களின் நம்பிக்கை, அன்பு, மதிப்பு, ஆதரவு இவை நாயுடுவின் செல்வங்களாயின. **யுனைடெட் மோட்டார் சர்வீஸ்** என்ற பெயருடன் தம் ஸ்தாபனத்தை நிலைநிறுத்த இந்தச் செல்வமே அடிப் படையாக இருந்தது. விரைவில் தம் தொழிற்சாலையை வாடகை இடத்திலிருந்து விஸ்தாரமான கட்டிடத் திற்கு மாற்றி வைத்துக்கொள்ளவும் வசதி ஏற்பட்டது. இன்று கோவை நகரத்தின் நடுப்பகுதியில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்களுக்குமேல் மதிப்பிடக்கூடிய யந்திர வசதிகளுடன் கூடிய நாகரீகமான தொழிற்சாலை யாக இலங்குவது **யு. எம். எஸ்.** தொழிற்சாலை ஆகும்.

போட்டியைத் தவிர்த்து அனைத்தையும் வலுவான ஒரே ஸ்தாபனமாக்கிப் பயனடையச் செய்வதுடன் போக்குவரத்துக்கு மோட்டார் பஸ்களை வைத்து

நடத்துவதை ஓர் உன்னதமான கலையாகப் புரிய வேண்டுமென்ற அவருடைய இடைவிடாத முயற்சி பலனளிக்காமற் போகவில்லை.

போட்டியிட்டவர் பலர் பெரும் நஷ்டத்திற்குள்ளாகிச் சோர்வடைந்த காலங்களிலெல்லாம் அவர்களை அணுகித் தம்முடன் சேரும்படி அவர் கேட்டுக்கொள்ளத் தவறியதில்லை. இப்படிப் பனிரெண்டு கம்பெனிகளாகச் சிதறிக் கிடந்தவற்றை 1930-ல் ஒரே கூட்டாக இணைத்து, முதலாளிகள் அனைவருடைய விருப்பப்படி முழு நிர்வாகப் பொறுப்பையும் நாயுடு அவர்களே ஏற்றுக்கொண்டார். இப்போது கோவையிலிருந்து பல்வேறு திசைகளிலும் புறப்பட்டுச் சென்று திரும்பும் இருநூறு பஸ்கள் ஒரு யூனியனுகை இணைந்துள்ளன; நாளொன்றுக்கு ஐந்நூறு தடவைகள் போக்குவரத்து நடைபெறுகின்றன; சுமார் பதினைந்தாயிரம் பிரயாணிகள் ஆயிரத்தைந்நூறு மைல் தூரம் மொத்த நடமாட்டத்திற்கு வசதி பெற்றனர். கோவை, நீலகிரி, மலபார், மதுரை, கொச்சி ஆகிய பிரதேசங்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் யோக்குவரத்து வசதிகளைப்பெற்றுள்ளன. சுமார் ஆயிரம் பேர் வேலை செய்து மாதம்தோறும் பதினேழாயிரம் ரூபாய்வரை ஊதியம் பெறுவது சாத்தியமாயிற்று. பத்து லட்சம் ரூபாய்வரை முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றின் மூலம் அரசாங்கம் பலவகை வரிகளாகப் பெறும் தொகை ஆண்டுதோறும் சுமார் ஐந்து லட்சங்களுக்கு மேலாகும்.

பல்லடம் என்னும் இடத்தில் மிகப் பெரிய பஸ் ஜங்ஷன் (சந்திப்பு) இந்தியாவில் எங்கும் காணுத அற்புதமான அமைப்புடன் விளங்குவது ஆகும். அதைக் கட்டுவதற்கு ஒரு லட்சத்திற்கு மேல் செலவிடப்பட்டி

ருக்கிறது. பிரயாணிகள் தங்கவும், உணவு கொள்ள வும், பிரயாணச் சீட்டு வாங்கவும், வண்டிகள் வந்து நிற் கவும், பழுதுபார்த்துப் புறப்படவும் மிகச் சிறந்த ஏற் பாடுகள் செய்யப்பெற்றுள்ளன. புத்தகசாலைகள், கடை கண்ணிகள் யாவும் உண்டு. தொலை தூரத்திலிருந்தும் இருப்புப் பாதையுடன் போக்குவரத்து இணைப்புக்கான ஏற்பாடுகளும் இருப்பதனால் பிரயாணிகள் தாம் விரும் பும் எப்பகுதிக்குச் செல்லவும் பிரயாணச் சீட்டுப் பெற வசதியிருக்கிறது. சொந்த மின்சார உற்பத்தி விநியோ கத்தையும் பெற்று இருக்கிறது. சென்னை அரசாங்கக் காரியதரிசியாக இருந்த **ஜி. டி. போக் துரை** இச் சந் திப்பைத் திறந்து வைத்தார்.

# 2. உலக யாத்திரை

பள்ளியில் பயிலாத நாயுடு மேல் நாடுகளுக்கெல்லாம் சென்று அருமையான ஆங்கில மொழியறிவுடன் யந்திர நுட்பங்களைப் பற்றிய அருங்கலை ஞானமும் கைவரப் பெற்று விளங்குவது விந்தையினும் விந்தையன்றோ? அவர் அது பற்றிக் கூறுவதாவது.

"பழக்கத்தின் காரணமாக ஆங்கிலம் எனக்கு அருமையான கருவியாக அமைந்துவிட்டது. நான் வெளி நாடுகளில் சென்று பழக ஒரு வாய்ப்பு ஏற்பட்டபோது பிறர் பேசுவதை நன்கு புரிந்துகொள்ளவும் சிறிது சிரமப்பட்டு ஆங்கிலத்தில் எண்ணங்களைக் குறிப்பால் உணர்த்தவும் எனக்குத் திறன் ஏற்பட்டிருந்தது. ஆனால், உலகம் சுற்றித் திரிந்ததன் விளைவாக அந்த அன்னிய மொழி என் ஆட்சிக்கு உட்பட்டுவிட்டது."

மேதைகளே இப்படித்தான். அவர்களுக்குப் பள்ளிப்படிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததன்று. புத்தியே போதகனாகவும் எதிரே விரிந்து கிடக்கும் இப்பூவுலகமே புத்தகமாகவும் விளங்குகின்றன; இதற்கு நாயுடு அவர்கள் வாழ்க்கை வரலாறு ஓர் அத்தாட்சியாக விளங்குகின்றது. முதன்முதலில் அவர் வெளிநாட்டு யாத்திரையை மேற்கொண்ட நிகழ்ச்சி மிகவும் சுவை மிகுந்தது ஆகும். அவர் வாயிலாகவே அதைக் கேட்போம்.

"1929-ல் ஜெர்மானிய வர்த்தகர் ஒருவர் கோவைக்குத் தம்பதி சகிதமாக வந்திருந்தார். அவர் ஒரு ரப்பர் வியாபாரி. இந்தியா முழுமையும் சுற்றிக்கொண்டு அவர்கள் கோவைக்கு வந்தபோது உடல் நலம் மிகவும் கெட்டுப்

போய்விட்டது. டிராவலர்ஸ் பங்களாவில் தங்கியிருக்க இடமில்லாது போய்விடவே, எங்களுடைய யுனைடெட் மோட்டார் கம்பெனியில் பிரயாணிகள் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருக்கும் அறையில் அவர்கள் இரவைக் கழித்தார்கள். இதையறிந்த நான் அவர்களுக்கு இயன்ற வசதிகள் செய்துகொடுக்க ஏற்பாடு செய்தேன். மிகவும் மகிழ்ச்சியுற்ற அவர்கள் ஒரு தடவை தங்கள் தாய்நாட்டுக்கு வந்து தங்கள் விருந்தினராகத் தங்கியிருக்கும்படி அன்புடன் என்னை அழைத்துவிட்டுப் போனார்கள். மரியாதைக்காகச் சம்பிரதாயமாக அழைத்தார்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அவர்கள் ஜெர்மனிக்குச் சென்ற பிறகு ஒவ்வொரு வருடமும் கிருஸ்துமஸ் வாழ்த்துக்களுடன் ஜெர்மனிக்கு வருமாறு அழைப்பும் அனுப்பிக்கொண்டேயிருந்தது எனக்கும் ஒரு தூண்டுதலாக இருந்தது. அதனால், 1932-ல் ஐரோப்பா செல்வதாகத் தீர்மானித்துப் புறப்பட்டும் விட்டேன்.

"கொழும்பிலிருந்து புறப்பட்ட பிரெஞ்சுக் கப்பலில் என்னுடைய முதல் ஐரோப்பிய யாத்திரை தொடங்கியது. இந்த யாத்திரையை ஓர் அரிய யாத்திரை என்றே சொல்ல வேண்டும். என்னுடன் இரண்டு நண்பர்களும் யாத்திரை புறப்பட்டார்கள். நாங்கள் புறப்பட்ட ஐந்தாம் நாள் எங்கள் கப்பல் நடுக்கடலில் மின் வேகத்தில் தீப்பிடித்துக்கொண்டது. எப்படியிருக்கும் நிலைமை! என்ன செய்வதென்று தெரியவில்லை. பிரயாணிகள் நிலைகலங்கி உயிர் தப்ப முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். உடன் வந்த நண்பர்களைத்தேடி மூன்று மணி நேரம் திரிந்தேன். கப்பல் எரிந்துகொண்டிருந்தது. அவர்கள் லைப் போட் (**Life boat**) ஒன்றில் சுகமாகச் சென்று ஏறி விட்டதை அறிந்த பின் நானும்

உயிர் தப்ப எண்ணிக் கடலில் குதித்து ஒரு படகில் தொத்திக் கொண்டேன். ஆங்கில மாது ஒருத்தியையும், சைனுக்காரி ஒருத்தியையும் காப்பாற்ற வேண்டிய சுமையும் எனக்கு அப்பொழுது ஏற்பட்டுவிட்டது. ரஷ்ய எண்ணெய்க் கப்பல் ஒன்றின் உதவியால் நாங்கள் பிழைத்தோம். நான் மாஞ்செஸ்டரில் இருந்து இந்தியாவுக்கு ஒரு நண்பருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இச்சம்பவத்தைப்பற்றி விளக்கி கூறியிருக்கிறேன்.

தமக்கு வந்த கடிதங்கள் அனைத்தையும் அவற்றிற்கு அவ்வப்போது அளித்த விடைகளையும் நாயுடு அவர்கள் தொகுத்து வைத்திருக்கும் முறையே கலை அழகு பொருந்தியதாகும். சில முக்கியமான கடிதப் போக்குவரத்துக்களை அழகுற அச்சிட்டே வைத்திருக்கிறார். தம் சொந்த உபயோகத்திற்கென்றே கோபால் பாக்கில் நாயுடு அவர்கள் நடத்தும் அச்சுக்கூடம் ஒரு தினசரிப் பத்திரிகை நடத்துவதற்கும் அதிகமான சாதனங்களையுடையது. நாயுடு அவர்களின் வாழ்க்கை முழுவதும் நிறைந்த சுவையான அனுபவங்களுக்கோர் சரித்திர சான்று பகரும் இக்கடிதங்கள் ஒரு பெரிய சேம நிதியாகும். மேலே குறிப்பிட்ட கடிதத்தில் கப்பல் தீப்பிடித்த சம்பவம் பற்றிய வர்ணனையில் ஒரு பகுதியைக் கீழே காணுங்கள்.

ஜார்ஜஸ் பிலிப்பர் கப்பல் தீப்பிடித்த சம்பவத்திலிருந்து சர்வநாசத்தின் எல்லைக் கோட்டில் மனித மனோபாவத்தின் பல்வேறு சொரூபங்கள் எப்படி இருக்கும் என்பதை நான் அறிந்துகொண்டேன். சுகமாக வாழ்க்கை அமைப்பில் மனிதர்கள் தாய் தந்தை பிள்ளை பெண்டு என்ற உறவில் பாசத்தால் கட்டுண்டு பிணைந்து கிடக்கிறார்கள். என்பதையும், உயிருக்கு ஆபத்து வரும்

போது மரண வாசலில் ஒவ்வொருவரும் தம் தம் உயிரைக் காப்பதில் அக்கரைகொண்டு மற்றவரைப்பற்றி முற்றிலும் மறந்தே விடுகின்ருர்கள் என்பதையும் நேருக்கு நேர் காண முடிந்தது. இத்தகைய பெருஞ் சோதனை நேரத்தில், ஏற்றத் தாழ்வுகள், சாதிப் பிரிவுகள், உறவு, நட்பு, தேசபக்தி, உயிர் இரக்கம் யாவும் பஞ்சாய்ப் பறந்துபோகக் கண்டேன்.''

ஒவ்வொருவர் வாழ்விலும் பல சம்பவங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனல், அச் சம்பவங்கள் ஓர் உள்ளத்தில் எப்படி எதிரொலிக்கின்றன என்பதை கவனிக்கும்போது அந்த உள்ளம் எத்தகைய உணர்ச்சிகளைப் பெறுகிறதென்பதைக் காணலாகும். நாயுடு அவர்கள் 'வாழ்வின் சம்பவங்கள் அனைத்தையும் அனுபவமாகக் கொண்டு அறிவில் ஓங்கி வளர்ந்திருக்கிருர் என்பதில் ஐயமில்லை.

மார்சேல்ஸ் நகரையடைந்த நாயுடு ஜெர்மானிய நண்பர்களைச் சந்திக்க விரும்பினர். அதற்காக ஹனேவர் என்னும் அவர்களுடைய வாச நகரம் சென்ருர். அங்கு அந்த நண்பர்கள் நாயுடுவின் வருகைக்குப் பெரிதும் மகிழ்ந்து தக்க வசதிகள் செய்தளித்தார்கள்; அங்கிருந்து பல ஐரோப்பிய நாடுகளுக்கும் அவர் யாத்திரை செய்தார். அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து அமெரிக்க நாடுகளுக்கும் அவர் செல்லத் தவறவில்லை. ஆனல், இந்த யாத்திரையின்போது ஒவ்வொரு நாட்டிலும் மோட்டார் உற்பத்தி, போக்குவரத்து ஏற்பாடுகள் முதலியவற்றைப்பற்றிய அனுபவங்களைத் தேடிப்பெறுவதே அவர் கொண்ட முதல் வேலையாக இருந்தது. 'சந்தடியும், ஜன நெருக்கமும் மிகுந்து போக்குவரத்தும் அதிகமாக இருக்கும் நகரங்களுக்குச் சென்று, ஆங்காங்

குள்ள தொழிற்சாலைகளையும், நிபுணர்களையும் சந்தித்துப் பேசுவதுடன் புதிய புதிய யந்திரக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கும் மேதைகளுடன் தம்மை அறிமுகம் செய்து கொண்டார்.

இந்தியாவைப் பற்றிய வியப்பும் நம்பிக்கையும் மிகுந்த மேல்நாட்டினரிடையே ஆங்காங்கு சிறு சிறு கூட்டங்களில் பேசுவதும், பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு விடை அளிப்பதுமே, நாயுடுவின் இனிமையான பொழுது போக்குகளாக அமைந்திருந்தன. இச் சம்பவங்கள் நாயுடு அவர்கள் ஆங்கிலத்தில் கலை நுணுக்கம் சம்பந்தமான சொற்பெருக்குகள் நிகழ்த்தும் அளவுக்குத் துணை புரிந்திருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கடல் வழியாக ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனு, இந்தோசீனு, மலாயா முதலிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு மீண்டும் இலங்கை வந்து சேர்ந்தார். இவ்விதமாக முதல் தடவை நடைபெற்ற உலக யாத்திரை சுமார் ஓராண்டு காலம் வரை நீடித்தது.

## புதிய மனிதர் :

ஊரை விட்டுச் சிலநாள் வெளியே இருந்துவிட்டுத் திரும்பினுலே சொந்த ஊரில் கொஞ்சம் மதிப்பு அதிகம் ஏற்படும், அதிலும் வெளிநாட்டுக்கே போய்விட்டு வந்தால் கேட்கவும் வேண்டுமா? சொல்லப் போனுல் வெளிநாட்டுக்குப் போய்த் திரும்பிய பிறகுதான் விவேகானந்தருக்குக் கூட இந்தியாவில் பெருமை உயர ஆரம்பித்தது என்று கூறுவர்.

நாயுடு அவர்கள் ஐரோப்பிய யாத்திரை முடித்துவிட்டுத் திரும்புகிருர் என்ற செய்தி இங்கே கொஞ்சம் பரபரப்பை உண்டாக்கியது. மேலும் தீப்பிடித்த கப்

பவில் ஆம்புலன்ஸ் சேவையுடன் தீரச்செயல் புரிந்து தப்பி வெள்ளைக்காரன் ஊரெல்லாம் சுற்றித் திரும்பிய நாயுடு வருகிறார் என்ற செய்தி தமிழ் நாடெங்கும் பரவியது.

கொழும்பிலிருக்கும் போதே அவரை வாழ்த்தியும் வரவேற்றும் சென்னையில் ஒரு பாராட்டு விருந்துக் கூட்டத்திற்கு அழைத்தும் தந்திகள் எதிர்கொண்டு சென்றன. இவ்விதமான ஆரவாரங்களெல்லாம் நாயுடுவுக்குத் துளிகூட பிடிக்கவில்லை.

எழும்பூரில் வரவேற்க நண்பர்கள் காத்திருக்கக் கூடுமென்பதைத் திட்டமாய் அறிந்த நாயுடு அதற்கு முந்திய ஸ்டேஷனிலே இறங்கி ஒரு நாள் தாமதித்தே சென்னை சேர்ந்தார். ஆயினும் ஆர்வமிக்க இளைஞர்கள் அங்கே காத்திருக்கக் கண்டபோது அவரே திகைத்துப் போயினர் முன்பின் பழகியிராத மாணவர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். அவர்களுடைய ஆர்வத்தையும் அறிவுத் தாகத்தையும் கண்ட நாயுடு, அவர்களில் எண்பதின்மருக்கு மாதம் பத்துப் பவுன் வீதம் உபகாரச் சம்பளம் உதவினார். ஆனால் அவருடைய கண்டிப்பான நிபந்தனை அங்கும் இருந்தது. இதன் பயனாக அந்த எண்பதின்மரும் தனித்தனியாக ஒவ்வொருவரும் மற்றவர் பெற்ற உதவியை அறியமுடியாதாராயினர். ஆடம்பரமின்றி அமைதியான உதவியை, அதைச் செய்வதனாலான ஆத்ம திருப்திக்காகவே அவர் புரிந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றதன்றோ? சுமக்க முடியாத புகழ் மாலைகளையும் பூமாலைகளையும் சுமந்து, தமக்குள் சிரித்துக்கொண்டார் நாயுடு. மறு நாள் கோவை வந்து சேர்ந்தார். இப்போது அவர் புதிய மனிதர்,

## அனுபவ ஞானம்

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது" என்பது பழமொழி. விரிந்து பரந்து கிடக்கின்ற இந்த உலகம் மிகவும் விந்தைகள் நிறைந்தது. நாகரிகத்தில் முன்னேறுகின்ற உலக நடையோடு ஒட்டிப் பயில ஒவ்வொரு மனிதனும் முயல வேண்டும்.

விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிருக்கின்ற நாட்கள் இவை இருந்த இடத்தில் இருந்தே உலக முழுவதையும் அறிந்து கொள்ளத்தக்க வாய்ப்பு நமக்கு அதிகம் இருக்கிறது. செய்தித் தாள்களும், வானொலியும் கணந்தோறும் உலகச் செய்திகளை நமக்கு உணர்த்திக் கொண்டேயிருக்கின்றன. பற்பல நாட்டு மக்கள் வாழ்வு, அரசாங்க அமைப்பு, எண்ணங்களின் சிறப்பு, கலைகளின் வெற்றி இவை போன்ற பல்துறை அறிவும் விஞ்ஞானத்தின் உதவியால் கிடைக்கும். என்றாலும் இருந்த இடத்தை விட்டு நகர்ந்து உலகம் முழுவதையும் சுற்றிப்பார்க்கும் வசதியும் வாய்ப்பும் பெற்றவர்கள் அடையும் அனுபவ ஞானம் மிகச் சிறந்ததாகும். செய்திகளைக் காதால் கேட்பதைவிடக் கண்ணால் காணுகின்ற காட்சி நமது உள்ளத்தில் மிக ஆழமாகப் பதியும்.

தனி மனிதர்கள் குடும்பமாகவும், பல குடும்பங்கள் வீடாகவும், பல இல்லங்கள் ஒரு தெருவாகவும், தெருக்கள் பல கூடி ஓர் ஊராகவும், ஊர்கள், நகரங்களின் கூட்டம் பெரிய நிலப்பரப்பை அளாவி நின்று ஒரு நாடாகவும் உருவாக்குகின்ற சமூக அமைப்பைப் பார்த்தால், மனிதன் தனது குறுகிய எல்லையை விட்டுப் பிரிந்து விரிந்த உலகமாக விரும்பும் முனைப்பையே நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

சீதோஷ்ண மாற்றங்களாலும், நடையுடை பாவனைகளாலும், மொழி வேற்றுமையினாலும் மக்கள் பற்பல

நாடுகளிலும் சிதறிக்கிடந்த போதிலும் பொதுவாக மனி தத்தன்மை என்பதொன்று உலகம் முழுவதிலுமுள்ள எல்லா மக்களையும் பிணைத்து நிற்கின்றது என்ற உண் மையை யாத்திரைகளில் உணர முடிவதைப்போல ஏட்டுக்கல்வியினுல் உணர முடியாது.

இயற்கையாக மண்ணில் கிடைக்கின்ற செல்வங் களைத் துய்க்கும்போது, மனிதன் தன் முயற்சியால் அவ் வின்பத்தைப் பெருக்கிக்கொள்ளும் வழிகளை அறி கிருன். இந்த அறிவின் வளர்ச்சியே நாகரிகம் எனப் படுவதாகும். நாகரிகம் நாட்டுக்கு நாடு மாறுபட்டுக் காணப்படுவதாகையால், பல நாடுகளையும் சுற்றிப் பார்த்து அறிந்துகொள்ளும் அனுபவ ஞானம் ஒவ் வொருவரும் பெற வேண்டுவது அவசியமாகும்.

கல்லூரிகளிலுங்கூட மாணவர் கூட்டமாகச் சேர்ந்து ஆசிரியர் தலைமையில் உல்லாச யாத்திரைகள் புரிவதுண்டு. செவியால் மட்டும் நுகரும் உண்மைகளைக் கண்ணுற்கண்டு, உடலால் உணர்ந்து தெளிய வேண்டு மென்ற உயரிய நோக்கமே இத்தகைய பிரயாணங்கள் அடிப்படையில் கொண்டுள்ளன.

நமது நாயுடு அவர்கள் ஒருதடவை உலக யாத் திரை புரிந்து திரும்பிய பின்னர் மீண்டும் வெளிநாடு களுக்குச் செல்ல வேண்டுமென்று விரும்பிஞரென்ருல் உலகம் சுற்றிப் பார்ப்பதன் பயனை அவர் நன்கு அறிந் திருக்கிருர் என்பது பொருளாகுமல்லவா? உலகப் பிரயாணங்கள் என்ற அளவில் அவர் இதுவரை நான்கு முறைகள் அவற்றை மேற்கொண்டிருக்கிருர். ஒவ்வோர் முறையும் உழைப்புக்கேற்ற உயரிய பயனைப் பெற்ற தாகவே அவர் உணர்கின்ருர்.

## யாத்திரையில் நாயுடு :

உலகில் சுற்றித் திரிந்த சூழ்நிலைகளிலும் வெவ்வேறு பிரதேசங்களிலும் அடைந்த அனுபவ ஞானம் பெரிய பொக்கிஷமாகி வாழ்வில் பெரும்பயன் விளைவிக்குமென்ற தத்துவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்குகின்ருர் நாயுடு; எனவே மறுமுறையும் வெளிநாட்டு யாத்திரை புரிய அவர் விழைந்ததில் வியப்பில்லை. ஆனல் இந்தத் தடவை தேச தேசங்களையெல்லாம் சென்று பார்க்க வேண்மென்ற காட்சி இன்பம் மட்டும் அவருடைய நோக்கமாக இருக்கவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் போக்குவரத்து ஏற்பாடுகளும் மோட்டார் யந்திரத் தொழிலும் வளர்ச்சியுற்று வரும் உண்மை நிலையை உய்த்துணர்ந்து பயில வேண்டுமென்ற துடிப்பே இரண்டாவது பிரயாணத்திற்கு காரணமாயிருந்தது.

ஒவ்வொரு தொழிற்சாலையையும் அவர் நேரே சென்று ஆராய்ச்சி புரியத் தவறவில்லை. இங்கிலாந்து முழுவதும் உள்ள கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் நாயுடுவை ஆவலுடன் வரவேற்று மகிழ்ந்தன. இந்தப் பிரயாணம் தொடர்ந்து பல மாதங்கள் நடைபெற்றது. நாயுடு அவர்கள் பிரயாணத்தாகம் மிகுந்தவர். இப்போதுங்கூட நிறையப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு நாட்கணக்கில் ரயில் வண்டியிலேயே வாசம் செய்வதுண்டு. நீங்கள் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். கோவையிலிருந்து சென்னை வரையிலும் போய் அடுத்த வண்டியில் கோவைக்கு திரும்பி, மறுபடியும் சென்னை-மீண்டும் கோவை; இப்படி பிரயாணம் தொடர்ந்து செய்வார். இத்தனையும் ரயில்வே ஸ்டேஷனுடன் சரி-பிளாட்பாரத்தைவிட்டு வெளியே ஜாகை வைத்துக்கொண்டு

இளைப்பாறுவதுகூட இல்லை. இத்தனை நாட்கள் என்று பிரயாணப் படிப்பைத் திட்டமிட்டு முடிப்பதுண்டு. இது வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

வெளி நாடுகளில் சுற்றித் திரியும்போது முன் கூட்டித் திட்டமிட்டுக்கொண்டு ஆங்காங்குச் செல்வார். சென்ற இடங்களில் அறிவுக்கோ வியப்புக்கோ, செய்திக்கோ பாத்திரமான சிறு சிறு விவரத்தைகூட நினைவில் பதித்துக்கொள்வார். இந்தியர்களிலேயே அவரைப் போன்று அவ்வளவு விரிவான வெளிநாட்டுப் பிரயாணமும், அனுபவமும் படைத்தவர்கள் யாராவது இருப்பார்களாவென்பது ஐயுறத் தக்கதுதான். இப்போதும் அவரிடம் பேசிப் பார்த்தால் மிக மிகச் சிறிய, ஆனால் குறிப்பான விவரங்கள், தெருக்கள், சந்திகள், கடை கண்ணிகள், தொழிற்சாலைகள், பிரபலஸ்தர்கள் பற்றிய செய்திகளை அவர் வர்ணிக்க கேட்கலாம். கூரிய பார்வையும், ஆழ்ந்த சிந்தனையும், நல்ல ஞாபகசக்தியும், அவருடைய மூல பலங்கள். மற்றொரு விஷயம், அவருடைய ஒரே ஒரு நண்பன் அவர் கையிலிருக்கும் புகைப்பட கருவி-காமிராதான் அவர் கவனத்திற்குப் பாத்திரமாகும் ஒவ்வொரு சிறு விஷயத்தையுங்கூட உடனுக்குடன் அது பதிவு செய்துகொள்ளும்.

வேறு நாட்டிலும் இங்கும் மாந்தரின் வாழ்க்கைத் துறையில் பல்வேறு நிலைகளையும் பொறுப்புகளையும் பற்றி அவர் செய்திருக்கும் ஆராய்ச்சிகள் விரிந்த மனோதத்துவ விளக்க நூல் ஒன்று தயாரிப்பதற்குப் போதியவையாகும். மனோதத்துவ சம்பந்தமான தம் அனுபவ குறிப்புக்களை நூற்றுக்கணக்கான புகைப்படங்கள் – பைல்கள் – ஆல்பங்கள் இவற்றில் நிறைத்து வைத்திருக்கிறார்.

## சமூக ஒழுக்கம் :

சமூக நேர்மைகளைப்பற்றி நாயுடு அவர்களின் வெளி நாட்டு அனுபவம் இந்திய மண்ணில் காணமுடியா தென்று சொல்வதில், வெட்கப்பட இடமிருந்தாலும் உண்மை என்பதை மறுக்க முடிவதில்லை.

இந்த உலகில் தனி மனிதனை யாரும் வாழ்ந்துவிட முடியாது. ஒவ்வொருவனும் யாதாமொரு வழியில் பிறருக்குப் பயன்படுவதும், பிறரால் தான் நன்மை யடைவதுமாகிய அடிப்படையில்தான் சமூகம் என்ற அமைப்பே உருவாகியிருக்கிறது. மக்கள் ஒருவரை ஒரு வர் நம்பி மதித்துக் கூடி வாழ்கின்ற சமூக உணர்ச்சி மேலை நாடுகளில் ஒரு கலையாகப் பயிலப்பட்டு வருவ தாகும்.

தமது உலக யாத்திரைகளில் நாயுடு அவர்கள் இந்த அரிய சமூக ஒழுக்கம் ஒன்றையே பெரிதும் கண்டு வியந்து போற்றுகிறார்.

லண்டன் மாநகரில் மிகப் பெரிய கடைகளிலும், உணவு விடுதிகளிலும், மக்கள் தேவையான பொருளைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு உரிய தொகையை உண்டிய லில் அவரவரே சேர்த்துவிட்டுச் செல்லலாமென்றும், யாரேனும் களவாடிக்கொண்டு போவதாயினும் கண் காணிக்க யாரும் இல்லையென்றும் நாமறியும்போது எவ் வளவு வியப்பாக இருக்கிறது. மக்களிடையில் சமூக ஒழுக்கத்தை வளர்ப்பதற்குப் பரஸ்பர நம்பிக்கை ஒன்றே அடிப்படை என்பதையே இந்த அதிசயச் செய்தி நமக்கு அறிவுறுத்துகிறது.

சமூகச் சட்டதிட்டங்களும் கட்டுக்காவலும் குறிப்பிட்ட சமூகத்தின் ஒழுக்க உயர்வை நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும். மக்கள் அனைவரையும் திருடர்களென்றோ மோசடிக்காரர்களென்றோ கருதுவது போல ஒரு சமூகத்தின் நடைமுறைப் பழக்க வழக்கங்கள் அமைந்துவிடுமாயின் சட்டத்தின் முன்னிலையில் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகுமல்லவா ?

ஊர்க்காவல் செய்யும் தாணைக்காரர்களும், பாதைச் சந்திப்புகளில் நின்று வெயில் மழை இரவு பகல் என்று பாராது போக்குவரத்தைச் செப்பனிடுகின்ற ஊழியர்களும் நம்முடைய நாட்டிலும் இருக்கிறார்கள். அரசாங்கம் என்பது மக்களின் நன்மைக்காகவே நடைபெறுகிறதென்றும், அதன் ஊழியர்கள் மக்களின் நலன் ஒன்றையே மேற்கொண்டு தொண்டுபுரிதல் வேண்டுமென்றும் உணர்ந்து, அதன்படி நடந்துகொள்ளும் அருமையை மேலைநாடுகளில் கண்டபோது அத்தகைய சமூக ஒழுக்கம் தமது தாய்நாட்டிலும் செழிக்கவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது இயல்புதானே !

மன்னன் எப்படி, மன்னுயிர் அப்படி ! அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் ஒழுக்க சீலர்களா இருந்து நீதியையும் அறத்தையும் நிலைபெறச் செய்வார்களாயின் மக்களும் நல்வழியில் நடப்பர். இதற்கு மாறாகவும் ஒரு வாதம் இருக்கத்தான் செய்கிறது. நிலத்தின் தன்மையே பயிருக்கு இருக்கும். ஒழுக்கமும் அறப்பெற்றியுமில்லாத மக்களையுடைய நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் அமர்வோரும் அவர்களிலிருந்தே யன்றோ தேர்ந்தெடுக்கப்படுவர். எனவே, மக்கள் ஒழுக்கமுடையோராயிராத நாட்டில் அவர்களின் அரசமைப்பிலும் சமூகத்திலும் நீதி நேர்மை இவற்றிற்கு இடமின்றிப்

போவதும் இயல்பே அன்றோ! எப்படியும் சமூக உணர்வும் ஒழுக்கமும் ஒரு நாட்டின் மேன்மைக்கு இன்றியமையாதன என்பது உண்மை.

மோட்டார்ப் போக்குவரத்துத் துறையில் மிகுதியும் கவனம் செலுத்தி அந்த விஞ்ஞானக் கலையில் மேலை நாட்டினருடன் நேர்நிற்கும் வல்லமை நமது நாட்டிலும் தோன்ற வேண்டுமென்ற தணியாத ஆவல் கொண்டவரல்லவா நமது நாயுடு? எனவே அவர் இங்கிலாந்திலும் ஏனைய நாடுகளிலும் சென்று சுற்றிப்பார்க்க வாய்த்தபோதெல்லாம் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற தொழிற்சாலைகள், அவற்றை நடத்தும் நிருவாக முறை, உற்பத்தி உத்திகள், ஊழியர்களின் திறமை, நேர்மை போன்ற ஒவ்வொரு அம்சத்தையும் நுணுகி ஆராய்ந்து பல அரிய உண்மைகளை அறிந்து கொண்டார். பிரயாணங்களினால் அவர் மிகுந்த கல்வி அறிவும் கலை ஞானமும் கைவரப் பெற்றதுடன் பல நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களில் நமக்குப் பொருந்துவதும் இன்றியமையாததுமான சீரிய பண்புகளையும் பெற்று உயர்வடைந்து விளங்குகின்றார்.

## தேசீய உணர்ச்சி :

நிலப்பரப்பின் பகுதியாக விளங்கும் நாடுகள் பூகோள அமைப்பிலும் தட்ப வெப்ப நிலைகளிலும் மாறுபட்டுக் காணப்படுவது எப்படி இயல்போ, அதுபோன்ற அந்தந்த நாட்டு மக்களின் மனப்பண்பும், கலாசாரமும், வாழ்க்கை முறையும், நோக்கமும்கூட மாறுபட்டுக் காணப்படுகின்றன.

இயற்கையை யொட்டி வாழ்க்கையைப் புதுமையும் அழகும் வசதியுமுடையதாகச் செப்பனிட்டுக்கொள்ளும்

மனித அறிவின் நாகரீகம் எனப்படும். இந்த நாகரீகங்களை நாட்டுக்கு நாடு மாற்றிக்கொள்ளவும் பின்பற்றவும் முயல்வதில்தான் உலக ஒருமைப்பாடு உருவாகிறது.

அக்கரையிலுள்ள காட்சி எப்போதும் பசுமையும் இனிமையும் நிறைந்ததாகத் தோன்றுவதுண்டு. ஆயினும் அஃது உண்மைக்கு புறம்பானதாகவும் இருக்க முடியும். எனவே பிற நாட்டினரை வியந்து பாராட்டி அவர்கள் தொடர்பை விழைந்து பெறுகின்ற ஒரு நாட்டவர் கண்ணை மூடிக்கொண்டு புதிய நாகரிகத்திற்கு அடிமைப்பட்டு விடுதல் கூடாது.

மேலை நாட்டவரின் மேன்மைகளைப் பாராட்டிப் பயில்வதில் அளவற்ற ஊக்கம் கொண்டிருக்கும் நாயுடு நமது நாட்டிற்கு உரிய பண்பாடுகளை ஒரு சிறிதும் இழந்துவிட ஒப்புவதில்லை. தமக்குப் பொருந்தாதனவற்றைப் புகுத்திக்கொண்டு அவதி யுறுவது கோழைத்தனமும் பேதமையுமாகும் என்பதே அவர் துணிபு.

மேலை நாடுகளுக்குக் கல்வி பயிலவும் தொழில் தேர்ச்சி பெறவும் இங்கிருந்து செல்கின்ற நம்மவர்களான மாணவர்கள் சில ஆண்டுகளில் நடையுடை பாவனைகளில் அடியோடு மாற்றமடைந்து தாய்நாட்டில் வேற்றவர் போல் வந்து இறங்குவதும், நம்முடன் சிறிதும் ஒட்டாத பண்பினரான வெளிநாட்டுப் பெண்களைமணம் புரிந்து வருவது நகைப்புக்கிடமாகும்.

நாயுடு அவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தொழில் துறைகளில் ஆராய்ச்சியும் பயிற்சியும் பெற்று வந்திருக்கிறார். ஆனால், தம்முடைய ஒன்பதாயிரம் கிளாஸ்கோ மூலக் கச்சத்தையும் சில்க் ஷர்ட்டையும்

மலேயாளத் துண்டையும் அவர் மாற்றியதில்லே. லண்டன்போன்ற நகரங்களில் இப்படித் தமிழ் மகனுவே அவர் தெருக்களில் நடமாடி வந்தார் என்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? இதைவிடத் தேசீயம் ஒன்று இருக்கிறதா?

நாயுடு அவர்களின் தேசீய உடையில் அவரை இங் கிலாந்தில் சந்தித்தபோது சர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் திகைத்தே போனுர் ஒரு வைபவத் தின்போது இச்சம்பவம் பற்றி சர். ஆர். கே. எஸ். அவர் கள் கூறிய வாக்கியங்கள் இவை:

"1932-ல் அரசாங்க அலுவலாக நான் லண்டன்மா நகரம் சென்றிருந்தேன். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே அங்குச் சென்றிருந்த நாயுடு அவர்கள் ஒரு நாள் அதிகாலேயில் நான் தங்கியிருந்த விடுதிக்கு என்னேச் சந்திக்க வந்தார். அவர் வந்திருக்கும் செய்தியை அறிந்து நான் அவரை எதிர்கொள்ளவேண்டிக் கீழே இறங்கி வந்தேன். தமிழ்நாட்டில் இருப்பதுபோலவே இயல்பான உடையிலேயே அங்கும் அவர் காட்சியளித்த போது எனக்கு ஏற்பட்ட வியப்பு சொல்லத்தரமன்று. "ஹாட்டும் சூட்டும்" போட்டுத் திரியும் அந்த இடத் தில் தமிழ்நாட்டு உடையுடன் நடமாட வேண்டுமானுல் அதற்கு எவ்வளவோ மெய்த்துணிவு வேண்டும். என்னேப் பொறுத்தவரையில் அவருடன் கூட அந்த இடத் தில் தெருவிற் செல்ல எனக்குத் தைரியம் வரவில்லே. கடைக்கு அழைத்துக் கொண்டுபோய் ஒரு "சூட்" வாங்கி அணிந்து கொள்ளும்படி வற்புறுத்தினேன். ஆண்டுகள் ஒன்பது ஆகிவிட்டபோதிலும் இன்னும் அதை அப்படியே வைத்திருக்கிருர். எனக்காக அவர் அதைச் சிலசமயம் வேடிக்கைக்காக அணிந்திருந்

தாரென்ருலும் இந்தியாவுக்கு வந்த பிறகு அவர் அதை உபயோகித்தாரா என்பது சந்தேகம்''.

உடையிருக்கட்டும். நாயுடு அவர்கள் மேல்நாட்டில் சேர்த்த அறிவும் நிபுணத்தன்மையும் நம்முடைய தேசீய லாபங்களேயாகும். கல்வித் துறையில் நாயுடு அவர்கள் சேகரித்திருக்கும் சலனப் படங்கள் அபூர்வமானவை. பல ஆண்டுகள் கல்லூரிகளிலோ சுற்றுப் பிரயாணங்களிலோ, நூல்களிலோ சேகரிக்க வேண்டிய, பூகோளம், விஞ்ஞானம், உடற்கூறு, விவசாயம், யந்திரம் ஆகிய ஞானங்களை யெல்லாம் நேருக்கு நேர் சில மணி நேரங்களில் போதிக்கும் கல்விச் சலனப் படங்கள் அவை. லட்சக் கணக்கில் செலவிட்டு அவற்றை அவர் சேகரித்து இருக்கிருர். அவற்றையெல்லாம் அவர் திரையிட்டால் முற்றிலும் கண்டுகளிக்கப் பல வாரங்களாகும். கல்வி கற்பிக்க இப்படங்கள் மிகப் பயனுடையவை. நாயுடு அவர்கள் வெளிநாடுகளில் ஏற்பாடு செய்து வந்தும் சேராமலிருக்கும் படங்கள் எவ்வளவோ மதிப்புடையன. அரசியலாரின் ஒத்துழைப்பினுற்ருன் அவருடைய அந்த விருப்பம் முழுதும் நிறைவேறுதல் வேண்டும்.

''கோபால் பாக்''கில் அவருடைய சொந்தத் தியேட்டர். இருக்கிறது. அங்குக் கல்விப் படங்களை நமது நாட்டில் பல கல்லூரிகளிலிருந்தும் மாணவர்களும் ஆசிரியரும் வந்து பார்த்து பயனடைந்திருக்கிருர்கள்: அடைந்து வருகிருர்கள். ஏட்டுப் படிப்பைவிடக் கண்ணுல் அவற்றைப் பயிலுவதன் மூலம் நமது மாணவர்கள் செலவிடும் ஆண்டுகளையும் செல்வத்தையும் சிக்கனமாக்விட முடியுமென்பது நாயுடு அவர்களின் கருத்து.

நாயுடு அவர்கள் தம் முயற்சியால் உருவாக்கியிருக்கும் தொழிற்சாலையிலும் கல்லூரிகளிலும் குறைந்த காலத்தில் மிகுந்த கல்வியறிவைப் பெற்றுப் பயனடைந்திருக்கும் மாணவர்கள் எத்தனையோ பேர் ஆவர். கல்லூரிகளில் யந்திர சாஸ்திரங்கள் படிக்கும் மாணவர்கள் சிலர் கோடை விடுமுறைகளில் நாயுடு அவர்களின் தொழிற்சாலையில் பிரத்தியட்சப் பயிற்சியைப் பெற்றுத் திரும்புவதுண்டு. ஆண்டாண்டுகளாக அவர்கள் கல்லூரியில் செலவிட்ட நேரத்தில் பெற்ற பயனைவிட ஓரிரு மாதங்கள் நாயுடு அவர்களிடம் பயின்று பெற்றுக் கொண்ட கல்வியானது தொழில் அறிவில் பல மடங்கு அதிகமாகுமென்று நிரூபணமாகியிருக்கிறது.

தேசீய உணர்ச்சி இல்லையானல் நாயுடு அவர்கள் தம்முடைய திறனை அரும்பாடுபட்டு இப்படி பலருக்கும் பயன்படுத்த நேர்ந்திருக்காது. நமது நாட்டில் காலத்தின் அருமை அமெரிக்காவை விட நூறு மடங்கு குறைத்து உணரப்படுகிறதென்று அவர் கருதுகிறார்.

## புகைப்பட நிபுணர் :

நாயுடு அவர்கள் அருமையான புகைப்படங்கள் பிடிப்பதில் நிறைந்த ஊக்கமும் திறனும் படைத்தவர். அவரது யந்திரங்களில் அவருடன் இணை பிரியாத நண்பனுகத் திகழ்வது அவரது புகைப்படக் கருவியேயாகும். பல நாடுகளின் காட்சிகளையும் கலைச்சிறப்பையும் விளக்கும் கல்விப் படங்களைச் சேமித்திருக்கும் அவர் பொழுது போக்குக்காகவும் படங்களை எடுப்பதில் ஆர்வம் காட்டுகிருர். அவரது இரண்டாவது ஐரோப்பிய யாத்திரையின் போது மேலைநாட்டுச் சர்வாதிகாரிகளையும் மன்னர்களையும் படம் பிடிக்கப் பல துன்பங்களையும்கூட ஏற்றுக் கொண்டிருக்கிருர்.

1935-ல் இவர் லண்டன் மாநகரில் தங்கியிருந்த போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மன்னர்பெருமான் ஐந்தாம் ஜார்ஜ் காலமானார். சலனப்படம் பிடிக்கும் கருவியைக்கொண்டு ஜார்ஜ் மன்னரின் இறுதி யாத்திரையை இவர் படம் எடுத்திருக்கிறார். மன்னரின் மரண ஊர்வலம் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து புறப்பட்டு லண்டன் நகரின் நெடிய தெருக்களில் ஊர்ந்து செல்லும் போது லட்சக் கணக்கில் மக்கள் வழிநெடுக மொய்த்திருந்தார்கள். ஒரு சிலர் நசுக்குண்டு இறந்தும் போனார்கள். நூற்றுக் கணக்கான மக்கள் மருத்துவ சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் சலனப் படம் எடுக்க அவர் எவ்வளவு இடர்ப்பட்டிருக்க வேண்டும்?

பிறகு, சில மாதங்களில் ஒலிம்பிக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. அதைக் கண்டு பாராட்டப் புதிய மன்னர் எட்டாம் எட்வர்டு எழுந்தருளினார். அப்போது காட்சிச்சாலை வாயிலில் மன்னர் நுழைவதைப் படம் எடுக்க விரும்பிக் காத்திருந்தார் நாயுடு. போலீஸ்காரர்கள் அவரை வெளியேற்ற முயலும் போது மன்னரே பார்த்து விட்டார். உடனே அரசரது தயவினால் அவர் விடுவிக்கப்பட்டு இருபது நிமிஷங்கள் அந்தக் காட்சியைப் படம்பிடிக்க அனுமதியும் பெற்றார்.

1936-ல் ஜெர்மனியில் நாஜீத் தலைவர்களைப் படம் பிடிக்க முயன்று வெற்றியும் பெற்றார். அன்னிய நாட்டினரான அவரை யாரோ ஒற்றன் என்று ஐயுற்றுக் கைது செய்து விட்டனர். பின்னர் விளக்கம் கேட்டுத் தெரிந்துகொண்ட பின்னர் நாஜிப் பட்டாள அணி வகுப்பைப் படம் பிடிக்க அனுமதிக்கப் பட்டார்.

அவர் கொலோன் என்னுமிடத்தில் ஒரு விடுதியில் தங்கி யிருந்த காலையில் அடுத்த கூடத்தில் ஹிட்லரும் அவரது துணைவர்களும் தங்கியிருந்தனராம். ஹிட்லரைச் சந்தித்துச், சிறிது நேரம் அளவளாவியிருந்த பின்னர் அவரையும் படம் பிடித்துக் கொண்டதுடன், படங் களில் ஹிட்லரின் கையெழுத்தையும் பெற்றுக்கொண் டார். நாயுடு தமது மூன்ருவது உலக யாத்திரையின் போது அமெரிக்காவில் தங்கியிருந்த நேரம் உலக இரண்டாம் பெரும் போர் தொடங்கிவிட்டது. அப் போது அமெரிக்கர் சிலர் ஹிட்லரின் கையெழுத்துள்ள அந்தப் படத்திற்குப் பத்தாயிரம் டாலர் வரையில் விலை கொடுத்துப் பெற விரும்பினர்கள். ஆயினும் அவர் அதனைக் கொடுக்கவில்லை.

நமது நாட்டின்மாபெரும் தலைவர்களில் சிறந்த வரும், பிரதமருமான ஜவஹர்லால் நேரு 1930-ல் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த பேடன் வீலர் என்னுமிடத் திற்குத் தமது அருமைத் துணைவியாரான கமலா நேரு வின் உடல் நலத்தை முன்னிட்டு மருத்துவ உதவிக் காகச் சென்றிருந்தார். அப்போது நாயுடு அவர்கள் நேருவைச் சந்தித்து அவரையும் படம் எடுத்திருக்கிருர். சோக வடிவமாகத் தோன்றிய நேரு தம் படத்தில் கையெழுத்தை இட்டிராதிருப்பாரேயாயின் அவரை இன்று அடையாளம் காண்பது மிகவும் அருமையாக இருக்கும்.

இத்தாலிய சர்வாதிகாரி முஸ்ஸோலினியை அவர் பேட்டி கண்டு படம் எடுத்தபோது. அந்த சர்வாதிகாரி யின் பல வினக்களுக்கெல்லாம் விடைகூறிச் சமாளித் துள்ளார்.

இரண்டாவது முறை அவர் மேற்கொண்ட உலக யாத்திரையில் இங்கிலாந்து, ஜெர்மானி, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய பல நாடுகளையும் சுற்றிப் பார்க்கவும் பல தொழில் வாணிபத் துறை பற்றிய அனுபவங்களைப் பெறவும் அரிய வாய்ப்பு ஏற்பட்டது. சுற்றுப் பிரயாணம் முடிந்ததும் திரும்பும்போது அவர் இருந்த கப்பலில் இந்திய ராஜப் பிரதி நிதிப் பதவியேற்கும் பொருட்டாக லின்லித்கோ பிரபுவும் அவரது குடும்பத்தினரும் பிரயாணமாகி வந்து சேர்ந்தார்கள்.

## புத்துலக வாடை :

இரண்டு முறைகளிலும் ஐரோப்பிய நாடுகளிலேயே பெரும்பாலும் சுற்றுப்பிரயாணம் புரிந்த நாயுடு அமெரிக்க நாடுகளில் அதிக கவனத்தைச் செலுத்தலானார். வெளிநாடுகளில் விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் முன்னேற்றமும் கண்டறிந்ததன் பயனாக, புதுப்புது முறைகளைத் தமது ஸ்தாபனங்களில் கையாண்டுப் பயனடையலானார். இதற்குள் அவரது மோட்டார்ப் போக்குவரத்து ஸ்தாபனம் மிகவும் வலிமையுடையதாக விளங்கலாயிற்று.

நாகரிகத்திலும், செல்வச் செழிப்பிலும் முன்னேறிக் கொண்டிருக்கும் அமெரிக்க நாடுகளில் சென்று பயில வேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு உண்டாயிற்று. அதன் விளைவாக 1939-ல் அவரது மூன்றாவது யாத்திரை புத்துலகம் நோக்கித் தொடங்கியது. இந்த முறையும் அவர் முதன் முதலில் போய்ச் சேர்ந்தது இங்கிலாந்துக்குத்தான். பல திங்கள் இங்கிலாந்தில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. பல தொழில் ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டு வர்த்தக விஷயமாகப் பல திட்டங்களில் ஈடுபட்டிருந்தார். அமெரிக்கா

வுக்குப்புறப்பட்டுச் செல்ல அவர் எண்ணியபோது திடீ ரென்று இரண்டாம் உலகப் பெரும் போர் மூண்டு விட் டது. அதன் விளைவாக மேலை நாடுகளில் பேரதிர்ச்சியும் அமைதியற்ற சூழ்நிலையும் உருவாகிவிட்டன. என் ருலும், திட்டப்படி அமெரிக்கா செல்வதை ஒத்தி வைக்கவோ உடனே தாய்நாடு திரும்பி விடவோ அவர் விரும்பவில்லை. ஏனெனில் உலகத்திலேயே மாபெரும் பொருட்காட்சி ஒன்று அந்த நேரம் அமெரிக்க நாட்டுப் பெருநகரான நியூ யார்க்கில் தொடங்கவிருந்தது. தொழில் ஊக்கமும், விஞ்ஞான முயற்சியும் உடைய அவர் அந்தக் காட்சியைச் சென்று கண்ட பிறகே ஊர் திரும்பினர்.

முயற்சி உடையார் இகழ்ச்சியடையார் அல்லவா? புத்துலகம் என்று மக்களால் புகழ்ந்து கூறப்படும் அமெரிக்கப் பெருங்கண்டத்திற்குப் போர் மேகங்கள் திரண்டு கருத்துப் பொழிய தொடங்கிய சூழ்நிலையிலும், கடலில் வங்கம் ஊர்ந்து சென்ருர் நாயுடு என்ருல் அவரது ஊக்கம் எத்தகையதென்பது புலனுகும்.

அமெரிக்கா உலகிலேயே செல்வப் பெருக்கும் செழிப்பும் மிகுந்த புது உலகம் என்பதில் ஐயமில்லை. சுமார் மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்பே உலகில் அப் படி ஒரு நிலப் பரப்பு இருக்கிறதென்ற உண்மை ஐரோப்பிய நாட்டினருக்குத் தெரிய வந்தது சின்னஞ் சிறு நாடுகளில் பெருகி வரும் மக்கள் கூட்டத்தினரான மேலை நாட்டவர்களுக்குப் புதிய மண்பரப்புக் கிடைத் தால் சொல்ல வேண்டுமா? ஐரோப்பிய மக்கள் கும்பல் கும்பலாகச் சென்று குடியேறிப் புதிய உலகு ஒன்றைப் படைத்துக் கொண்டார்கள். இன்று அமெரிக்க நாடு படைத்திருக்கும் வளமும் செல்வமும் சில நூற்ருண்டு

களுக்குள் மனிதன் தன் அறிவால் சாதித்த விஞ்ஞானத்தின் வெற்றி என்று கூறுதல் தகும்.

அமெரிக்க வாழ்க்கை முறையென்பது மேலைநாட்டவரால் மிகவும் நாகரீகமுடைய தென்று போற்றப்படுவதாகும். இன்று உலகில் வேறெந்த நாட்டையும்விட அமெரிக்கப் பெருநிலமே பல துறைகளிலும் ஓங்கி நிற்கிறது இந்தியாவில் "மோட்டார் மன்னன்" என்று புகழ் படைத்து விளங்கும் நாயுடு "மோட்டார் யந்திர விஞ்ஞானத்தில்" தலைமை தாங்கியிருக்கும் அமெரிக்காவுக்குச் சென்று பல அனுபவங்களைப் பெற விரும்பியது இயல்பேயன்றோ!

செல்வம் கொழிக்கும் நாடு; அதிலும் உலகப் பெரும் விஞ்ஞானத் தொழிற் கல்விப் பெருங்காட்சி நடைபெறுகின்ற நேரம். வெளிநாட்டிலிருந்து ஒருவர் சென்று தங்கியிருந்து பயில வேண்டுமாயின் பெருந் தொகை செலவாகுமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நியூயார்க் நகரையடைந்த நாயுடு அவர்கள் வெறும் பொழுது போக்கு, களியாட்டங்களைச் சென்று காண விரும்பாமல் உலகப் பெருங் காட்சிச்சாலையைப் பார்வையிடுவதிலும் பயன் பெறுவதிலும் பெரிதும் ஊக்கம் கொண்டு இரவு பகல் என்று பாராமல் உழைத்தனர்.

அந்தக் காட்சிச் சாலையில் விநோதங்கள் நிறைந்த பகுதியும் இருந்தது. எனினும், நாயுடு அவர்கள விஞ்ஞான-வாணிப-தொழிற்காட்சிகளை ஆய்ந்து அறிவைத் திரட்டுவதிலும் அரும் பொருள்களைச் சேகரிப்பதிலும் அவர் பெரிதும் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு நாட்டின் நாகரீக வளர்ச்சிக்குக் கல்வியைப் போன்றே பெரிதும் அடிப்படையாக இருப்பது போக்கு

வரவு ஸ்தாபனங்கள் என்பதை அங்கு அவர் நேரில் கண்டறிந்து கொண்டார். நாடு பூராவையும் இணைக்கும் நெடிய சாலைகளையும், நகரங்களிலும் சிற்றூர்களிலும் நாடி நரம்புகளைப் போலப் பரந்துகிடக்கும் பாதைகளையும் அவற்றின் கண்மூடித் திறக்கும் நேரத்தில் நூற்றுக் கணக்கான மைல் வேகத்தில் ஊர்ந்து செல்லும் யந்திர ஊர்திகளையும் வேறெந்த நாட்டிலும் காண முடியாது.

பொருட்காட்சியில் அவர், ஒரு தனி உலகம் கொலுவிருக்கும் உண்மையைக் கண்டார். அதிகாலையில் காட்சிச்சாலைக்குச் சென்று இரவு நெடுநேரம் சென்ற பின்னரே இருப்பிடம் திரும்புவார். அதுவரையிலும் கண்காட்சியில் கருத்துக்கு உணவு தேடுவதின்றி வயிற்றுக்கு உணவு வேண்டுமென்பதையும் மறந்திருப்பார் என்ருல் கலையில் அவரது ஊக்கம் எத்தகையது என்று பாருங்கள் !

நியூயார்க் நகரில் சிறிது காலம் தங்கியிருந்து பொருட்காட்சியைக் கண்டு மகிழ்ந்த பின்னர் அவர் சிகாகோ நகருக்குப் பயணமானுர். சிகாகோ நகரைப் பற்றி நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். பத்தொன்பதாம் நூற்ருண்டில் நமது நாட்டில் தோன்றிய மாபெருய் ஆன்ம ஞானியான விவேகானந்தரையும் அவருடைய தொண்டினையும் பற்றிப் படித்திருக்கிறீர்களல்லவா ?

அரசியல், பொருளாதார, வாணிபத் துறைகளில் கீழ்த்திசை நாடுகளையெல்லாம் மேலை நாட்டார் அடிமைப் படுத்தியிருந்த அந்த நாட்களில் இந்தியர்களின் கலைமேன்மையை உலகறியச் செய்யும் பெரும் பணியை

மேற்கொண்டு திக்கு விஜயம் செய்து புகழ் படைத்தவர் ஸ்வாமி விவேகானந்தர்.

சமயங்கள் பல வற்றின் அடிப்படைகளை ஆராய்ந்து பார்க்கும் பொருட்டாக உலக நாடுகள் பலவும் கூடி அமெரிக்கச் சிகாகோ நகரில் மகாநாடு ஒன்று கூட்டின. அந்த மகாநாட்டில் சென்று கீழ்த்திசை மண்ணின் மாண்பையும், பண்பையும் நிலைநாட்டிய சரித்திரப் பெருமை வாய்ந்த சொற்பெருக்கை விவேகநந்தர் நிகழ்த்தினர்.

அத்தகைய சிகாகோ செல்வ நகரில் நமது சரித நாயகரான நாயுடு அவர்களும் சென்று அங்குள்ள மக்களுடன் பழக விரும்பினர். விவேகாநந்தரின் ஆன்மீக ஒளியில் திகைத்துக் கைகுவித்து வணங்கிய அமெரிக்கர், நாயுடு அவர்களின் விஞ்ஞான ஆற்றலைப் பெரிதும் வியந்து பாராட்டினர்.

1940-ம் ஆண்டின் முதல் நாளன்று அதிகாலையில் அவர் சிகாகோ நகரம் சேர்ந்தார். போக போக்கியங்கள் மலிந்த கந்தர்வ கோட்டையாக விளங்கிய அந்தத் திருநகர் புத்தாண்டு பிறப்பன்று எவ்வளவு கோலாகலமாக இருந்திருக்குமென்பதை எண்ணிப்பாருங்கள். அவற்றில் திளைத்துத் தம்மை மறந்துவிடாமல் இருக்க வேண்டுமானல் எவ்வளவோ உருதிப்பாடு ஒருவருக்குத் தேவையாகும்.

சிகாகோவில் தங்கியிருந்தபோது பல மகாநாடுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. விஞ்ஞான முறையில் தளவாட உற்பத்தியில் முனைந்திருந்த ஒரு வணிகக் கழகத்தார், தங்கள் உற்பத்திப் பொருளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வழி துறைகளை ஆராய ஒரு மகாநாடு நடத்தினர்கள்.

அங்கு அச்சமயம் சென்றிருந்த நாயுடு அவர்களை இந்திய நாட்டின் பெரும் இறக்குமதி வர்த்தகர் என்ற முறையில் தங்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைத்து அவரது கருத்துக்களைக் கேட்டுக்கொள்ள விரும்பினார்கள்.



**நாயுடு அவர்கள் அமெரிக்க நிபுணர் ஒருவருடன் யந்திர ஆராய்ச்சியில் கலந்து கொண்டிருத்தல்.**

தொடர்ந்து பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற உலக வாணிக மாநாடொன்றிலும் அவர் கலந்துகொள்ள நேர்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வர்த்தக உடன்பாடுகளிலும், கிரேட் பிரிட்டனுடன் செய்த நாணயமாற்று போன்ற மிக நுட்பமான விவாதங்களிலும் அவர் கலந்துகொண்டார்.

## மாணவ வாழ்க்கை :

கல்வித் துறையில் பல புதிய முறைகளையும் சாதனங்களையும் கண்டறிந்திருக்கும் நாயுடு அவர்கள் அதற்கு வேண்டிய அடிப்படையான அறிவை அமெரிக்காவில் தான் பெற்ருர் என்ருல் மிகையாகாது? மனித வாழ்வில் காலம் மிகவும் அருமையானதல்லவா? அந்தக் காலத்தை வீணுக்காமல் மனிதன் பல கலைகளையும் பயின்று பயன்பெற வேண்டும்.

இந்தத் துறையில் அமெரிக்கர் அடைந்திருக்கும் வெற்றி மிகவும் மேலானதாகும். குழந்தைகளின் இளமையையும் பெற்ரோர்களின் செல்வத்தையும் நாட்டின் சக்தியையும் வீணுக்காமல் கல்வி கற்பிக்கும் அமெரிக்க முறையைக் கண்டு நாயுடு பெருவியப்பு அடைந்ததுடன் தாமே சிறிது காலம் ஒரு மாணவராக அமெரிக்காவில் பயில வேண்டுமென்றும் பேரார்வம் கொண்டார்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்று கேட்கிருர்கள். அஃதாவது சிறு பிராயத்தில் குவியாத உள்ளம் வயது முதிர்ந்த பின் ஒன்றில் குவிவது கடினம். எதற்கும், ஒரு விதிவிலக்கு இருக்கத்தான் செய்கிறது. சிறு பிராயத்தில் பள்ளியில் பயிலாத நாயுடு 47-வது வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்துப் பரீட்சையும் கொடுத்துப் பட்டமும் பெற்ருர் என்ருல் அஃது ஆச்சரியம் தானே! அதுவும் வெளிநாட்டிலே சென்று விஞ்ஞானக் கல்லூரி ஒன்றில் யந்திர விஞ்ஞானம் பற்றிய கலைப்பயிற்சி பெற்ருர் என்ருல் சாதாரணமா?

துள்ளித் திரிகின்ற காலத்திலே பள்ளியில் படிக்காமல் ஓடிவிட்ட சிறுவன் துரைசாமி எங்கே, தமது

நாற்பத்து ஏழாவது வயதில் பள்ளிக்கூடத்தில் மாண வராகச் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற ஆர்வமும் அதைச் செய்து முடித்த ஆற்றலும் கொண்டு விளங்கிய புது மனிதரான நாயுடு எங்கே! இந்த நிலை மாற்றத்தின் காரணம் என்ன? தேச தேசங்களை எல்லாம் சென்று கண்டு அந்தந்த நாட்டு மக்களின் வாழ்க்கை முறை களையும் சாதனைகளையும் நேரில் கண்டறிந்ததாலாய பயனன்றோ?

மொழி மாற்றமும் சூழ்நிலை மாற்றமுடைய வேற்று நாட்டில் வயது முதிர்ந்த பிறகும் கலை பயில வேண்டு மென்று அவர் அன்று விரும்பியதன் பயனாகத்தான், இன்று நமது நாட்டிலும் கல்வியில் பல நவீன சாதனங் களை இணைக்க வேண்டுமென்ற நோக்குடன் அவர் பல அரிய செயல்களைப் புரிந்துள்ளார்.

செயிண்ட் லூயி நகரத்தில் அவர் பயின்ற பாட சாலை விஞ்ஞானக்கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்த பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கும், விஞ்ஞானத் தொழிற் கூடங்களில் நுட்பமான யந்திரங்களில் வேலை செய்யும் நிபுணர்களுக்கும் கற்பிக்கின்ற கலைக்கூடமாகும். அத்தகைய கலைக்கூடமொன்றில் தாமும் ஒரு மாணவ ராகச் சேரத் தகுதியுடையவர்தான் என்பதை நிரூபித் திருக்க வேண்டுமானால், அவர் இயல்பாகப் படைத் திருந்த யந்திர ஞானமும் ஊக்கமும் அதற்கேற்ற உழைப்புமே காரணங்களாக இருந்திருக்க வேண்டும்.

மேலும் இந்தியாவிலிருந்து வந்திருக்கும் தொழில் அதிபர் ஒருவர் தங்கள் பள்ளியில் பயில விரும்புவதை அந்தக் கல்லூரி நிர்வாகிகள் பெரும் மதிப்புடன் ஏற்றுக் கொண்டு பயிற்சிக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் தயங்காமல் அளித்தார்கள்.

அந்தப் பாடசாலை மாதத்தோறும் நாற்பது மாணவர்களைப் பயிற்றுவிக்கும் பெரும் பணியைச் செய்து வருகிறது. ஒரு மாணவனுக்கு இருநூறு டாலர்கள் வீதம் இந்தப் பயிற்சிக்குச் செலவிடுவதில் அந்தப் பாடசாலை நிர்வாகிகள் மகிழ்ச்சியேயடைகிறார்கள். விளக்க உரைகளை கேட்பதன் மூலம் தத்துவ ரீதியான அறிவும், யந்திரங்களில் எதிர்நின்று வேலை செய்வதன் மூலம் அனுபவ பூர்வமான பயிற்சியும் மாணவர்கள் அளிக்கப்படுகிறார்கள். வாரம் ஒன்றுக்குப் பதினாறு டாலர்கள் வீதம் உபகாரச் சம்பளம் நாயுடு அவர்களுக்கு கிடைத்தது. இளம் பிள்ளையின் உற்சாகத்துடன் நம்மில் எத்தனை பேர் நாற்பத்தேழாவது வயதில் பாடசாலைக்குச் சென்று படிக்கக்கூடிய உணர்ச்சி படைத்திருக்கிறார்கள்? தாம் படித்த பாடசாலை அனுபவம் பற்றி நாயுடு கூறுவதைக் கேளுங்கள்.

"இங்கே படிப்பவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். ஒவ்வொருவரும் சர்வகலாசாலைகளில் பலப் பல வருடங்கள் யந்திர சாஸ்திரம் படித்துப் பட்டங்கள் பெற்று அனுபவ ஞானம் நாடிச் சில வாரங்கள் இந்தப் பாடசாலையில் பயின்று நிபுணர்களாக வெளியேறுவார்கள். பட்டதாரிகளல்லாதவர்களுக்கு இங்கே வேலையில்லை. ஆனால் பாடசாலையின் சரித்திரத்திலே, என்னைப்போன்ற-பள்ளிப் படிப்போ சர்வகலாசாலைப் பட்டங்களோ இல்லாத ஒருவனை-அதுவும், அயல்நாட்டு மாணவனை உவந்து ஏற்றுக்கொண்டது அதுவே முதல் தடவையாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் நான் அங்கு மிகவும் கடுமையாக வேலை செய்தேன் என்பது உண்மைதான். எனக்குத் தேவையான விஷயங்களை அங்கே நான் முற்றிலும் தெரிந்துகொள்ள முடிந்தது. அப்போது நான் சற்று உடல்நலம் தளர்ந்திருந்தேன்.

உடல்நிலை சரிப்பட்டபிறகு மனித சமுதாயத்திற்குப் பயன்படுவதான கலை எதையும் சந்தர்ப்பம் வந்தபோதெல்லாம் கற்கத் தவறக் கூடாது என்ற உணர்ச்சி எனக்கு அங்கு பயின்றதன் விளைவாக ஏற்பட்டது. நான்தான் அங்குப் படித்த முதல் இந்திய மாணவன். அங்கு என்னுடன் பயின்ற தோழர்கள் அனைவரும் சரி, நிபுணர்களும் சரி என்னிடம் காட்டிய மதிப்பும் பரிவும் எனக்குப் பெரும் உற்சாகமளித்தன. பாடசாலையை விட்டு வெளியேறும்போது மாணவர்கள் சேர்ந்து புகைப் படம் எடுத்துக்கொண்டோம். தமிழில் என் நன்றியைத் தெரிவித்து ஒரு பாராட்டுச் செய்தியும் அந்தப் பாடசாலை நிர்வாகிகளுக்குக் கொடுத்தேன். அந்த நிர்வாகத்தினர் இயக்கும் பத்திரிகை ஒன்றில் என் செய்திக் கடிதம் அப்படியே படம் எடுத்து அச்சிடப்பட்டதுடன் நாங்கள் கலந்துகொண்ட விருந்து ஒன்றின் புகைப்படமும் வெளிவந்தது. எனக்கு அங்குப் பட்டமும் வழங்கியிருக்கிறார்கள்.''

## சொற்பொழிவாளர் :

செயிண்ட் லூயி நகரில் தான் நாயுடு அவர்கள் சேர்ந்தாற்போல் சில வாரங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அவர் அங்குச் சேர்ந்தபோது அடைமழை காலம்—கொல்லுங் குளிர்—கம்பள உடைகளோ இறுகிய ஆடைகளோ இல்லாமல் வெளியே விரல் நீட்டவும் அமெரிக்க மக்களுக்கே இயலாத வானிலை. ஆனால் அவர் தமிழ் நாட்டு முறையில் தோதியும், குப்பாயமும், மேல் துண்டும் அணிந்தே உலவி வந்தாராம்.

பாடசாலையில் பயிற்சி நேரம் போக எஞ்சிய வேலைகளில் இந்த அதிசய மனிதரைக் காணவும் தங்கள் இல்லங்களுக்கும் கழகங்களுக்கும் அழைத்துச் சென்று அவருடன் பழகியிருக்கவும் செயின் லூயி நகரினர் விருப்பம் கொண்டார்கள்.

இந்திய மக்களைப்பற்றி வெளிநாட்டார் தெரிந்து கொண்டிருப்பதைவிட, அறியாத உண்மைகளே அதிகம். வெளி நாட்டினர் பலரும், இந்திய, சமஸ்தானாதிபதிகளும் கோடீஸ்வரர் வீட்டுக் கவலையறியாக் காளையரும் உல்லாசப் பொழுது போக்குக்காகவே வேற்று நாடுகளுக்குச் செல்கிறார்கள் என்ற கருத்துடையவர்கள். இந்தியாவில் மலைப் பாம்புகளும் மந்திரவாதிகளும் மட்டும்தான் உண்டென்று நம்புகிற வெளிநாட்டவர் இன்றும் இருக்கின்றார்கள். மூட நம்பிக்கைகளை மிகுதியும் படைத்தவர்கள் இந்தியர் என்று கருதுவோரும் உண்டு.

விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகள், சி. வி. ராமன் போன்ற மேதைகள் ஒருசிலரை மட்டுமே வேற்று நாட்டினர் அறிந்திருக்கக்கூடுமென்பது உண்மையாயினும் பொதுவாக இந்திய நாட்டையும் அதன் பண்பாட்டையும் சரிவர உணர்ந்துகொள்வதில்லை. இந்தியா ஒரு அடிமை நாடு என்பது புறக்கணிப்புக்கு ஒரு காரணமாக இருக்கக் கூடுமல்லவா? எனினும் இந்திய நாட்டிலிருந்து அறிஞர்கள் யார் வந்தாலும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் ஊக்கம் அன்னியரிடம் இருந்தது.

எனவே, அமெரிக்காவில் நாயுடு பற்பல பொதுக் கூட்டங்களில் சொற்பெருக்காற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நம் நாட்டவர் பயிற்சி பெற வேண்டிய ஒரு துறை மேடைக்கலை. பேச்சு என்பது புண்ணிய கதா காலக்ஷேபமாகவும், அரசியல் சமயப்பிரசாரமாகவும் மட்டுமே இருந்து வருகிறதேயன்றி மேடைப் பேச்சுக் கலையை வளர்ப்பதன் மூலம் கல்வி பெறலாம் என்ற வழியே நமக்கு நன்கு தெரியவில்லை. நாகரிகம் முதிர்ந்த நாடுகளில் ஆங்காங்கு அறிஞர்களின் சொற்பெருக்குகளுக்குக் கட்டணம் செலுத்தியே மக்கள் கூடி நின்று

செவிமடுப்பர். பேராசிரியர்களும், நிபுணர்களும், கலாசாலை அல்லது தொழிற்சாலைக் கட்டிடங்களுக்குள் மட்டுமில்லாமல் பொது மன்றங்களில் மேடையேறி சொற்பெருக்குகள் நிகழ்த்துவதன் மூலமும் பெரும் பணி புரிகிறார்கள்.

அமெரிக்க மக்களுக்கு ஆற்றிய சொற்பெருக்குகளால் நாயுடு அவர்களுக்குப் பெரு மதிப்பு ஏற்பட்டது இயல்புதான். அவருடைய அனுபவத்தில், அமெரிக்கர் விஞ்ஞானம், தொழில் துறைகளில உலகில் தலைசிறந்து விளங்கியபோதிலும் உள நூலிலும், ஆன்மீகத் துறையிலும் மிகவும் பிற்போக்குடையவர்களாகவே விளங்குகிறார்கள் என்று கண்டறியலானார்.

பெண்களின் கூட்டத்திலும் அவர் உரைகள் நிகழ்த்தியுள்ளார். அமெரிக்கப் பேரழகிகள் குதி உயர் பாதரட்சைகள் அணிந்து உதட்டுச் சாயம் பூசி அலங்காரம் செய்துகொள்வதும் உல்லாச பவனங்களில் மது வருந்தி ஆண்களுடன் கைகோர்த்து ஊர் வியக்கக் களித்து நின்றாடும் களியாட்டங்களும் இந்திய மரபின் மேன்மையுணர்ந்தோர் வெறுத்து ஒதுக்கத் தக்கவை என எடுத்துக்கூறி வலியுறுத்தினார். இந்தச் சொற்பெருக்கின் கருத்தை அமெரிக்கர் ஏற்றுக்கொள்ளாவிடினும், மதிப்புள்ள கருத்தென்று போற்றிப் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக அவரது சொற்பெருக்கைப் பரப்பினார்கள். செய்தி நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு புகைப்படங்கள் எடுத்துப் பிரசுரிக்கலாயினர்.

"டிட்ராய்ட் நியூஸ்" என்ற பிரபல பத்திரிகையொன்றின் நிருபர், நாயுடு 1932-ல் அமெரிக்காவிற்கு வந்திருந்தபோது அவரைப் பேட்டி கண்டு அவருடைய புகைப்படத்தையும் தமது பத்திரிகையில் பிரசுரித்திருந்தார். 1940-லும் அதே நிருபர் நாயுடு அவர்களைப் பேட்டி

கண்டு விரிவாக எழுதியதுடன் எட்டு வருடங்களுக்கு முன்பு தாம் எடுத்த நாயுடுவின் உருவப் படத்தையும் மீண்டும் பிரசுரித்தார்.

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் சூழ்ந்து நின்று அவரைச் செய்திப் பொருளாக்கிய அந்தக் கோலாகலங் களில் நாயுடு சிரித்துக்கொண்டே "உங்கள் பேட்டி களாலும், உங்கள் பத்திரிகை விளம்பரங்களாலும் என்னை ஏமாற்றிவிட முடியாது" என்று கூறியுள்ளார். மனிதர்கள் விளம்பரப் புகழ்ச்சிகளில் பெருமையடை யத்தான் செய்கிறார்கள். ஆயினும், அமெரிக்காவில் ஒருவருடைய பெயர் பத்திரிகைகளில் அடிபடுவது மிகவும் சங்கடத்தில் கொண்டுபோய் விடுகிறது. பத்தி ரிகைகளில் ஒருவர் பெயர் அடிபட்டால் அமெரிக்க ஆடவரும் பெண்டிரும் உடனே விருந்துபசாரங்கள் நடத்தி உபந்நியாசம் கேட்கத் தயாராகி விடுகிறார்கள்.

**மந்திரவாதி :**

நாயுடு விஞ்ஞானக் கலை வல்லுனர் மட்டுமல்ல. அவர் பெரிய மந்திரவாதி என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். தேள்கடி விஷம் இறக்குவதில் கோயம்புத்தூரில் நாயுடு மிகவும் பெயர்பெற்ற மந்திரக் காரர்.

பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? ஆனால் எப்பேர்ப்பட்ட பாம்பாயிருந்தாலும் நாயுடுவைக் கண் டால் நடுங்கும் என்று கூறப்படுகிறது. செயிண்ட் லூயியில் நடைபெற்ற ஒரு சம்பவம் பற்றி அவரே கூறிய செய்தி இது. அங்கு மாணவராக அவர் தங்கி யிருந்த காலத்தில் சில நண்பர்களுடன் ஒரு நாள் மிரு கக் காட்சிச்சாலைக்குச் சென்றாராம். அப்போது பெரிய

மலைப்பாம்புகளை அடைத்து வைத்திருக்கும் கூண்டின் அருகே அனைவரும் நின்று வேடிக்கை பார்த்திருந்தார்கள். உள்ளே இருந்த பாம்புகளில் ஒன்று தற்செயலாக நாயுடு அவர்களைப் பார்த்துவிட்டது. பார்த்ததும் மந்திரத்தால் கட்டுண்டது போல அசையாமல் அது நின்றுவிட்டது. சிறிது நேரத்தில் நாயுடு தம் பார்வையைப் பாம்பின் மீதிருந்து மீட்டு, நடந்து சென்று அந்தக் கூண்டின் ஒரு கோடியில் சென்று தம் பார்வையைச் செலுத்தினர். அவருடைய பார்வை நகர்ந்து செல்லும் திசைக்குப் பாம்பும் நகர்ந்து சென்று அங்கே நின்று அவரைப் பார்த்துக்கொண்டு அசைவற்றிருந்தது. மீண்டும் எதிர்புறக் கோடியில் நாயுடு சென்று நின்று பார்க்கும் போதும் அந்தப் பாம்பு தானும் நகர்ந்து மறு கோடிக்குச் சென்றதாம். அமெரிக்க நண்பர்கள் நாயுடு அவர்களின் இந்தச் சக்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

நாயுடு புலால் உணவு உண்பவர் அல்லர்; நல்ல சைவ உணவுக்காரர்; ஆயினும் முட்டைகள் சாப்பிடுவதில் அவருக்கு ஆட்சேபனையொன்றும் கிடையாது. முட்டைக்கும் பாலுக்கும் அதிக பேதமில்லை யென்பதே அவருடைய கருத்து. எனினும் அமெரிக்காவில் இருக்கும்போதோ அவர் முட்டைகூட சாப்பிட விரும்பியதில்லை. காரணம் அங்கே சமயற்காரர்கள் மாமிச உணவு சமமைத்துப் பரிமாறும் கரண்டிகளிலேயே முட்டையையும் பக்குவம் செய்வதைக் கண்டதனுல் அவர் முட்டையைச் சாப்பிட அருவருப்படைந்தார்.

சைவ உணவு சாப்பிடுவதில் உள்ள பலாபலன்களைப் பற்றிய உடற்கூற்று உண்மைகள் ஒருபுறமிருக்க, கொல்லாமை என்ற உயர்ந்த பண்பின் விளைவுதான் நாயுடு

அவர்களைக் கவர்ந்திருப்பதாக தெரிகிறது. கொல்லாமையை இவர் அனுஷ்டிப்பதனால் ஏற்பட்ட ஒரு லாபத்தைப் பற்றி அவரே வேடிக்கையாகக் கூறினார். ஜியார் ஜியஸ் பிலிப்பர் கப்பலில் தீப்பிடித்தபோது கடலில் குதித்தாரல்லவா? இவருடன் கூடக் குதித்தவர்களில் கடல் மீன்களுக்குச் சிலர் இரையாகியும் சிலர் துன்பத் துக்கரளாகியும் அவதிப்பட்ட காலத்தில் நாயுடுவின் பக்கத்தில் கடல் பிராணிகள் ஒன்றும் வந்து தொந்தரவு செய்யவில்லையாம். மற்ற ஜீவராசிகளை அவர் கொன்று தின்பதில்லையாகையால் அவையும் அவரைத் தொட வில்லைபோலும். தேள் விஷம் இறக்குதல், பாம்புகளையும் மனிதர்களையும்கூட வசப்படுத்தும் பார்வையொளியும் கவர்ச்சியும் பெறுதல் ஆகிய இவை புலால் உண்ணாமையால் ஏற்பட்ட ஆன்ம நேய விளைவு என்று ஏன் கொள்ளக்கூடாது?

உள்ளம் என்பது ஒரு மாயச் சுரங்கம். அதில் நிறைந்திருக்கும் அதிசயப் பொருள்களுக்கு ஒரு அளவே கிடையாது. மனிதன் பரம்பரையாகச் சேர்த்த அனுபவத்துடன் தன் முயற்சியால் தானே புரிந்த ஆராய்ச்சிகளாலும் ஏராளமான அறிவைச் சேகரம் செய்து கொள்ளுகிறான். தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி வீணே மாய்ந்துவிடும் வேடிக்கை மனிதர்களுக்கு உள்ளத்தால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை. காலையில் எழுந்தால் இரவு படுக்கைக்குச் செல்லும் வரையிலும் ஒரேவிதமான வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புரிந்து, பார்த்து, கேட்டு எத்தனை ஆண்டு வாழ்ந்தாலும் அந்த வாழ்க்கை வெறும் மரக்கட்டைக்குச் சமானம் ஆகும். சிருஷ்டி ரகசியங்களை ஊடுருவிச் செல்லும் அறிவும் ஆராய்ச்சியும் அதனால் ஏற்படும் ஞானமும் ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பயனாக இருக்கவேண்டும்.

மனதை ஒரு பெருங் கடலாக உவமிக்கிறார்கள் கவிஞர்கள். குரங்கு என்று கூறுகிறார்கள் வேதாந்திகள். நாயுடுபோன்ற உழைப்பாளிகளுக்கு அது அடிவானம் போல் நீண்டு செல்லுகிறது. பிரயாணத்தில் பெற்ற அனுபவங்களையும், தாமே ஆராய்ந்து அரிந்த உண்மைகளையும் அவர் விவரித்துக் கூறும்போது முடிவேயில்லாமல் ஒரு ஆயுள் பூராவும் அமர்ந்து கேட்டாலும் தீராது போல் தோன்றும்.

அமெரிக்காவில் அவர் சுற்றித் திரிந்தபோது விஞ்ஞானக் கலை சம்பந்தமான பல அரிய உண்மைகளை அங்குக் கற்றுக்கொண்டார். ஆனால் அமெரிக்கத் தொழில் நிபுணர்கள் நாயுடு அவர்களின் விஞ்ஞான மேதையை நன்கு உணர்ந்துகொண்டதுடன், அதைப் பயன்படுத்தியும் நல்ல லாபமடைந்திருக்கிறார்கள். நாயுடு அவர்கள் கண்டுபிடித்த பல அரிய விஞ்ஞானப் பொருள்களை அமெரிக்கரே கண்டு அதிசயித்திருக்கிறார் கள். அவற்றை அமெரிக்க மக்களின் உபயோகத்துக்குப் பெற்று வழங்க அமெரிக்க வர்த்தகர் பலர் முயற்சித்தும் நாயுடு அவர்கள் தம் தயாரிப்பான எதையும் அங்கு விற்பனை செய்ய விருப்பமின்றிப் புறப்பட்டுவிட்டார். 1940-ல் அவர் அங்கு தங்கியிருந்தபோது அமெரிக்கர் ஒருவர் இந்தியாவில் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

" திருவாளர் நாயுடு அவர்கள் கண்டுபிடித்திருக்கும் அரிய விஞ்ஞானப் பொருள்களை இங்கே நாங்கள் கண்டு வியந்துபோனோம். ஆனால், அவற்றைப் பெருவாரியாக இங்கேயே உற்பத்தி செய்து விநியோகிக்கும் உரிமையை அவர் எங்களுக்கு விற்கமுடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அமெரிக்கராகிய எங்களுக்கு அந்தப் பொருள்களின் அருமையும் பயனும் நன்கு தெரியும். உண்மையிலேயே அந்தப் பொருள்களுக்கேற்ற சந்தை

அமெரிக்காதான். எங்களுக்கு அவற்றை விற்ருல் அது எவ்வளவோ பயனுடையதாயிருக்கும். ஆனல், என்ன செய்வது? அவர்தான் எங்கள் விருப்பத்திற்கிணங்கவில்லையே!''

மற்ெருரு கடிதத்திலும் நாயுடு அவர்களின் விஞ்ஞான அறிவைப் பற்றிய அமெரிக்கர் ஒருவரின் போற்றுதல் காணப்படுகிறது.

"நாயுடு அவர்கள் இங்கே எங்கள் நாட்டில் அறிந்துகொண்ட பல அரிய விஞ்ஞான நுணுக்கங்களுக்காக மிகவும் மகிழ்ந்து பகிரங்கமாக அவற்றைப் பாராட்டி வருகிருர்; இவ்வளவு பெரிய மேதையைச் சாதாரணமாகக் காண முடிவதில்லை என்று என் நண்பர் ஒருவர் அவரைப் புகழ்ந்துகொண்டேயிருக்கிருர். இதை விட நாயுடு அவர்களின் அபாரமான திறமையினுல் இருபதினுயிரம் டாலர்கள் வீணுகிக்கொண்டிருந்த ஒரு சிறு நுணுக்கம் எங்களுக்குப் புரிந்துவிட்டது. அவருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு இந்தப் பெரும் நஷ்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டோம். ஒரு யந்திரத்தின் இயக்கம் சீர்படாமல் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தபோது என்ன செய்வதென்று அறியாமல் அவதிப்பட்டோம்.

"நாயுடு அவர்கள் கூறிய ஆலோசனையின்படி அந்த யந்திரத்தைத் திருத்தி அமைத்ததும் எங்களுக்கு வெற்றி கிட்டியது. தக்க சமயத்தில் அவருடைய அந்தத் திறமையான ஆலோசனை எங்களுக்குக் கிடைக்காமல் போயிருந்தால் இருபதாயிரம் டாலர்கள் எங்களுக்கு விரயமாயிருக்கும்'' என்பதாம்.

நாயுடு அவர்களின் அருமையான சவரப்பிடி, கத்தி இவற்றைத் தங்களுடைய தொழிற்சாலையில் தயாரித்து

விநியோகிக்க உதவி செய்வதனால் மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் டாலர் ஊதியம் தருவதாக அமெரிக்கத் தொழிற்சாலை ஒன்று நாயுடு அவர்களைக் கேட்டுக் கொண்டது. ஆனால், தாம் அமெரிக்க அனுபவங்களைக் கற்றுணர்ந்து இந்தியா திரும்புவதே தம் நோக்கமென்று கூறி அவர் அதனை மறுத்துவிட்டார்.

வெளிநாட்டார் தயாரித்த யந்திரங்களின் நுண்ணிய பாகங்களைச் சீராக்கி வைக்கும் அளவுக்குத் தனித் திறமை படைத்த மாபெரும் விஞ்ஞானி ஒருவர் தமிழ் மகன் என்பதும் அவர்தான் நமது சரித்திரத் தலைவர் திரு. ஜி. டி. நாயுடு என்பதும் நம்மில் எத்தனைபேருக்குத் தெரியும்? அமெரிக்கரும் ஏனைய நாட்டினரும் நமது தொழில் விஞ்ஞான மன்னர் நாயுடுவைப் பற்றி நம்மை விட மிக நன்றாக உணர்ந்து போற்றி வருகிறார்கள். நமது நாட்டில் அவர் பிறந்து வளர்ந்து செயல் புரிந்திருப்பது காட்டில் பொழியும் நிலவு மாதிரி ஆகிவிட்டதை எண்ணும்போதுதான் நாணம் மேலிடுகிறது.

அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் பிறந்திருந்தால் உலகப் பிரசித்திப் பெற்று விளங்கி, மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டுப் போயிருக்க வேண்டிய மேதை ஜி. டி. நாயுடுவின் வாழ்வு அவர் நம்மிடைப் பிறந்ததனால் ஒளி குன்றிக் கிடக்கிறது. அவரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சிகூட நம் நாட்டில் ஏற்படவில்லை.

அமெரிக்காவிலிருந்து புறப்படும் முன்பு எதிர்பாராத பல அசௌகரியங்களுக்கும் அவர் ஆளாக நேர்ந்திருக்கிறது. வயிற்றுவலி அவரை அங்கேயும் தொடர்ந்து சங்கடம் விளைவித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, கையில் போதிய பணம் இல்லாமல் கூட அவர் அவதிப்பட

நேர்ந்திருக்கிறது. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்ததனால் இந்தியாவில் குறிப்பிட்ட அளவுக்குமேல் அமெரிக்காவுக்குப் பணம் அனுப்புவது தடைபட்டிருந்ததே காரணமாகும். நாயுடு இது சம்பந்தமாக ஒரு கடிதத்தில் எழுதியிருப்பதாவது, ''செயிண்ட் லூயியில், நான் தங்கியிருந்தபோது, கோயம்புத்தூரிலிருந்து, என் பேருக்குப் பத்தாயிரம் ரூபாய் வரவழைக்க ஏற்பாடு செய்தேன் கோவையில் என் காரியாலயத்திலிருந்து ரூபாய் பத்தாயிரமும் இம்பீரியல் பாங்கு மூலம் அனுப்ப முயற்சித்ததாகவும் ஆனால் அவ்வளவு பெரிய தொகையை அனுப்பி வைக்க பாங்கு மறுத்துவிட்டதாகவும் தந்தி வந்தது. இந்தத் தந்தியைப் பார்த்ததும் எனக்குத் திகில் ஏற்பட்டுவிட்டது. பணத்துகாக என்ன வழியென்று தெரியவில்லை. பல வாரங்கள் வரையிலும் எல்லாச் செலவுகளையும் சுருக்கிக்கொண்டு எங்கும் வெளியில் வியாபார நிமித்தம் செல்லாமல் இருக்க வேண்டியதாகிவிட்டது. அதுவரையிலும் பத்தாயிரம் டாலர் வரையிலுமே நான் பல கம்பெனிகளில் சாமான்களுக்கு ஆர்டர் கொடுத்திருந்தேன்.''

மிக மிகக் குறைந்த உடைகள், அன்றாட உபயோகத்துக்கான சாமான்கள் மட்டுமே கொண்டிருந்தாலும், நாயுடு அவர்கள் அமெரிக்காவிலிருந்து புறப்படும்போது அவரிடம் சேர்ந்துவிட்ட பொருள் மலைபோல் குவிந்துவிட்டது.

ஊருக்குத்திரும்பி வருவதற்குத் தேவையான ஏற்பாடு செய்துகொண்டு கடல் மார்க்கமாய்ப் புறப்பட்டுவிட்ட நாயுடு தூரக்கிழக்குப் பிரதேசங்களின் வழியாக இந்தியாவின் மேலைக் கடற்கரையில் கொச்சித் துறைமுகத்தில் வந்திறங்கினார். ஒரு ஆண்டுக்கு மேலாக அயல்நாடுகளுக்குச் சென்றிருந்து அவர் திரும்பி இந்தியா வருவதற்கு முன்பாக, அவர் ஒரு நாஜி அணு

தாபி என்ற கீர்த்தியும் வதந்தி உருவத்தில் கொச்சித் துறைமுகம் வந்து சேர்ந்துவிட்டது.

எனவே அவரைக் கப்பலிலிருந்து கரையில் வரவேற்கச் சுங்க அதிகாரிகளும் துப்பறி நிபுணர்களும் தயாராய்க் காத்திருந்ததில் வியப்பில்லை. அவருடைய பெட்டி படுக்கைகளையும், பிலிம் சுருள்கள், புத்தகங்கள், பைல்கள் அனைத்தையும், விடாமல் சோதனை செய்தார்கள். அவரிடமிருந்த பெரிய கோவை ஒன்றில் அவர் சென்று சுற்றிப் பார்த்த இடங்களைப் பற்றிய சரித்திர, பூகோள, ஜனன மரண, சமுதாயப் புள்ளி விவரங்கள் விவரமாக டைப் அடித்த ஏடுகள் நிறைய இருந்தன. ஜர்மனியைப் பற்றிய உண்மைகள் அவற்றில் எங்கேனும் ஒளிந்து கொண்டிருக்கக் கூடுமோ என்று அதிகாரிகள் ஆவலுடன் தேடிப்பார்த்திருப்பார்கள். நாஜிகளுடன் நாயுடுவுக்கு ஏதாவது ரகசிய ஒப்பந்தங்கள் இருக்கக் கூடுமென்றும் அவர்கள் சந்தேகப்பட்டிருக்கலாம் எனவே, அவர் வசமிருந்த முப்பத்தேழாயிரம் கடிதங்களையும் ஒன்றுகூட விடாமல் அதிகாரிகள் படித்துப் பார்க்க வேண்டிய தொல்லைக்கு ஆளானார்கள்.

இப்படி ஐந்து முழு நாட்கள் கண்ணில் திரிபோட்டுக் கொண்டு, கொச்சித் துறைமுகத்தில் அகாரிகள் நாயுடுவைத் தங்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கிய பிறகு, பட்டதெல்லாம் வீண் சிரமம் என்று அறிந்து அவரை விட்டுவிட்டார்கள்.

நாயுடுவைத் தொல்லைப் படுத்துவதில் மிகவும் அக்கறையுள்ள போலீஸ்காரர்கள் இந்தச் சோதனையில் தோல்வியடைந்ததுடன், "நாஜி அனுதாபி நாயுடு" என்று வந்த வதந்தி தோன்றிய சுவடும் தெரியாமல் மறைந்தது.

# 3. விஞ்ஞான சாதனைகள்

முதன் முதலில் அரிசியைப் பதம் பார்த்து வடிக்கக் கண்டுபிடித்தவரைப் பற்றி யாராவது கேள்விப்பட்டதுண்டா? நாம் குளிருக்கும் மானத்திற்கும் அஞ்சிப் போர்த்திக்கொள்ளும் உடைகளைக் கண்டுபிடித்தவர் யார் தெரியுமா? சுவரில் அடிக்கும் ஆணி, அடுப்பூதும் குழல் இவற்றை முதன் முதல் செய்து கொடுத்தவரைப் பற்றி சரித்திரக் குறிப்பு ஏதாவது இருக்கிறதா? முதன் முதலில் இவையெல்லாம் யாராவது கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அந்த எத்தனையோ மகோபகாரிகள் தற்செயலாகவோ, விரும்பி முயன்றோ பல பௌதீக உண்மைகளைக் கண்டுபிடித்து உலகுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். நாம் வழி வழியாக எத்தனையோ தலைமுறைகள் அந்த அறிவை நமது வாழ்வின் பயனுக்கு உபயோகித்துக் கொண்டு வந்திருக்கிறோம். காரண காரிய ஞானமில்லாமலேகூட பல வசதிகளை நாம் பயன்படுத்திக்கொள்ளுகிறோம்.

மின்சார விளக்கு வேண்டுமென்றால் நம் வீட்டில் அல்லது காரியாலயத்தில் மின்சாரத் தொழிலாளர் வந்து கம்பிகளையும் ஒளி விளக்குகளையும் இணைத்து விட்டுச் செல்கிறார்கள். பொத்தானை அமுக்கினால் ஒளி கிடைத்துவிடுகிறது. ஏற்றவும் அணைக்கவும் மட்டும் தெரிந்துகொண்டாலே நமக்குப் போதுமானதாகிவிடுகிறது. மின்சாரக் கலை நுணுக்கங்களை நாம் பயின்று தானாக வேண்டுமென்றில்லை; நெசவுத் தொழில் தெரியாதவர் ஆடை கட்டிக்கொள்ளவும், விவசாயம் அறியாதவர்கள் உணவு உண்ணவும், கொத்து வேலை, தச்சுத்

தொழில் அறியாதவர் வீடுகளில் குடியிருக்கவும் தடை ஏதாவது உண்டா? தனித்தனி மனிதர்கள் தங்கள் அறிவாற்றல்களால் சமூக முழுமைக்கும் பேருதவி புரிந்த போதிலும் அவர்களைப் பற்றிய சரித்திரக் குறிப்பு பெரும்பாலோருக்குத் தெரியாமலே மறைந்துதான் போகிறது.

இந்த நூற்றுண்டிலே இப்படிப் பல விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடித்து உதவியவர்களின் சரித்திரங்கள் புண்ணியவசமாகக் கிடைத்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நம்மிடையே வாழ்ந்திருக்கும் திருவாளர் ஜி. டி நாயுடு அவர்கள் விஞ்ஞான ஆற்றல் படைத்த மேதையென்பதும் அவர் பல அரிய பொருள்களைக் கண்டுபிடித்திருக்கிருரென்பதும் நமது நாட்டிற்குப் பெருமை தருவதாகும்.

மேதைகள் பெரும்பாலோர் பள்ளிக்கூடத்தில் மழைக்குக்கூட ஒதுங்கியறியாதவர்களாகத்தான் இருந்திருக்கிறுர்கள். அனுபவ ஞானத்தால் பெரிய விஞ்ஞானியாகத் திகழ்ந்தாலும் பள்ளிக்கூடங்களை அவர்கள் வெறுக்கவில்லை. ஆனுல் "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்பதை மிக நன்கு அறிந்து அனுபவ பூர்வமான கல்வி இளைஞர்களுக்குத் தர வேண்டுமென்ற கருத்துடையவர்களாக இருக்கின்றுர்கள்.

நாயுடு மோட்டார் மன்னன் என்று பெயர் பெற்றிருந்த போதிலும் மின்சாரம், ரேடியோ, விவசாயம் போன்ற பல துறைகளிலும் அபார கலைத்திறன் பெற்றிருக்கிறுர். தவிர, அவரால் உற்பத்தி செய்யப்பட்ட, அல்லது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் மிகப்பல.

முதன் முதலில் வாலிப வயதில் மோட்டார் சைக்கிளைக் கண்டு வியந்த காலத்திலிருந்தே யந்திர நுணுக்

கங்களில் வியப்பும், அந்த வியப்புக்கு விடை கண்டு பிடிக்கத் தாமே முயன்று சேர்த்த அறிவும் அவரை யந்திர விஞ்ஞானம் நன்கறிந்த நிபுணராக்கி விட்டன.

முகச்சவரம் செய்வதற்காக அவர் தயாரித்த புது முறை "ரேசர், பிளேடு" ஆகியவை இந்தியா தளர்த்த ஏனைய நாட்டுச் சந்தையில் கிடைக்கும் மலிவுப்பொருளாக இருக்கின்றன. இந்த "ரேசர்-பிளேடு" இவற்றிற்கு ஜெர்மனியிலும் லக்ஷ்மணபுரியிலுமாக இரண்டு பரிசுகளும் சென்னையில் ஒன்றும் அவர் பெற்றிருக்கிறார்.

மோட்டார் யந்திரத்தில் நாயுடு அவர்களின் அறிவால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சிறு மாற்றத்தின் காரணமாக ஆச்சரியகரமான ஒரு பயன் விளைந்தது. இதன்படி நூற்றுக்கணக்கான மைல்கள் ஓடும்வரை மோட்டார் வண்டியின் "ரேடியேட்ட"ரில் அடிக்கடி தண்ணீர் விடவேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. பின்னர், 1936-ல் 'வைப்ரேடர்' பரிசோதனைக்காக ஒரு கருவியும் அவர் கண்டுபிடித்தார். "பிலிம் காமிரா"வில் காட்சியின் தூரத்தை வேண்டியபடி அமைத்துக் கொள்ளும் பாகம் ஒன்றையும் அவர் சிருஷ்டித்திருக்கிறார். இதனால் வெகு தொலைவில் இருக்கும் காட்சியையும் அண்மையில் இருப்பதுபோல் புகைப்படக் கருவிக்குள் இருக்கும் கண்ணாடித் திரையில் கொண்டுவந்து நிறுத்தி படம் எடுக்க முடியும் என்று தெரிகிறது. பழ ரசத்தை ஒட்டப் பிழிந்து எடுக்கும் புது முறைக் கருவி ஒன்றும் அவர் தயாரிப்பு ஆகும்.

அவருடைய சிருஷ்டிகளில் மிகவும் அருமையான ஒன்று "வோட்டு" எடுக்கும் யந்திரம். "வோட்டுப்" போட்ட பிறகு அந்தப் பெட்டியில் பேத்து மாத்தல் செய்யமுடியாதபடி அந்த யந்திரம் அமைக்கப்பட்டிருக்

கிறது. ஜனநாயகத் தத்துவம் விரிந்த அளவில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய நம்முடைய நாட்டில் அந்த யந்திரம் நமக்கு எவ்வளவோ உபயோகமாக விளங்கக் கூடுமல்லவா! எடிசன் என்ற பெரும் விஞ்ஞானி அந்த மாதிரிக் கருவி ஒன்றை முன்பு கண்டு பிடித்தாராம். ஆனால் அந்த நாட்டு அரசியல் வாதிகள் அதைப்பயன் படுத்திக்கொள்ள விரும்பாது அதை இழந்துவிட்டன ராம். நாயுடு தாம் சொந்த முறையில் இந்த யத்திரத் தைத் தயாரித்துச் சென்னையில் நடைபெற்ற "பார்க் பேர்" கண்காட்சியில் அதை வேலைசெய்து காட்டினர்.

வாழ்வில் எத்தனையோ நெருக்கடிகளுக்கும் தொல்லை களுக்குமிடையில் இப்படி நாயுடு அவர்கள் கண்டுபிடித் திருக்கும் கருவிகள் அன்ருட வாழ்க்கை உபயோகத் துக்கு ஏற்றவையாகும். ஒவ்வொரு நாளும் மணிக் கணக்கில் அவர் ஆழ்ந்து அமர்ந்து வேலைசெய்து ஒரு சில வாரங்களில் தம் லட்சிய சித்தியை எய்திவிடுவதென் பதே அவருடைய இயல்பாக இருந்திருக்கிறது. இன் றும் நாளையும் அவர் திட்டமிட்டிருக்கும் பல்வேறு நூதன சிருஷ்டிப் பொருள்களின் முழுமையைக் காண அவர் அவகாசம் நேர்ந்த போதெல்லாம் உழைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அவர் வியர்த்தமாக்கிக் கொண்டிருக்கும் நேரமெல்லாம் நம்முடைய சமூகத் தின் பெரு நஷ்டமாயிருக்கிறது. தொல்லைகளிலே இருந்து அவர் மீட்கப்பட்டாலும், மீண்டு விட்டாலும், தமிழ் நாட்டின் பெருமையை எந்நாட்டவரும் போற்ற கூடிய மாபெரும் உயர்வை அடைய முடியும். 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய் தல் வேண்டும்' என்றும், மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசுவதிலோர் மகிமையில்லை'யென்றும் பாரதி கூறியிருக்கிருரே அத்தகைய திறமையான புலமை

படைத்த நுண்ணறிவாளர் நாயுடு அவர்கள் என்பதில் நாம் பெருமைகொள்ள இடமிருக்கிறது.

## பொருட்காட்சிச்சாலை :

நாயுடு அவர்களால் கோவையில் ஒரு விஞ்ஞானப் பொருட்காட்சிசாலை அமைக்கப் பெற்றுள்ளது. அவரால் தோற்றுவிக்கப்பட்ட கருவிகளும், இந்தியாவில் வேறெங்கும் காணக் கிடைக்காதவையும், வேற்று நாடுகளில் அரிதின் முயன்று தேடிச் சேகரித்தவையுமான எண்ணற்ற விஞ்ஞானப் பொருட்குவைகள் இங்கே அமைத்து வைக்கப்பெற்றிருக்கின்றன. ஆண்டுதோறும் கல்லூரி விடுமுறைகாலங்களில், யந்திர விஞ்ஞான மாணவர்கள் வந்து பயிற்சி பெறுவதற்கென்று 4,6,8 வாரங்கள் என்ற அளவில் குறுகிய கால வகுப்புக்கள் அங்கு நடைபெறுகின்றன. யந்திரக் கலாசாலைகளில் பல ஆண்டுகள் பயின்று பெறும் கல்வியை இந்தக் குறுகிய கால வகுப்புக்களில் பயிற்சி பெறுவோர் கற்றுத் தேர்ந்து செயல்புரியும் சக்தியைப் பெறுகிறார்கள்.

பொதுமக்கள் வந்து பார்த்து இவற்றைப் பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டாக ஆண்டுதோறும் இரண்டு வாரங்கள் இந்தக் காட்சிச்சாலை குறிப்பிட்ட நேரங்களில் திறந்து வைக்கப்பட்டிருக்கும். விஞ்ஞான விஞ்ஞைகளைச் செய்து காட்டி விளக்கிக் கூறப்படுவதுடன், ஒவ்வொரு நாளும் பேரறிஞர் பலரின் பயனுடைய சொற்பெருக்குகள் பலவும் நடைபெறும். "அழிப்பதற்காக ஆக்கப்பட்ட கட்டிடம்" என்று ஆங்கிலத்தில் அதற்குப் பெயரிட்டிருக்கிறார். "அறியாமையை அழிப்பதற்கு" என்று அதற்குப் பொருள் கொள்ளலாமல்லவா?

## தொழில் வளர்ச்சி:

நாயுடு அவர்களின் விஞ்ஞானச் சாதனைகளைப்பற்றி விரிவாகக் கலை நுணுக்கங்களுடன் விவரித்துக்கூற வசதியில்லை. விஞ்ஞான மாணவர்கள் நுட்பமாக பயிலத் தக்கவை அவை.



**கோவையில் நாயுடு அவர்களது யந்திர விஞ்ஞானப் பொருட்காட்சிச் சாலையின் உட்புறத் தோற்றம்.**

அவரிடம் இருக்கும் யந்திரங்கள் மதிப்பீடு சுமார் பல லட்சங்களுக்கு மேல் இருக்கவேண்டும் என்று தெரிகிறது. ஆனல், அவையெல்லாம் இப்போது சேகரம் செய்யப்படவோ, உண்டாக்கப்படவோ வேண்டுமானல் கோடிக் கணக்கில் செலவிட்டாலும் மற்றவரால் ஆகிற காரியமாகத் தோன்றவில்லை.

இரும்புச் சட்டங்கள், பலகைகள் இவற்றிலுள்ள விரிசல்களைச் சோதனை செய்து கண்டுபிடிக்கும் கருவி இவற்றுள் ஒன்று. அமெரிக்காவில் மூவாயிர ரூபாய் செலவில் தயாராகும் ரீ போரிங் யந்திரம் ஒன்றை இங்கே பாதிச் செலவில் உற்பத்தி செய்திருக்கிறார் நாயுடு.

வால்வுகள் தவிர ஏனைய பகுதிகளையெல்லாம் தாமே உருவாக்கிய அரிய பொருள் யு. எம். எஸ், ரேடியோ. இந்த ரேடியோவுக்கு வால்வுகள் மட்டும் கிடைத்தால் உருவாக்கி எழுபது எண்பது ரூபாய்க்கு ஒரு ரேடியோ வீதம் நம் நாட்டில் உள்ள ஏழைகள் கூட வாங்கிப் பயனடையச் செய்யலாமென்பது அவருடைய திட்டம். ஆனால், வால்வுகளை இறக்குமதி செய்துகொள்ள வேண்டிய அனுமதி யின்மையால் இந்தப் பயன் நமக்குக் கிடைக்க வழியில்லாதிருக்கிறது.

சவரக் கத்தியைப்பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். இதற்குத் தேவையான எஃகுத் தகடுகளைக்கூட வெளிநாட்டிலிருந்து தருவித்துப் பயன்படுத்த முடியாமல் அவர் தாம் வைத்திருக்கும் இந்த அரிய பொருளின் உற்பத்தி உரிமைகளை அமெரிக்க வர்த்தகருக்கு இனமாகவே கொடுத்துவிட்டார். இந்த உரிமைகளுக்காகப் பத்து லட்சம் ரூபாயை விலையாகக் கொடுக்க அந்த அமெரிக்க வர்த்தகர் தயாராயிருந்தும் அவரிடமிருந்து விலையெதுவும் பெற நாயுடு விரும்பவில்லை. பெல்ஜியம் கண்ணாடிகளைவிட மிக உயர்ந்த முறையில் வேடிக்கையான பிரதிபிம்பங்களைக் காட்டும் அருமையான கண்ணாடிகளை அவர் தயாரித்திருக்கிறார்.

## மோட்டார் விஞ்ஞானம்

இரண்டாவது முறையாக ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் யாத்திரை சென்று திரும்பியவுடன் இந்தியாவில் மோட்டார் வண்டி உற்பத்திச் சாலை ஒன்றைத் தொடங்குவதற்கு அவர் திட்டமிட்டிருந்தார். அதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை ஓர் ஆங்கிலேய வர்த்தகக் கழகத்துடன் செய்திருந்தார். டியஸல் மோட்டார் உற்பத்தி தொடங்குவதற்காக ஒரு ஜெர்மன் கம்பெனியாருடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்,

அதே சமயத்தில் ஜி. டி. பிர்லாவும், கெய்தான் என்பவரும் கோவைக்கு வந்திருந்தனர். அவர்கள் நாயுடு அவர்களுடன் கலந்து பேசினுர்கள். எதிர் பார்க்கப்பட்ட யுத்த பீதியினுலும், வேறு காரணங்களை முன்னிட்டும் வெளிநாட்டு வர்த்தகர்களுடன் சிக்கலான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது அவ்வளவு சரியல்லவென்று நாயுடுவுக்கு ஆலோசனை கூறப்பட்டது. மேலும், அந்தச் சமயத்தில் நாயுடு அவர்கள் தம்மிடம் இருந்த பொருளாதார வசதி இவ்வளவு பெரிய சாதனைகளுக்குப் போதுமானதல்லவென்று கண்டதுடன், வெளியாரிடமிருந்து தேவையான பொருளாதார உதவி கிடைக்குமா வென்பதிலும் ஐயுற்ருர். எனவே, குறைந்த மூலதனத்தை நம்பி ஈடுபட்டால் பெரிய ஏமாற்றமே விளையலாமென்ற அச்சத்தால் திட்டங்களை விட்டுவிட வேண்டியதாயிற்று.

ஆயினும் அவர் வாளாவிருந்துவிடவில்லை. எலெக்ட்ரிக் மோட்டார்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை மட்டும் தொடங்கிவிட்டார். இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய எலெக்ட்ரிக் மோட்டார்

தொழிற்சாலை இஃது ஒன்றுதான். "பால்பேரிங்" ஒன்று தவிர மற்ற ஏனைய பாகங்கள் அனைத்தும் அவருடைய தொழிற்சாலையில் வேகமாக உருவாகிக்கொண்டிருந்தன. வெளிநாட்டிலிருந்து வரும் எலெக்டரிக் மோட்டார்களைவிட அவர் தயாரித்தவை வேலை செய்யும் திறனுள் மிகுந்தும், விலை மலிவாகவும் இருந்தன. எனவே இரண்டாவது உலகப் போர் தொடக்க நாட்களில் ஓரிரு ஆண்டுகள் அவர் உற்பத்தி செய்த மோட்டார்கள் நாட்டின் பல பாகங்களிலும் நல்ல விலையில் விற்பனையாகி வந்தன. மைசூர் சமஸ்தானம், ஆற்காடு போன்ற பகுதிகளில் விவசாயத்திற்காகவும் வேறு வேலைகளுக்காகவும் 1939–40-ல் தயாரித்துக் கொடுக்கப்பட்ட மோட்டார்கள் பத்து ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகு இன்றும் கெடாமல் வேலைசெய்து வருகின்றன. சேலம், கோயில்பட்டி, கோவை ஆகிய நகரங்களிலுள்ள பெரிய மில்களிலெல்லாம் கூட இவருடைய மோட்டார்களையே வாங்கி உபயோகித்தார்கள். இதில் ஒரு வெற்றி என்னவென்றால் இந்தத் துறையில் கீர்த்தி பெற்ற ஓர் ஆங்கிலக் கம்பெனியே இந்த மோட்டார்களைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு, இவற்றின் விற்பனை உரிமையைத் தனக்குக் கொடுத்துவிடும்படி நாயுடு அவர்களிடம் பேரம் பேச ஆரம்பித்து விட்டது.

இந்தத் தொழிற்சாலையைத் தோற்றிய பிறகு தான் நாயுடு அவர்களின் மூன்றாவது வெளிநாட்டு யாத்திரை தொடங்கியது. அந்தப் பிரயாணத்தில் அமெரிக்கக் கம்பெனிகளுடன் அவர் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டார். அவற்றில் சில, ரேடியோ பெட்டிகள், காலனுக்கு அறுபது மைல் ஓடக்கூடிய சிறு மோட்டார் வண்டிகள், டீயசல் மோட்டார்கள், இப்போது உபயோகத்திலிருப்

பதைவிட 50,100 சதவிகிதம் அதிகத் தூரம் ஓடக்கூடிய வலிமை இவற்றையெல்லாம் கோவையிலேயே உற்பத்தி செய்து இந்தியா முழுமையின் சுய தேவைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மாகும். அவர் இந்தியா திரும்பி வந்த பிறகு, அப்போது கொச்சி திவானுக இருந்த சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் நாயுடுவுக்கு ஊக்கமூட்டும் அழைப்பை அனுப்பி அவர் சாதனைகளைச் சமஸ்தானத்தில் தொடங்குமாறு கேட்டார். ஆனுல், நாயுடு அவர்களோ சென்னை மாகாணத்திலேயே தொடங்கவிரும்பி அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

தென்னிந்தியாவிலேயே பல தொழிற்சாலைகளைத் தோற்றுவித்துப் பொருள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அவர் விரும்பியவாறு யாவும் நடைபெற்றுவிடவில்லை. தற்காலத் தேவைக்கு ஏற்ற வழியில் மோட்டார் வண்டித் தொழிற்சாலையைத் தொடங்க எண்ணினுர். முன்பு 1936-ல் ஒரு தடவை இதற்கான முயற்சிகள் தொடங்கி வடக்கேயிருந்து வந்த பிர்லா, கெய்தான் ஆகியவர்களுடன் கலந்து பேசியதன் காரணமாகவும் பொருளாதார வசதிக் குறைவை முன்னிட்டும் கைவிடப்பட்ட தொழிற்சாலை மீண்டும் இரண்டு ஆண்டுகளில் திட்டமிடப்பட்டது. ஆனுல், இதற்கு முன்பே எலெக்ட்ரிக் மோட்டார் தொழிற்சாலை செம்புக் கம்பிகளும், இரும்புத் தகடுகளும் கிடைக்காமல் வேலை நின்றுபோய்விட்டிருந்தபடியால், அதே தொழிற்சாலையை உபயோகித்து மோட்டார் வண்டி உற்பத்தியை ஆரம்பிக்கலாமென்று முயற்சித்தார் நாயுடு அவர் செய்து பார்த்த சோதனைகளின் காரணமாக மோட்டார் வண்டிகளுக்குத் தேவையான பெரும் பாகங்களை இங்கேயே தயாரிக்க முடியுமென்பது ருசுவாயிற்று. அவரது

புதிய அமைப்பின்படி பஸ், லாரி இவற்றின் "சேஸிஸ்" (அடிப்பீடம்)களை குறைந்தது பதினைந்து வருஷங்கள் வரை புதுப்பிக்க வேண்டிய அவசியமே இராது என்பது உணரப்பட்டது. இந்த முறையைக் கையாண்டிருந்தால் வெளிநாடுகளுக்குச் சென்றுகொண்டிருக்கும் நமது செல்வம் நம் நாட்டிலேயே பெருகி வளர்வதற்கு வழி ஏற்பட்டிருக்கும்.

பரிசோதனைகள் திருப்திகரமாக நடைபெற்றுத் திட்டங்களெல்லாம் தயாராகிவிட்டன. யுத்தம் முடிந்ததும் மோட்டார் வண்டித் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டியதுதான். ஆனால், யுத்தகால ஏற்பாடுகளாக மூலதனம் போட்டு எந்தத் தொழிலைத் தொடங்கினாலும் மத்திய சர்க்காரின் முன் அனுமதி தேவையாக இருந்தது. எனவே, புதிய மோட்டார் வண்டித் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தேவையான மூலதனப் பங்குகளை வெளியிட மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதி கோரி நாயுடு விண்ணப்பம் செய்துகொண்டது வீணாயிற்று. சென்னை மாகாண அரசாங்கம் பலமாகச் சிபாரிசு செய்து அனுப்பியிருந்துங்கூட மத்திய சர்க்கார் அசைந்து கொடுக்கவில்லை.

நாயுடு அவர்கள் முதலில் தொடங்கிய ரேடியோ தொழிற்சாலை வளர்ச்சி பெற முடியாமலும், எலெக்ட்ரிக் மோட்டார் தொழிற்சாலைக்குத் தேவையான செப்புக் கம்பி, இரும்புத் தகடுகள் கிடைக்காமலும் அவை பயனின்றிப் போய்விட்டதுடன் சென்னை அரசாங்க ஆதரவுடன் ஆரம்பிக்கவிருந்த மோட்டார் வண்டித் தொழிற்சாலையும் இவ்விதமே தலைகாட்டாமல் போய் விட்டது.

நாயுடு மிகவும் மனமுடைந்து போனுர். எனவே அவர் தொடங்க உத்தேசித்திருந்த டயர் உற்பத்தி, டீயசல் மோட்டார் ரிப்ரிஜிரேடர், சிறிய மோட்டார் வண்டிகள் ஆகிய திட்டங்களை யெல்லாம் கைவிட்டு விட்டார்.

சுமார் அறுநூறு விதமான தொழில்களை நடத்த வேண்டுமென்று நாயுடு அவர்கள் முதலில் திட்டமிட்டுத் தமிழ்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டு மென்று கனவுகள் கண்டார். அதற்குத் தேவையான அனுபவ அறிவை அவர் அரும்பாடுபட்டுச் சேகரம் செய்திருந்தார். இவற்றில் எண்பது தொழிலுக்குத் தேவையான குறிப்பு-புள்ளி விவரங்கள்-பிளான்கள் — சாமான்கள் - ஆகியவற்றைப் பற்றி நன்கு ஆராய்ந்து திட்டங்கள் உருவாச்கி நடைமுறை வேலைகளைப்பற்றி அறிக்கையும் தயாரித்து வைத்திருந்தார். இந்த எண் பதில் சில தொழில்கள் ஆரம்பிக்கவும் பட்டன. அவை யனைத்தும் அப்படி விழலுக்கிறைத்த நீராய் விட்டதென் ருல நாயுடு போன்ற சமூக ஊழியரின் உள்ளம் எப்படி மாறிப்போயிருக்கும்.

மோட்டார் போக்குவரத்து நம் நாட்டில் ஆரம்ப மான அடி நாளிலேயே நாயுடு இதில் ஈடுபட்டு விட்டவ ராகையால் அவருடைய அனுபவங்களே நம்முடைய நாட்டின் மோட்டார்த் துறையின் சரித்திரமாகவும் கொள்ளத்தகும்.

புது மோகத்தில் தேவைக்கு அதிகமான வண்டிகள் காலவரையறையும் கட்டண நிர்ணயமுமின்றிப் போட்டி யிட்டு ஓடிய காலம் ஒன்று உண்டு. இவற்ருல் பாதைகள் வலிவிழந்து போனதுடன், தேவைக்கு மேலாகப் பெட்ரோல் புகைந்து விடுவதனுலும், வண்டிகள்,

அவற்றின் பாகங்கள்; சக்கரங்கள் இவற்றின் தேய்மானத்திலும் 1929-30-ல் கோவை ஜில்லாவில் மட்டும் சுமார் பத்து லட்சம் ரூபாய்கள் வீணாகிவிட்டனவென்று நாயுடுவின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஆரம்ப காலத்தில் அரசாங்கம் இந்தத்துறையைப் பற்றிக் கவனிக்காவிட்டாலும் பின்னாளில் நாயுடு அவர்களின் பல அரிய யோசனைகளை ஏற்றுப் பிரயாணிகளின் தேவையைக் கணக்கிட்டு ஒரு பாதையில் ஓடவேண்டிய வண்டிகளின் எண்ணிக்கை, அவற்றின் ஓட்டக் கால நிர்ணயம், கட்டண அடிப்படை இவற்றை ஒழுங்குபடுத்தும் விதிகளையும் வகுத்தது. அதற்கு முன் பத்து வண்டிகள் ஓடக்கூடிய பாதைகளில் இருபது முப்பது வண்டிகள் போட்டியிட்டு நஷ்டமடைந்தது உண்டு. யுத்தம் வந்து போக்குவரத்து வசதிகள் மிகவும் அருகிப்போய் மக்கள் பட்ட தொல்லைகள் கொஞ்சமல்ல. சமீப காலமாகத்தான் நிலைமை சற்று அபிவிருத்தியடைந்து வருவதையும் பார்க்கின்றோம்.

ஸ்தல ஸ்தாபனங்கள் அந்த நாளிலும் கூட மோட்டார் வண்டிகளின் நிர்வாகத்துக்கு உதவிசெய்யும் மனப்பான்மைகொண்டிருக்கவில்லை. முக்கியமான நகரங்களில் வண்டிகளுக்கு ஏற்ற நிலயங்களை அமைப்பதில் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களிடம் அனுமதி பெறுவதில் நாயுடு எவ்வளவோ இடர்ப்பட்டிருக்கிறார். அமெரிக்க முறையில் வசதியான ஏற்பாடுகளுடன் நிலயங்கள் அமைக்க நாயுடு அவர்கள் விரும்பியபோது சில நகரசபைகள் அவற்றை உதாசீனம் செய்ததுடன் கண்ணை மூடிக் கொண்டு வரிகள் விதிப்பதிலும் கருத்தைச் செலுத்தின. மேலும், அவர்கள் தாங்களாகவே ஒரு பாதையில் சொந்தமாக வண்டிகளை ஓட்டிப் பார்த்துத் தோற்றுவிட்டார்கள்.

தம்மிடமிருந்த பெரிய நூல் நிலயம் ஒன்றினையும் அதற்குத் தனிக் கட்டிடம் கட்டுவதற்காகப் பத்தாயிரம் ரூபாயையும், ஒரு நீச்சல் குளம் அமைக்க மற்றொரு பத்தாயிரமும் நன்கொடையாக ஏற்றுக்கொள்ளும்படி மன்றத்தாருக்கு அவர் தெரிவித்தபோதும் கூட அவர் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது என்ற பதில் கூட



**நாயுடு அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆறு அடி விட்டம் உள்ள நிலைக் கெடிகாரம்.**

எழுதாமல் நகரசபையார் ஒரே தூக்கம் போட்டு விட்டார்கள். அப்போது ஜில்லா போர்டுகளில் முக்கிய மான பதவியிலிருந்தவர்கள் நாயுடுவின் நன்கொடை யின் பொருளை விளங்கிக்கொள்ள முடியாமையினால் அவருடைய ஆலோசனையை ஏற்க மறுத்துவிட்டார்கள் போலும்.

மோட்டார் வண்டிகள் சம்பந்தமாக நாயுடு பட்ட அவதிகளைமட்டும் விவரிப்பதென்றால் அதுவே பெரிய நூலாகிவிடும். மோட்டார்ப் போக்குவரத்து பற்றிய சட்டதிட்டங்கள் அந்தக்காலத்தில் ஓர் ஒழுங்கில் இல்லாமல் இருந்ததே அதன் காரணமாக இருக்கலாம். வண்டிகளிலும், அவற்றை நிறுத்தி வைக்கும் நிலையங்களிலும், பழுது பார்க்கும் ஏற்பாடுகளிலும், பொதுமக்களுக்கான வசதிகளிலும், பாதைகளில் பழகுவதிலும், தொழில் முன்னேற்றத்திலும், நெருக்கடியான காலங்களில் அரசாங்கத்திற்கு உதவி செய்வதிலுமாகப் பல துறைகளிலும் மோட்டார்த் தொழில் முன்னேற்றத்திற்கு நாயுடு செய்திருக்கும் ஏற்பாடுகள் மிகச் சிறந்தவை.

கோவையில் யு. எம். எஸ். மத்திய நிலையம் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட நவீன சாதனங்களுடன் திகழ்கிறது. சுகாதார ஏற்பாடுகளெல்லாம் அமெரிக்க நாகரீகத்துடன் திறமையாக நடைபெறுகின்றன. வண்டிகள் வந்து நின்று பிரயாணிகள் ஏறிச் செல்லும் விசாலமான முற்றம் அவ்வளவு பரிசுத்தமாக இந்தியாவில் வேறெங்கும் காணமுடியாதென்று பல அறிஞர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

யு. எம். எஸ். மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ரயில்வேக்கள் பெரும்பாலும் பட்டாளத்து சிப்பாய்களையும், ராணுவத் தளவாடங்களையும், உணவுப் பொருளையும் நாட்டின் பல பாகங்களுக்குக் கொண்டு செல்லவும், ஏற்றுமதி இறக்குமதிக்கும் மட்டுமே பயன்பட்டுக் கொண்டிருந்தன. புதிய மோட்டார் வண்டிகளோ, ரப்பர் சக்கரங்களோ, வண்டியின் பாகங்களோ வெளி நாடுகளிலிருந்து வரத்து நின்று போய்விட்டது. இந்த

நிலையில் பொதுஜனங்களுக்குப் பிரயாண வசதி என்பது நரக வேதனை என்று சொல்லக்கூடிய நிலைக்கு மாறி விட்டது.

காசி, ராமேஸ்வரம், கும்பகோணம், கும்பமேளா, ஹரித்துவாரம் முதலான இடங்களுக்குச் சென்று புண்ணியம் தேடிக்கொள்ளுமாறு விளம்பரம் செய்து பிரயாணிகளைச் சேர்த்தகாலம் மலையேறி, அவசியமிருந்தால் தவிரப் பிரயாணம் செய்யவேண்டாம் என்று ரயில்வேக்காரர்கள் அழாக்குறையாக மக்களை வேண்டிக்கொள்ளும் காலம் நேர்ந்துவிட்டது. ஆயினும், பிரயாணிகளின் தொகை குறையவில்லை. ரயில்வண்டிகளில் சிப்பாய்கள் சீறிப் பாய்வார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டியின் கதவைத் திறந்து உள்ளே ஏறுவதற்குள் உயிர் போகும். இறங்குவதற்கும் வழி விடமாட்டார்கள். ரயில்தான் இப்படி என்றால் பஸ்களைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

முன்பு தெருத்தெருவாகச் சுற்றி, மோட்டார் போகும் வழியிலுள்ள ஊரின் பெயர்களை எல்லாம் உரத்த குரலில் கதறுவார்கள் கண்டக்டர்கள். போட்டா போட்டிகள் அநாகரீகத்தின் எல்லைக்கும் போகும், வீட்டுக்கே வேண்டுமானுலும் மோட்டார் வந்து ஏற்றிக்கொண்டு போகும்.

யுத்த காலத்தில் ரயிற் பிரயாணம் எப்படி ஆகிவிட்டதோ அதைவிட மோசமாகிவிட்டது மோட்டார்ப் பிரயாணம். கரி வண்டிகள் வேறு வந்துவிட்டன. அவை ஆங்காங்கு நின்றுவிடும்போது பிரயாணிகள் இறங்கித் தள்ளித் தள்ளி உள்ளமும் உடலும் ஓய்ந்து போயினர்.

யுத்தகால நெருக்கடியின் காரணமாகப் போதிய யந்திரங்கள் கிடைக்காதபோது புதிய தொழில்களைத்

தொடங்கி நடத்துவது இயலாதென்று அனைவரும் கருதுவது இயற்கைதானே. ஆனால் அந்த நெருக்கடியில்தான் நாட்டு தொழில்களின் தேவை நமக்கு அதிகமாகிறது. இந்தத் தேவையை நன்கு உணர்ந்ததால்தான் நாயுடு அவர்கள் யு. எம். எஸ். ஸ்தாபனத்தைப் பல புதிய தொழில்களின் உற்பத்திச்சாலையாக்க முயன்றார். பல நாடுகளுக்கும் சென்று பழகியதுடன், மிக்க அபூர்வமான விஞ்ஞான ஆற்றலும் அவர் படைத்திருந்ததனால்தான் துணிந்து செயல்புரிய அவரால் முடிந்தது.

சைன தேசம் மிகவும் பிற்போக்கான தொழில்வளம் உடைய நாடு. அத்துடன் யுத்தத்தினாலும் உள்நாட்டுக் கலவரங்களாலும் இடைவிடாது இருபது ஆண்டுகளாக மிகவும் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கும் வாழ்க்கையுடையவர்கள் சீனத்து மக்கள். ஆயினும், அவர்கள் அரிதின் முயன்று பல கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்து மகத்தான முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். சீனம் போன்ற தொழில் வளம் குறைந்த நாடுகளே இப்படி முன்னேற முடிந்ததென்றால், வற்றாத பல வசதிகளையுமுடைய நம்முடைய தாய்நாடு தொழில் முன்னேற்றமின்றிச் சோம்பிக் கிடப்பது தவறு என்ற கொள்கையை உணர்ந்து செயல் புரிந்ததுடன், ஏனையோருக்கும் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துரைக்க நாயுடு அவர்கள் மறந்ததில்லை.

யுனைடெட் மோட்டார் சர்வீஸ் என்ற ஸ்தாபனத்தின் புகழை உலகெங்குமுள்ள மோட்டார்த்துறை நிபுணர்களின் கவனத்திற்கும் பாராட்டுக்கும் உரியதாகச் செய்திருக்கிறார் நாயுடு. கோவையில் கட்டப்பட்டிருக்கும் அவருடைய ஸ்தாபனத்தின் மத்திய நிலையம் 1942-ல் உருவாகியது. அப்போது சென்னை கவர்னராயிருந்த

ஆர்தர் ஹோப் துரை மகனுர் திறப்புவிழாவாற்றினர். நிலயம், கட்டிடம், சாமான்கள், தளவாடங்கள், யந்திர கருவிகள் இவை எல்லாம் சேர்ந்த அந்த நிலயத்தின் அந்த நாளைய மதிப்பு கிட்டத்தட்ட நான்கு லட்சத் துக்கு மேலாகும். ரயில்வே சந்திப்புக்களில்கூடக் காண முடியாத சுகாதார முறையும், நிர்வாக ஏற்பாடுகளும், பிரயாணிகளுக்குரிய வசதிகளும், காரியாலய அமைப்பும் வியக்கத்தக்க அமெரிக்க வாடையுடன் விளங்கு கின்றன.

## மோட்டார் சீர்திருத்தம் :

அந்த நாளில் பிரயாணிகளுக்கு ஓடும் மோட்டார்ப் போக்குவரத்து பற்றிய சட்டதிட்டங்களை வரையறுப்ப தில் நாயுடு அவர்கள் பல அரிய யோசனைகளை அரசாங் கத்திற்குக் கூறி உதவி புரிந்திருக்கிறார்.

இந்தத் துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நாயுடு அவர்கள் உணர்வதற்குக் காரண மான சுவையான அனுபவங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்றை அவர் வாயிலாகவே கேட்போம்.

"நான் தனியாக ஒரு பஸ்ஸை வைத்துக்கொண்டு சர்வீஸ் நடத்திக்கொண்டிருந்த காலம். அப்போது, ஒரு சமயம் ஒரு சர்வீஸ் பஸ்ஸில் மதுரையிலிருந்து தேவ கோட்டைக்குப் பிரயாணம் செய்தேன். அந்தப் பிரயா ணத்தில் மோட்டார்ப் போக்குவரத்துச் சீர்திருத்தம் பற் றிப் பல உண்மைகள் எனக்குப் புலனாகின. டிரைவர் தலை தெறிக்கும் வேகத்தில் காட்டுத்தனமாக வண்டியை ஓட் டிச் சென்றான். கண்டக்டர் பிரயாணிகளுடன் முரட்டுத்

தனமாக நடந்துகொண்டதையும் பார்த்தேன். குறிப்பிட்ட இடத்தில் வண்டி நின்றதும் பிரயாணிகள் அனைவரும் இறங்கிச் சென்றுவிட்டார்கள். நான் மட்டும் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தேன். டிக்கட் கொடுக்காமல் வசூல் செய்த பணத்தை டிரைவரும் கண்டக்டரும் பகிர்ந்து எடுத்துக்கொண்டார்கள். வேறு வழிகளில் பணம் எடுத்துக்கொள்ளவும் அவர்கள் திட்டமிட்டுப் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒரு பஸ் முதலாளியின் தோல்விகளுக்கு அடிப்படையான காரணங்கள் பலவற்றை நான் அறிந்துகொள்ள இந்த அனுபவம் உதவியாக இருந்தது.

1. காட்டுத்தனமாகப் பொறுப்பின்றி வண்டியை ஓட்டுவதனல் வண்டியின் பாகங்கள் தளர்ந்தும், பழுதாகியும் போவதற்கு இடம் ஏற்படுகிறதுடன் சக்கரங்களும் அளவுக்குமேல் சீக்கிரம் தேய்ந்தோ வெடித்தோ போகின்றன.

2. கண்டக்டர், டிரைவர் ஆகியோர் பிரயாணிகளிடம் முரட்டுத்தனமாக நடந்துகொள்வதன் காரணமாகப் பொது ஜனங்கள் பஸ் போக்குவரத்தில் விருப்பம் குறைந்துபோக இடமிருக்கிறது. இயல்பாக வருமானமும் குறைந்துவிடக்கூடும்.

3. வசூல் தொகையில் ஒரு பகுதி, கணக்குக்கு வராமலே ஊழியர்களால் திருடப்படுவதனல் நஷ்டம் ஏற்படுகிறது.

பின்னளில் என்னுடைய மோட்டார் போக்குவரத்துக்கள் அதிகரித்தபோது (செக்கிங் இன்ஸ்பெக்டர்கள்) சோதகர்களை நியமித்தேன். சில சமயங்களில் அவர்

களும் டிரைவர், கண்டக்டர்களுடன் சேர்ந்துகொண்டு திருட ஆரம்பித்தார்கள். எனவே பிரயாணிகளிடம் புகார்களைப் பதிவு செய்து வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று சிப்பந்திகளுக்குத் திட்டம் செய்து அதற்கென்று அச்சடிக்கப்பட்ட நமூனைக்களை ஏற்பாடு செய்தேன். டிரைவர் கண்டக்டர்களுக்கு விரோதமாக அவர்களிடமே நமூனையைப் பூர்த்தி செய்து கொடுக்கும் தெய்த் துணிபு பிரயாணிகளுக்கு ஏற்படவில்லை.

சில சந்தர்ப்பங்களில் சிப்பந்திகளின் சக்திக்கு மீறிய நிலையில் பிரயாணிகளுக்குச் சில சங்கடங்கள் ஏற்படவும் இடமுண்டு. ஒரு சில புகார்கள் இந்த நிலைகளில் எனக்கு வருவதுமுண்டு. பிரயாணிகள் தங்களுடைய குறைகளையோ, சிப்பந்திகளின் மீதுள்ள புகார்களையோ, நமூனைவில் பூர்த்தி செய்து கொடுக்க விரும்பவில்லையானால் தனியாக எழுதித் தபாலில் ஸ்டாம்பு இல்லாமலே எனக்கு அனுப்பிவிட்டால் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் என்று பகிரங்க அறிக்கை விடுவித்தேன். இதனால் உண்மையான புகார்கள் கொஞ்ச காலம் வரையில் எனக்கு வந்துகொண்டிருந்தன. குறைகளைக் கண்டுபிடித்து அவற்றைக் களைய வேண்டுமென்ற என் கொள்கையின் காரணமாக இந்த மாதிரி புகார்களுக்கு இரட்டிப்புத் தபால் கட்டணம் செலுத்திப் பெறுவதில் எனக்குக் கவலையுமில்லை. ஆனால் இந்த முறையை விஷமிகளான சில சிப்பந்திகள் நையாண்டி செய்வதுபோல வெறுங்காகிதத்தைக் கவருக்குள் வைத்து எனக்குத் தபாலில் கட்டணமின்றி அனுப்பி வைத்தார்கள். எனவே இந்த முறையையும் மாற்றிவிட நேர்ந்தது. பிரயாணிகள் புறப்படும் இடங்களிலாவது போய்ச் சேரும் ஊர்களிலாவது உள்ள எனது காரியாலய

நிர்வாகியிடம் உடன் வந்து பிரயாணிகளைச் சாட்சிகளாகக்கொண்டு புகார்கள் பதிவு செய்யலாமென்று அறிவித்தேன். இதன் மூலம், விசாரணையில், வண்டியை வேகமாக ஓட்டியது, பிரயாணிகளிடம் அவமரியாதையாக நடந்துகொண்டது, டிக்கட்டில்லாமல் பணம் வாங்கியது போன்ற எந்த ஒரு குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் புகார் செய்து கொண்ட பிரயாணிக்கு ரூபாய் 5 பரிசளிப்பதென்றும் ஏற்பாடு செய்தேன். கடைசியாக இந்த ஏற்பாட்டில் ஓரளவு பலன் ஏற்பட்டதென்றே கூற வேண்டும். ஆனால் இன்னமும் கூட பிரயாணிகள் தாங்கள் பிரயாணம் செய்யும் வண்டிகளின் டிரைவர் கண்டக்டர்களுக்கு உதவியாகப் பொய்சாட்சி சொல்லத் தயங்குவதில்லை என்பதுதான் உண்மை.

"குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளியான சிப்பந்திக்கு 50 முதல் 100 ரூபாய் வரை அபராதம் விதிப்பதென்ற நிபந்தனையுடன் யார்மீது ஆறு மாதங்கள் தொடர்ந்து புகார்களே இல்லையோ அவருடைய சம்பளம் பத்து ரூபாய் வீதம் அதிகரிக்குமென்றும் அறிவித்திருந்தேன். ஒரு தடவை மட்டும் குற்றம் புரிந்து அபராதம் செலுத்தியவர் அதன் பிறகு ஆறு மாதம் வரையில் குற்றம் சாட்டப்படாமல் இருந்து நிரூபித்தால் அபராதம் திருப்பிக் கொடுக்கப்படுவதுடன் சம்பள உயர்வும் உண்டு. இந்த வகையில் ஒரு தடவை அபராதம் செலுத்தி அதை மீண்டும் திரும்பப் பெற்றுக்கொண்டவர்கள் எத்தனையோ பேர் உண்டு.

"இவ்வளவு சட்ட திட்டங்களை அமைத்ததுடன் அவை சரியாக நடைபெறுகின்றனவா என்றறிய யானே மாறுவேஷத்தில் அடிக்கடி யிரயாணம் செய்வதுண்டு. இந்த பரிசோதனைகளில் பல ரசமான அனுபவங்கள் ஏற்பட்டன.

"முடிந்தால் நம்முடைய நாட்டின் பஸ் கண்டக்டர்களும் டிரைவர்களும் குற்றப் பரம்பரையையே சிருஷ்டித்து விடுவார்களென்பது எனது கருத்தாகும். காரணம் இந்தத் துறை அவ்வளவு கவனிப்பாரற்றுக் கிடப்பது தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. படித்த ஐம்பதினாயிரம் பேரைக் கட்டியாள்வதைவிட ஐம்பது பஸ் டிரைவர் கண்டக்டர்களை வைத்து நிர்வகிப்பது மிகவும் கடினமென்பது என் எண்ணமாகும். "ஒரு சமயம் பஸ் வண்டிகளிலிருந்து பிரயாணிகளின் பொருள்கள் அதிகமாக களவு போய்க்கொண்டிருப்பதாக அடிக்கடி புகார்கள் வந்தன. இதன் உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று விரும்பி மாறு வேஷத்தில் அடிக்கடி நானே வண்டிகளில் பிரயாணம் செய்தேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் என்னுடன் விலையுயர்ந்த பட்டுத் துணிகள், அழகிய போகப் பொருள்கள், உடைகள், தின்பண்டங்கள், பிராந்தி போன்ற பான வகைகள், சிகரெட்டு டின்கள் இவற்றைக் கொண்டுசென்று வண்டிகளிலேயே வைத்துவிட்டு இறங்கிப் போய்விடுவேன். டிக்கெட் வாங்கும்போதும் முழு நோட்டுக்களைக் கொடுத்துவிட்டு பாக்கிச் சில்லரையைக் கேட்க மறந்துவிட்டவனைப்போலவும் இருந்துவிடுவதுண்டு. இத்தகைய சோதனைகளில் நாணயமாக நடந்துகொண்ட சிப்பந்திகளுக்குத் தக்க சன்மானங்களும் சம்பள உயர்வும் கொடுத்து உற்சாகப்படுத்துவது வழக்கம். இப்படிச் சோதனைகள் புரிவதற்காக சில நண்பர்கள் எனக்காகப் பிரயாணம் செய்து தகவல் சேகரிக்கும்படியும் ஏற்பாடு செய்வதுண்டு சில அரசாங்க அதிகாரிகளும் இதில் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கூறவேண்டும்.

"வண்டி பிரயாணத்திற்குத் தயாராவதற்கு முன்பு 96 விஷயங்களைக் கவனித்துச் சரிபார்த்துக்கொண்ட பிறகே

புறப்படவேண்டிய நுணுக்கமான திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. ஒரு சமயம் அளவற்ற விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. இதன் காரணமாக, "மோட்டார் வண்டியின் சக்கரங்கள் தவிர வேறு எந்தப் பாகமும் எதன் மீதாகிலும் பட்டாலும், உராய்ந்தாலும், மோதினாலும் வண்டியின் டிரைவருக்கு உடனே சீட்டுக் கிழிக்கப்படும்" என்று முரட்டுத்தனமான ஓர் உத்திரவு இட நேர்ந்தது. இப்படி விலக்கப்பட்டவர்கள் அப்பீல் கொண்டால் தஸ்தாவேஜுகளையும் சந்தர்ப்பங்களையும் பிழைகளையும் பரிசீலித்து, நியாயமென்று தோன்றின் மன்னிக்கப்படுவர். அதுவரையில் சஸ்பெண்டாக அதை மாற்றுவதும் உண்டு. இவ்வளவு கண்டிப்பாக நடந்து கொண்டது வீண்போகவில்லை. 1929-ம் ஆண்டில் இருந்ததைவிட 90 சதவிகிதம் விபத்துக்கள் 1934-ல் குறைந்து போய்விட்டன.

உலகெங்கும் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தின் காரணமாக மோட்டார் போக்குவரத்துத் துறையும் சிரமத்துக்குள்ளாகியபோது இடையில் கம்பெனி பெரு நஷ்டமடைந்தது. தொடர்ந்துகஷ்டப்பட்டுக்கொண்டிராமல் தொழிலை ஏன் நிறுத்திவிடக்கூடாதென்ற ஒரு கேள்வியும் பிறந்தது. ஆயினும், அப்படி அவர் செய்யவில்லை. இதற்குரிய காரணத்தைப்பற்றிக் கூறும்போது நாயுடு அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"என் ஒருவனுடைய சொந்தத் தேவைகளை நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்குள் முடித்துக்கொண்டுவிட முடியும். ஆயினும், இந்தத் தொழிலை நம்பி வேலை செய்து கொண்டிருந்த 500-க்கு மேலான குடும்பங்களுடைய நிலைமையை நான் நினைத்துப் பார்க்கவேண்டியிருந்தது.

எனவே, நஷ்டத்துடனேயே தொழிலைத் தொடர்ந்து நடத்திச்செல்ல முடிவு செய்தேன். இதனால், சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் எனக்குக் கைப் பொறுப்பு ஏற்பட்டது. மற்றொரு சமயம் நான் உடல் நலம் குன்றியிருந்தபோது ஒவ்வொரு டிரைவருக்கும் ஒரு பஸ் வீதம் ஒப்படைத்து, லாபத்தில் அவர்களையும் ஒரு கூட்டாளியாக்கிவிடலாமென்று யோசித்தேன். பரீட்சார்த்தமாக ஒரு ரோட்டில் மட்டும் இதை அமுல் செய்து பார்த்தேன். துரதிஷ்டவசமாக இந்த ஏற்பாடு அப்போது வெற்றி பெருமல் போய்விட்டது. பஸ் டிரைவர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஓட்டியதால் 17 வழக்குகள் திடீரென்று முளைத்து விட்டன. பஸ் டிரைவர், கண்டக்டர்களின் நடத்தையையும் போலீஸ்காரர்களின் போக்கையும் ஊன்றிக் கவனிக்கும் நோக்குடன் வேற்று நாடுகளில் நான் சுற்றித் திரிந்த அனுபவங்களைக்கொண்டு ஆராய்ந்ததால் இந்தியாவில் இவர்களுடைய நிலைமை, படிப்பின்மை காரணமாகவும் போக்குவரத்துக் கலையைப்பற்றிய பயிற்சி இன்மை காரணமாகவும் மிகவும் கீழான நிலையில் தான் இருக்கிறது என அறியலானேன். நம் நாட்டில் ஏனையோரைவிட மலையாளத்தார் சற்று சிறந்து விளங்குகிருர்களென்றே தெரிகிறது. ரோட்டு விபத்துக்கள்கூட மலையாள நர்ட்டில் குறைவுதான்.''

தம்முடைய தொழிற்சாலையில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளிகளில் ஒவ்வொருவரையும் நாயுடு அவர்களுக்கு நேரே தெரியுமென்பதுடன், அவர்களுடைய திறமை பலஹீனம் அனைத்தும் நுணுக்கமாக அறிந்திருப்பார். ஒவ்வொருவருடைய பெயரும், அவர்கள் வேலைக்கு வந்த நாளிலிருந்து பழகிவரும் நடத்தையும்கூட அவருடைய கவனத்திலும் கண்காணிப்பிலும் இருந்து வரும்.

ஊழியர்களின் மனோபாவத்தை அறிந்து அவர்களிடம் வேலை வாங்குவதிலும் அவர்களுடைய நன்மையைக் காப்பதிலும் உள்ள திறமை அசாதாரணமானது. "கூலி மிகக் கேட்பார் கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார், வேலை மிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிவிடுவார்" என்று மிகச் சாதாரணமாக ஊழியர்களைப் பாரதியார் எவ்வளவு உண்மையாகச் சித்தரித்திருக்கிறார்! நாயுடு அவர்களிடத்தில் சோம்பேறிகளுக்கோ, ஏமாற்றித் திரிபவர்களுக்கோ, புறம் கூறுபவர்களுக்கோ இடம் கிடையாது. கட்டுப்பாட்டுடன் அவரவர் பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றிச் சம்பளம் பெற்று அவர்கள் சென்றுவிட்டாலும் கூட, அத்துடன் விட்டுவிடமாட்டார். வேலையிலிருக்கும் ஊழியர்களின் சொந்தப் பொருளாதார நிலைமை, அவர்களை அண்டிப் பிழைப்பவர்களின் எண்ணிக்கை, உறவினர்களின் வருகை, போன்ற ஒவ்வொரு விஷயத்திலும் அவருடைய கவனம் செல்லும். ஒருவன் சம்பாதித்து ஒன்பதுபேர் உண்ணும் வழக்கமுடைய நம் நாட்டில், தம்முடைய ஊழியர்கள் உழைக்கத் தெம்பிருந்தும் உழைக்காமல் உட்கார்ந்து உண்டு தீர்க்கும் உறவினரை வீட்டில் வைத்துக் காப்பாற்றுவதாகத் தெரிந்தால் ஆபத்துதான். ஊழியர்கள் கடன்காரர்களாக இருப்பதையும் அவரால் ஒப்பமுடியாது. லீவு இருக்கிறதே என்று சோம்பித் திரிவதை அனுமதிக்க மாட்டார். உடல் நலமின்றி உழைப்பில் ஈடுபட்டிருப்பதற்கும் விடமாட்டார். தான் பிறருக்கு உதவி செய்வதையெல்லாம் தான் உரிமையென்று கொண்டாடிய ஒரு கதாநாயகனுடைய சரித்திரம்தான் இங்கு நினைவுக்கு வருகிறது. அதிசயமான பண்புகள் கொண்ட நாயுடு பல ஆயிரக்கணக்கான ஊழியர்களை வைத்து வேலை வாங்குவதே ஒரு தனிக்கலை.

**ரேடியோ உற்பத்தி :**

அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் தக்க ஏற்பாடு களைச் செய்து வைத்துவிட்டு இந்தியா திரும்பும்போது, அவர் உத்தேசித்திருந்தபடி புதிய தொழிற்சாலைகளைத் தோற்றுவிப்பதும் நடைபெற்றுக் கொண்டிருந்த எலெக்ட்ரிக் மோட்டார் உற்பத்திச் சாலையை விரிவு படுத்தவும் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஆயி னும், 1914-ல் யு.எம்.எஸ். ரேடியோ உற்பத்திச் சாலையை அவர் தொடங்கிவிட்டார். அதனைத் திறந்து வைத்தவர் நமது சிலப்பதிகாரச் செம்மல் சர். ஆர். கே. சண்முகம் செட்டியாராவர்.

நாயுடு தம் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஊர் திரும்பியவுடனே, தாம் உத்தேசித்துள்ள புதிய தொழிற்சாலைகள் பற்றி, அப்போது கொச்சி திவானாக இருந்த சண்முகம் அவர்களுக்கே முதன் முதலில் அறி வித்தார். கொச்சி சமஸ்தானத்தில் நாயுடு எந்த முயற் சியை தொடங்குவதானாலும் ஆதரவளிக்கத் தயாரா யிருப்பதாகச் சண்முகம் அவர்களும் விடையளித்தார். பலப்பல காரணங்களை முன்னிட்டுக் கொச்சியை ஏற்ற இடமாகக் கொள்ள நாயுடு அவர்களால் முடியவில்லை. ஆயினும், ஏதாவது ஒரு தொழிற்சாலையை உடனே ஆரம்பித்துவிடுவதென்ற வேகம் மட்டும் அவருக்கு இருந்தது. இத்தருணத்தில் நமது அரசாங்கத்தார் மூவாயிரம் ரேடியோ செட்டுகளுக்கு அனுமதி வழங்க முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்தார் நாயுடு. உடனே அவருடைய ஊக்கமும் உழைப்பும் அந்தத் திசையில் சென்றதன் காரணமாக யு. எம். எஸ். ரேடியோ உற்பத்தித் தொழிற்சாலை உருவாயிற்று. கொச்சி திவானாக இருந்து ஓய்வு பெற்ற சண்முகம் அவர் கள் அதே சமயத்தில் அமெரிக்காவிலிருந்து இந்தியா

வுக்கு யுத்த தளவாட்ங்கள் வாங்குவதற்கென்ற காரியத் திற்காக நியமிக்கப்பட்டது. ஊக்கத்திற்கு உதவியாகவு மிருந்தது. எனவே, அவர் அமெரிக்காவிற்குச் செல்லு முன்பு எப்படியும் ரேடியோ உற்பத்தியைத் தொடங்கி அதைத் திறந்து வைக்க அவரையே அழைக்க வேண்டு மென்றும் விரும்பி, அதற்கான கட்டிட நிர்மாணம், யந்திர அமைப்பு ஆகியவற்றில் நாயுடு முனைந்தார்.

ரேடியோ செல்வர்களின் உல்லாசப் பொழுது போக் குக்கான போகப் பொருளாக—ஆடம்பர வஸ்துவாகவே— இன்றுகூட நம்முடைய நாட்டில் கருதப்பட்டு வரு கிறது. ரேடியோ அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற அருமை யான சாதனம் என்ற உண்மையை ஏழைகளும், நடுத்தர வகுப்பினரும் உணர்ந்துகொள்ள முடியாமலிருப்பதன் காரணம் ரேடியோ செல்வர்கள் மட்டுமே விலைகொடுத்து வாங்கக்கூடியதாக இருப்பதுதான். சமீபகாலம் வரை யிலும்கூட ரேடியோ செட்டுகளை வரவழைப்பதற்கும் வைத்து அனுபவிப்பதற்கும் தேவையான அனுமதி வழங் குவதில் அரசாங்கம் மிகவும் கண்டிப்பான சட்டங்களைக் கடைப்பிடித்ததுண்டு.

இரண்டாவது உலகப் பெரும்போர் தோன்றிய பின்னர்தான் ரேடியோவை நல்ல பிரசாரக் கருவியாக உபயோகிக்க முடியும் என்ற உண்மை அரசாங்கத்துக்கே விளங்கலாயிற்று. ஒவ்வொரு விநாடியும் எந்த நேரத் தில் நம்முடைய தலையில் குண்டு விழுமோ என்று மக்கள் அஞ்சி நடுங்கிய காலத்தில் நேசநாட்டுத் துருப்புகளின் முன்னேற்றத்தையும் வெற்றியையும், அயல் நாடுகள் பிடிக்கும் ஓட்டத்தையும் உடனுக்குடன் ஒலிபரப்புவது யுத்தத்தின் வாடையே படாத இந்திய நாட்டின் அர சியல் நிர்வாகத்தில் மக்களின் அமைதிக்கும் மன நிம்ம திக்கும் அவசியமாக இருந்தது. மக்கள் இச்சமயத்தில்

ரகசியமாக வீடுகளில் அமர்ந்து பெர்லின், டோக்கியோ, சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்து எதிரிகள் ஒலி பரப்புவதை ஆவலுடன் கேட்டுத் தெரிந்துகொள்வதில் பெரும் பரபரப்புக் கொண்டிருந்தார்கள். அரசாங்கத்தாருக்கு இது தெரியாமல் இல்லை. தெரிந்தும்கூடத் தனிப்பட்டவர்கள் எந்த நிலையத்திடமிருந்தும் செய்தி கேட்டு அறிவதில் தடை செய்யவில்லை. ஆனால், மற்றவர்களுக்கு அவற்றைப் பிரசாரம் செய்வதுதான் குற்றமாகக் கருதப்பட்டது.

ஜெர்மனியில் மக்கள் ரேடியோ கேட்பதில் இருந்த நிபந்தனைகள் மிகவும் கொடுமையானவை. நாஜி அரசாங்கம் ஒலிபரப்பும் செய்தியைத் தவிரத் திருட்டுத்தனமாகக்கூட வேறு நிலையங்களின் செய்தியை ஜெர்மனியில் யாரும் கேட்க முடியாது. துப்பறியும் நிபுணர்கள் இப்படி வெளிநாட்டுச் செய்திகளை, வேறு வேறு நிலையங்களின் மூலம் கேட்பவர்களைக் கண்டுபிடித்துவிட்டால் அப்படிக் கேட்டவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு உடனே சுட்டுக் கொல்லப்படுவர். துப்பறிவோருக்குத் தெரியாமல் கேட்பதென்பது நடவாத காரியம். ஏனெனில், ரேடியோ பெட்டிகள் படுக்கைக்கு அடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தாலும், இரும்புப் பெட்டிக்குள் இருந்தாலும் அவற்றை மோப்பம் பிடித்துக் காட்டும் நுண்ணிய யந்திர சாதனங்கள் துப்பறிபவர்கள் வசம் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்தியாவில் ரேடியோ செய்திகளை மக்கள் தெரிந்து கொள்வதில் தாராளமான அனுமதி கொடுக்கப்பட்டிராவிட்டால் காரணமில்லாத பயத்தினால் அமைதியே கெட்டுப்போயிருக்கலாம். எனவே அப்போது நம்மை ஆண்டு கொண்டிருந்த அரசாங்கத்தினர், அதிகப்படியான ரேடியோக்களைத் தருவித்து உபயோகிப்பதில் மக்களுக்கு

உற்சாகமளித்தனர். ஆயினும் இந்தியாவிலேயே ரேடியோ உற்பத்தியைத் தொடங்கும் முயற்சிகள் அரசாங்கத்தாரின் ஆதரவுக்குப் பாத்திரமாகவில்லை.

யு. எம். எஸ். ரேடியோ உற்பத்தி இத்தகைய சூழ்நிலையில் ஒரு அரிய சாகஸம் என்றுதான் கூறவேண்டும். தொழிற்சாலைத் திறப்பு விழாவில் நாயுடு அவர்களின் வரவேற்புரையில் காணப்படும் ரஸமான புள்ளி விவரங்கள் பின் வருவன ஆகும்.

" சுமார் பதிமூன்று கோடி மக்களைக்கொண்ட அமெரிக்க நாட்டில் 650 ரேடியோ ஒலிபரப்பு நிலையங்கள் வேலை செய்கின்றன. ஆனால், நாற்பது கோடி மக்கள் நிறைந்த இந்திய நாட்டில் உருப்படியாக ஒரு பத்து ரேடியோ நிலையங்கள்கூட இல்லை. அமெரிக்காவில் ஒவ்வொரு வீட்டிலும் ரேடியோவும் டெலிபோனும் உண்டு. ஒரே வீட்டில் அறைக்கு அறை ரேடியோ டெலிபோன் வசதிகள் அமைந்திருக்கும். உதாரணமாக சிகாகோ நகரத்தில், ஸ்டீவன்ஸ் ஹோட்டல், ஷேர்மன் ஹோட்டல் என்ற இவ்விரண்டு விடுதிகளில் மட்டும் முறையே மூவாயிரம், இரண்டாயிரம் என்ற எண்ணிக்கையில் ரேடியோக்களும், டெலிபோன்களும் உள்ளன. ஆனால், இந்தியாவில் இருக்கும் ரேடியோக்களின் எண்ணிக்கை ஒரு லட்சம்கூட இருக்காது."

"உலகத்திலுள்ள டெலிபோன்களில் கிட்டத்தட்ட சரிபாதி படைத்திருக்கும் அமெரிக்காவில் சுமார் 2 கோடி டெலிபோன்கள் உபயோகத்திலிருக்கின்றன. இந்தியாவிலே இவற்றின் எண்ணிக்கை 80 ஆயிரங்கள் தான்."

நமது தொழில், வாணிபம், இல்லம் இவற்றின் சிறப்புக்கு ரேடியோவும், டெலிபோனும் இன்றியமை

யாதவை என்பதை அமெரிக்கா போன்ற நாடுகளைச் சுற்றிப் பார்த்திருந்த நாயுடு அவர்கள் உணர்ந்திருந்த தனுல்தான் ரேடியோ உற்பத்தியில் அவருக்கு அவ்வளவு ஊக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். நாயுடு அவர்களின் கணக்குப்படி நம்முடைய நாட்டின் தேவைக்கு ஒரு பத்து வருஷங்களில் ரேடியோக்களைச் செய்து குவிப்பதா யிருந்தால் நாளொன்றுக்கு சுமார் 5000 ரேடியோக்களை உற்பத்தி செய்யவேண்டியிருக்கும்; அல்லது பாகங் களைத் தருவித்து இங்கே உருவாக்கவேண்டியிருக்கும். ஆயினும் அனைவருக்கும் சாத்தியமான குறைந்த விலை யில் உற்பத்தி செய்வது நமது நாட்டில் மிகக் கடுமை யாக இருக்கிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் பத்து ரூபாய்க்கோ சற்று அதிகமான தொகைக்கோ ஒரு ரேடி யோவை வாங்கிவிட முடியுமென்றுல், நம் நாட்டில் நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும்கூட ரேடி யோப் பெட்டிகளின் விலை இருக்கிறது.

ரேடியோக்களை வெளியிலிருந்து தருவிப்பதை நிறுத்திவிட்டு நாமே உற்பத்தி செய்வதுதான் அனை வரும் வாங்கக்கூடிய விலையில் அவற்றை உருவாக்கும் வழி என்று நாயுடு ஆராய்ந்து அறிந்தார். அவருடைய புள்ளி விவரங்கள் கூறுவதைக் கேளுங்கள்,

"ஜப்பான் அல்லது வேறு எந்த நாட்டிலும் உற்பத்தி யான ரேடியோ செட்டுப் பெட்டிகளைப் பெட்டி ஒன்றுக்கு முப்பது ரூபாய் முதல் நூற்றைம்பது ரூபாய்வரை விலையில் நாம் இறக்குமதி செய்யக்கூடும். ஆனுல், ஒரு ரேடியோவின் சகல பகுதிகளையும் தனித்தனியாக அமெ ரிக்காவிலிருந்து தருவித்தால் அவற்றின் விலை நமக்கு ஆறு ரூபாய் முதல் இருபது ரூபாய்க்குள் அடங்கிவிடும். நம் நாட்டு இளைஞர்களுக்கு ரேடியோ உருவாக்குவது பற்றிய பயிற்சியை அளித்தால் இப்படித் தருவிக்

கப்பட்ட பாகங்களைக் கொண்டே பெட்டி ஒன்று பத்து முதல் முப்பது ரூபாய்க்குள் நாமே தயாரித்துவிட முடியும். ஆனால், சிறிய அளவுப் பெட்டிகளை உபயோகிக்கு முன்பு ஒலிபரப்பு நிலையங்கள் ஏராளமாகப் பெருக வேண்டும். அரசாங்கத்தார் தாங்களே புதிய நிலையங்களை ஆரம்பிப்பதுடன் தனி நபர்களுக்குக் கொடுக்கலாம். இப்படியே ஒலிபரப்பும் நிலையங்கள் அதிகரிக்குமாயின் கல்வி, தொழில், வர்த்தகம் ஆகிய சகல துறைகளிலும் மக்கள் பெரும் பயன் அடையும்படி செய்துவிட முடியும்.

வீரமும் காதலும் ஊடே இழைந்து முறுக்கேற்றிய பண்டைத் தமிழர் வாழ்வின் பயனும் பண்பும் நமது பழந் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சரித்திரப் பெருமைகள், புறமுதுகிட்டு ஓடுங்கால் முதுகில் அம்பு பட்டு மகன் போர்க்களத்தே போயொழிந்தான் என்ற இழிசொல் கேட்டுச் சினந்தெழுந்த தாய் அத்தகைய கோழை மகனுக்குப் பால்கொடுத்து வளர்த்த சிறு போதை எண்ணி நாணமும் நலிவும் கொண்டு தன் மார்பை அறுத்தெறிய வாள் கொண்டு போர்க்களம் சென்றாள் என்று நமது வீரப் பழங்கதையை இன்றும் கூறி ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துக்கொள்ளுகிறோம். வீரனுக்கே மாலையிடும் பண்டைத் தமிழ் மகளிரின் சரிதங்களையும் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

கடந்தகால தேசீயப் போராட்டத்தின்போதும் வீரபாண்டிய கட்டபொம்மு முதலாகத் திருப்பூர்க் குமரன் வரையிலும் நமது பெருமையை நிலைநாட்டியே வந்துள்ளனர். உலகப் போர் இரண்டும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தகாலையிலும் தமிழ்

நாட்டுக்காளையர் பலர் வேற்று நாட்டுப் பாலை மணற் பரப்பிலும் இருளடர்ந்த காடுகளிலும் மலைச்சரிவிலும் மரக்கலத்திலும் வானிலும் திரிந்து வீரம் விளைத்திருக் கின்றனர்.

போர்க்காலங்களில் படைகள் சேர்த்தல், பரிசனம் சேர்த்திடல், பணமுண்டாக்கல் ஆகிய வேலைகளில் அர சாங்கம் மிகவும் சுறுசுறுப்புடன் வேலைசெய்வதை யாவ ரும் அறிவோமல்லவா ?

போர்க்களத்தே வீரர்கள் பொருது நிற்கும்போது அவர்களுக்கு வேண்டிய கருவிகள், வாகனங்கள், ஆடை கள், உணவு வகைகள், திட்டங்கள் இவற்றைச் சேமிக் கவும் உற்பத்தி செய்து குவிக்கவும் வேண்டிய பல இன்றியமையாத தொழில்கள் இரவு பகலாக நடை பெற்றுகவேண்டும். இந்த வேலைகளெல்லாம் பெரும் பாலும் போர்க்களத்திற்குத் தொலைதூரத்திலேயே மக்க ளின் சமூக வாழ்வின் இயக்கத்தினூடே நடைபெறுவன.

இத்தகைய தொழில்கள் ஊக்கத்துடன் நடைபெற் றுலன்றி நமது வீரர்கள் முனை முகத்திருந்து நாட்டின் பணியாற்றுவதென்பது நடவாத காரியம். எனவே, போர் வீரர்களைப் போலவே அவர்களின் அடிப்படைத் தேவை களைச் சமாளிக்கும் தொழில்களும் தொழிற்சாலைகளும் அவற்றில்வேலைசெய்யும் வல்லுனர்களும் தேவைப்படுகி றார்கள். இதன் காரணமாகவேதான், போர்க்காலங்களில் எந்த நாட்டிலும் புதிய புதிய தொழில்கள் தோன்றி வளர ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது.

உலகப் பெரும்போர் மூண்டு வல்லரசுகளும் சிற்ற ரசுகளும் தறிகெட்டுத் திகைத்துக் கொண்டிருந்தபோது

இந்தியாவும் போரில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள நேர்ந்துவிட்டது.

வாணிபத்தாலும் பொருளாதாரத்தாலும் பொருள் உற்பத்தி விநியோக முறைகளாலும் அகில உலகத்தின் ஒரு பகுதியாகவே எந்நாடும் இன்று இயங்கித்தீரவேண்டு மேயல்லாது தனித்து வாழ்ந்துவிட முடியாது. விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் போர் மூண்டுவிட்டது. யார் வைத்த தீயாக இருந்தாலென்ன? எப்படியோ உலகம் பூராவும் அது பரவிச் சுழன்று எழுந்தது. இந்தியா வும் அந்தக் கனலிலிருந்து தப்பமுடியவில்லை. போர்க் களத்தில் படை திரட்டுவதும் பணம் சேர்ப்பதும், பொருள் உற்பத்திசெய்து குவிப்பதும் இன்றியமையாத கடமையாகிவிட்டன. தேசீய ஆவேசம் மிகுந்திருந்த நாட்டில் அரசாங்கம் கட்டாயமாகவாவது இந்தக் கடமைகளை மேற்கொள்ள நேர்ந்ததுடன் மக்களை வற் புறுத்தி உடல் உழைப்பையும் உற்பத்தித் திறமையை யும் போரில் ஈடுபடுத்திக்கொண்டது.

தவிர்க்க முடியாத நிலையில் நாமும் பங்குகொண்டு விட்ட பெரும்போர் வெற்றி பெறுமல் போய்விடுவது நாட்டிற்குக் கேடு தரும் என்ற உண்மை நிலையை நாயுடு அவர்கள் உணரத்தவரவில்லை. தம்மாலியன்ற வழி துறைகளெல்லாம் போரில் ஈடுபட்ட அரசாங்கத்திற்கு உதவிசெய்ய வேண்டுமென்று உணர்ந்தார்.

திருவாளர் நாயுடு யாருக்காகவும் தாட்சணியப் பட்டுக்கொண்டு எதையும் செய்யமாட்டார். எதையும் விட்டுக்கொடுக்கவுமாட்டார். தம் போக்கின்படி நீதியும்

நேர்மையுமென்று தோன்றுகிற காரியங்களைத் தம்மள வில் செய்துகொண்டு போவதைக் கடமையென்று கருதா மல் உரிமை யென்று கொண்டு செயல்புரிவார்.

1944-ல் நமது மாகாண அரசாங்கத்துக்குக் கவர்ன ராக இருந்த ஆர்தர் ஹோப் துரை நாயுடு அவர்களுடன் நல்ல நட்பும் பழக்கமும் கொண்டிருந்தார். ஒருசமயம் அவர் "கோபால பாக்" மாளிகைக்கு விஜயம்செய்து விருந்தில் கலந்திருந்தபோது தாம் குறிப்பிட்டபடி பத்து லக்ஷம் ரூபாய் முதலீடு செய்து பாதுகாப்புப் பத்திரங்களை வாங்கிக்கொண்டார் நாயுடு.

கடமைகளைச் செய்யாமல் உரிமைகளை மட்டும் எதிர் பார்த்து நிற்பது உலக இயற்கை, மனிதர்கள் எப்போதும் தங்கள் உரிமைகளுக்காகவே போராடி நிற்பார்கள். நாயுடு அவர்கள் முதலில் தமது கடமைகளைச் செய்து முடிப்பதில் தாமதமோ தயக்கமோ காட்டாத ஒரு நாகரீகமான குடிமகன் ஆவார். அரசாங்கம், அரசாங்க சிப்பந்திகள், குடிகள், யாராயிருந்தாலும் முதலில் அவரவர் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் படைத்தவராதலால், கடமையை வழுவிக் குறுக்கு வழியில் செல்பவர் யாராயினும் அவர்களை எதிர்த்து நின்று நீதியை நிலைநாட்டித்தான் ஆகவேண்டு மென்ற மெய்த்துணிவும், அறப்பற்றும் அவரை இடை யருது ஊக்குவித்து நிற்கும்

அந்தத் தொகை இன்னின்ன வகைகளில் பயன் படுத்தப்படவேண்டு மென்று நாயுடு கட்டளையிட்ட இனங்கள் பின் வருமாறு.

5 லக்ஷத்து 70 ஆயிர ரூபாய்கள் பெறுமான பாது காப்புப் பத்திரங்கள் யு. எம். எஸ். லிமிடெட் என்ற ஸ்தாபனத்தின் வசமாகப் பின்வரும் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டது.

(அ) ரூ. 1 லக்ஷத்து 50 ஆயிரம் யு. எம். எஸ், லிமிடெட் ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் ஊழியர்களின் நல உரிமைகளான, கல்வி, சுகாதாரம் முதலிய இதர பணிகளுக்காகவும்.

(ஆ) மாகாண முழுமையுமுள்ள தொழிலாளர் நன்மையை முன்னிட்டு ஒரு லக்ஷமும்.

(இ) தாழ்த்தப்பட்ட சமூகத் தொழிலாளர் நல னுக்கு 50 ஆயிரங்களும்.

(ஈ) பதினைந்து ஆண்டுகளுக்குமேலாக யு.எம்.எஸ். ஸ்தாபனத்தில் உழைத்திருக்கும் சிப்பந்திகளுக்குப் போனஸ் கொடுப்பதற்காக ரூபாய் 20 ஆயிரங்களும்

(உ) தாழ்ந்துபோன மக்களின் நல உரிமைக்கான பத்திரிகை தொடங்குவதற்காக ரூபாய் 50 ஆயிரமும்,

(ஊ) ரேடியோ, மோட்டார் வண்டி சம்பந்தமான கலைப் பயிற்சித் தொழில் வளர்ச்சிக்கு யு. எம். எஸ். ஸ்தாபனம் உசிதமென்று கருதும் வழிதுறைகளில் செல விடுவதற்கென்று 2 லக்ஷ ரூபாயும்.

ஆக 5 லக்ஷத்து 70 ஆயிரமும் ஒதுக்கப்பட்டது, இந்தத் தொகையின் வட்டித் தொகையையோ முதலையோ மேற்குறித்த வகையில் செலவிட்டுக்கொள் ளும் உரிமையையும் யு. எம். எஸ். ஸ்தாபனத்திற்கே விட்டுவிட்டார். இந்தத் தொகையைச் செலவிடுமுன் ஒரு வேலை யு. எம். எஸ். ஸ்தாபனம் கலைந்தோ மாற்ற

மடைந்தோ போகுமானல், அப்படி ஒரு நிகழ்ச்சி நடை பெறுமுன்பு இந்தத் தொகையை முற்கூறிய வழிகளில் செலவிட்டுவிட முடியவில்லையானல், தொழிலாளர் களுக்கான பிரசவ ஆஸ்பத்திரியையோ, தொழிலாளர் களுக்கான கல்வி நிலயத்தையோ தோற்றுவிக்க அந்தத் தொகை முழுதும் செலவிடப் பட்டுவிட வேண்டுமென் பது அவர் கட்டளை.

(2) கோவை ஜில்லாக்காரர்கள் அல்லது கோவை ஜில்லாவில் உழைத்தவர்கள் ஆகிய இரண்டு இனங்களி லும் சேர்ந்த நாணயமான போலீஸ் சேவகர்களின் குழந் தைகளுக்கு ஹைஸ்கூல் படிப்புக்காக உபகாரச் சம்ப ளம் போன்ற வசதிகளைக் தகுதியறிந்து செலவிடுவதற் காக 50 ஆயிரம் ரூபாய் பெறுமான பாதுகாப்புப் பத்தி ரங்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பொறுப் பில் ஒப்படைக்க வேண்டுமென்பது ஒரு ஏற்பாடு. இந் தத் தொகையின் வட்டியாக வருவதைக் கொண்டு சுமார் பத்து பிள்ளைகள் வரை கணிசமான பயன் பெற இடமேற்பட வேண்டுமென்ற அவர் கருத்து இதில் முதன்மையானது.

(3) பச்சையப்பன் கல்லூரியில் ரேடியோ கலை நுணுக்கப் பரிசோதனைச்சாலை அமைப்பதற்கென்று வழங் கப்பட்ட பத்திரங்களின் மதிப்பு 25 ஆயிரங்கள்.

(4) இதே காரித்திற்காக ஆந்திர சர்வ கலாசாலை வசம் அளிக்கப்பட்டது 10 ஆயிரம்.

(5) இராமகிருஷ்ண வித்யாலயம், மோட்டார் இஞ்சனீயரிங் பயிலும் மூன்று பேருக்குக் குறையாமல்

மாணவர்களுக்கு உதவி செயவது இவற்றிற்கென அனுமதிக்கப்பட்டது 25 ஆயிரமாகும். இப்படிப் பல வழிகளிலுமாகப் பத்து லட்ச ரூபாய்க்குப் பாதுகாப்புப் பத்திரங்களில் அவர் பணம் கொடுத்தார்.

நாயுடு அவர்களின் கோபால் பாக் மாளிகையில் நாம் நுழைந்தால் அந்தக் கட்டிடத்தில் அல்லது அதன் சுற்றுச் சுவர்களின் இடையில் உள்ள பெரும் பரப்பில் உபயோகத்துக்கில்லாமல் ஆடம்பரத்திற்காக வென்று விடப்பட்ட இடமோ ஒரு மேடையோ நிச்சயம் இராது. ஆனல், பெரும் பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட சாமான்களும் யந்திரங்களும் நிறைந்திருக்கும். நாகரீகம் என்பது மனிதனுடைய வசதி என்பதுதான் அங்குப் பொருள்.

சாதாரணமாக ஒரு பணக்காரர் மிக ஆடம்பரமாக இருக்க முயன்ருல் என்ன செய்யலாம். ஒன்றுக்கு நான்கு பங்களாக்கள், நாலு கார்கள், காட்சிப் பொருள்கள் இப்படி நிறைக்கலாம். யாரையும் சுலபத்தில் வரவேற்றுப் பேச முடியாத கட்டுக் காவலுடன் உப்பரிகை இருக்கலாம்.

நாயுடு அவர்களின் பங்களாவில் வசதிகள் தவிர ஆடம்பரத்திற்கென்று ஒன்றும் கிடையாது. மனிதன் எவ்வளவு வசதியாக வாழ வகைகள் உண்டு என்பதைக் காணலாம். வீட்டில்கூட ஆடைகளோ தடபுடலான தங்கம், வெள்ளி, வைர ஆபரண ஆடம்பரமோ கிடையா.

வருகின்றவர்களில் யாரைப் பார்ப்பதற்கும் கண்டிப்பான நிபந்தனைகள் உண்டு. ஆனல் வருகிறவர் ஏழையா, பணக்காரனு, மந்திரியா அல்லது சாதாரண போலீஸ் சேவகன என்ற வேற்றுமைகள் கிடையா. உட்காரு

வதிலும் சரி, உண்டி அருந்தும்போதும் உறங்கும் வேளை களிலும் சரி, அவர் கண்களில் அனைத்துயிரும் ஒரே சமம். பந்துக்களுக்கும் அன்னியருக்கும் அங்குப் பேதமில்லை.

நாசுக்காக யாரும் எதையும் அவரிடம் கேட்காமல் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஒரு மந்திரிக்கு விளக்கம் கூறிச் சமாதானப்படுத்துவதில் உள்ள பொறுமையும் மரியாதையும் ஒரு மாணவனிடத் தும் காட்டுவார் நாயுடு.

ஒரு நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு அந்த நாட்டின் விஞ்ஞான வெற்றியும் தொழில் வளமும் வாணிபப் பெருக்குமே அடிப்படையாக இருக்கின்றன. விவசாய நாடான இந்தியாவிலும்கூட இந்த நூற்றுண்டில் யந் திர நாகரீகத்தின் தன்மையும் பயனும் எல்லையற்றுப் பெருகிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பல நூற் ருண்டுகள் பின் தங்கிவிட்ட நமது சமூக வளர்ச்சி விரைந்து நடைபெறுவதற்கான திட்டங்களும் செயல் களும் உருவாகி வரக்கூடிய காலம் இது.

வாழ்வின் அன்றடத் தேவைகளுக்கு யந்திரங்களின் உதவி இன்றியமையாததாகிவிட்ட நமது சமூகத்தில் பலவிதமான யந்திரங்களை வெளிநாட்டிலிருந்து தருவித் துக்கொண்டே இருக்க முடியாது. எனவே நம் நாட் டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களையும், இன்றி யமையாத வெளிநாட்டு மூலப் பொருள்களையும் கொண்டுவந்து குவித்துப் புதிய யந்திர உற்பத்தி வேலை யையும் நாமே தொடங்கவேண்டியது அவசியமாகிறது.

இப்படி யந்திர உற்பத்தி வேலையைத் தொடங்கும் போது அந்தக் கலைகளில் பயிற்சியும் தேர்ச்சியுமுடைய நிபுணர்கள் பலரும் நமக்குத் தேவைப்படுகிறார்கள்.

உற்பத்தி செய்யப்பட்ட யந்திரங்களை வரவழைத்து வந்ததுபோலவே வெளிநாட்டு நிபுணர்களையும் நாம் இறக்குமதி செய்யவேண்டி ஏற்படுகிறது. உள்நாட்டிலேயே பொருள் உற்பத்தி செய்துகொள்ள விரும்பும் நாம், அந்தக் கலைகளில் நிபுணர்களான விஞ்ஞானிகளையும் கூட இங்கேயே தயாரிக்க வேண்டியது அவசியமல்லவா ?

வாழ்வில் நமக்கு மிகவும் இன்றியமையாததாகி விட்ட மோட்டார், ரேடியோ, இந்தக் கலைகளில் நமது நாட்டு மாணவர்களைப் பயிற்றுவிப்பது மிகவும் அவசியமாகும். இதே நோக்கத்துடன்தான் விஞ்ஞானியாகிய நாயுடு 'ஆர்தர் ஹோப் பாலி டெக்னிக்' என்ற கல்லூரியைக் கோவையில் தோற்றுவித்து நிறைந்த நன்கொடையுடன் அர்சாங்கத்தாரிடம் ஒப்புவித்தார்.

இந்தக் கல்லூரியில் மோட்டார் வண்டி விஞ்ஞானம் பயிலும் மாணவன் தன் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும்போது உலகில் அறிவின் பல துறைகளிலும் நல்ல பழக்கமும் வெற்றியுமுடையவனாகிறான். யந்திரக் கலைஞானப் பயிற்சிகள் பெற வேறு எவற்றிலும்கூட இவ்வசதிகள் இல்லை. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தொழிற்சாலைகளிலும் காட்சிச் சாலைகளிலுமாகத் தாமே பரிசீலனை செய்து தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்த உயர்ந்த யந்திரங்களையும் கருவிகளையும் இங்குப் பயிலும் மாணவர்கள் உபயோகிப்பதற்கென்றே நாயுடு அவர்கள் கொடுத்து விட்டார்.

வேற்று நாடுகளில் மோட்டார்வண்டி விஞ்ஞானக் கலைப் பயிற்சியின் முழுமைக்காக சுமார் ஆறு ஆண்டுகள் கொண்ட வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆயினும்

நாயுடு அவர்களின் உதவியினால் இந்தக் கல்லூரியின் பயிற்சி காலம மூன்று ஆண்டுகளாகவே அமைக்கப் பட்டிருக்கிறது.

"1940-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நான் திரிந்துகொண்டிருந்த காலையில் ஆங்குப் பல ரேடியோ தொழிற்சாலைகளுக்குச் சென்றேன். திரும்பித் தாய்நாடு வந்த பின்னர் இங்கும் ஒரு தொழிற்சாலை தோற்றுவிக்க வேண்டுமென்ற ஆவலினால் அதற்கான சாமான்கள் முதலியவற்றிற்காக அமெரிக்க வர்த்தகர் பலருடன் ஒப்பந்தங்களும் ஏற்பாடுகளும் செய்துகொண்டு வந் தேன். திடீரெனப் போர் மூண்டுவிட்ட காரணத்தால் இவை செயலாக்கப்படாமற் போயின. எனினும் ரேடியோ உற்பத்திச் சாலையை 1941-ல் கோவையில் தொடங்கி விட்டேன். வால்வுகள் தவிர ஏனைய பாகங்களைத் தயா ரித்து இணைத்தோம். வெளி நாட்டு ரேடியோக்களின் திறமைக்கு இணையாகவும் விலை மலிவாகவும் ரேடியோக் கள் உருவாயின. ஆயினும், உற்பத்தி வேலை தொடர்ந்து பெரிய அளவில் நடைபெற முடியவில்லை. காரணம் வால்வுகளும் ஒலிக் கருவிகளும் இறக்குமதி செய்ய இயலாததாயின. ஆயினும், இங்கு வேலை செய்து கொண்டிருந்தபலர் போர்ச்சேவையில் ஈடுபட்டு நிறைந்த ஊதியம் பெற்று வந்தார்கள். இந்த அனுபவத்தின் காரணமாக மாணவர்களின் பயிற்சிக்குத் திட்டமிட்டு ரேடியோ தொழிற்சாலைக் கருவி, காணங்கள் அனைத்தை யும் இக் கல்லூரிக்கே கொடுத்திருக்கிறேன்." என்பது நாயுடு அவர்கள் கூற்று.

ரேடியோ பெட்டிகளைப் பிரித்துப் பழுது பார்த்துச் சரி செய்யும் மேற்போக்கான பயிற்சிகளைத் தரும் வேறி டங்களில் பயிற்சிக் காலம் ஒரு சில மாதங்கள் அல்லது அதிகபட்சம் ஒரு ஆண்டுக்கு மேல் இல்லை. ஆனால்

கல்லூரியில் பழுது பார்க்கும் வேலைமட்டுமின்றிப் பாகங்களை உற்பத்திசெய்து இணைக்கும் கலையும்கூடப் பயிற்றுவிக்கப்படுகிறது. இதற்கென்றே ரேடியோ பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆர்தர் ஹோப் பாலிடெக்னிக் உபயோகத்திற்கென்றே நாயுடு அவர்கள் சுமார் 67 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பெரிய நூல்நிலையம் ஒன்றையும் நன்கொடையாகக் கொடுத்துள்ளார். இந்த நிலையமும் அரசாங்கத்தின் வசம் ஒப்புவிக்கப்பட்டு, அதன் நிர்வாகத்தில் உள்ளது.

1945-ம் ஆண்டில் சென்னை கவர்னர் ஆர்தர் ஹோப் அவர்களுடன் நாயுடு பேசிக்கொண்டிருந்தபோது, யந்திரம், மின்சாரம் இந்தக் கலைகளுக்கான ஒரு கல்லூரியைக் கோவையில் ஆரம்பிப்பதற்கான ஒரு பேச்சு வந்தது. ஆகையால் அதற்கான கட்டிட வசதியும் கருவிகளும் இருந்தால், உடனே கல்லூரி தொடங்க அரசாங்கம் அனுமதிக்குமென்று கவர்னா கூற, நாயுடு அவர்கள் இரண்டு லட்ச ரூபாய் நன்கொடையளிப்பதுடன் போர்க்காலம் முடியும் வரையில் வாடகையின்றிக் கட்டிடமும் கருவிகளும் தயாரித்துக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

தாம் வாக்களித்தபடியே கோவை நகரத்தின் கீழ்த் திசையில் பீளமேட்டில் தாம் முன்பு தொடங்கியிருந்த எலக்டரிக் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலையை அடுத்தாற்போல் ஒரு பெரிய கட்டிடத்தையும் மாணவர்களுக்குத் தேவையான சாமான்களையும் உடனே தயாரித்து முப்பது நாட்களில் பூர்த்தி செய்தே கொடுத்து விட்டார்.

## தாவர விஞ்ஞானம் :

விஞ்ஞானிகள் என்போர் மிகச்சிறந்த சிந்தனைத் திறன் படைத்தவர்களேயாவர். படைப்பில் காணப்படும் அதிசயங்கள் எப்போதும் அவர்களைக் கவர்ந்து சிந்தனையைத் தூண்டி ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி விடும். ஆராய்ச்சி ஒரு திட்டமான வழியில் நடைபெறுமல், தற்செயலாகவும்கூட அரிய உண்மைகள் பல தோன்றவும் கூடும். கண்டுபிடித்த பிறகே அதன் பாதையை விளங்கிக்கொள்ளவும் நேரிடுவதுண்டு.

இப்படி நாயுடு அவர்கள் தற்செயலாகத் தாவர விஞ்ஞானியாகவும் ஆகிவிட்டார். அவர் கண்டுபிடித்திருக்கும் மருந்தூசி ஏற்றும் முறைகள் செடிகளை மிகுந்த விளைவு தருவனவாக மாற்றிவிடுகின்றன.

ஒரு சமயம் அவருடைய கைத்துப்பாக்கி பழுதாகி விடவே அதைச் சுத்தம் செய்து எண்ணெயிட்டுப் பிறகு, அதைப் பரிசோதிப்பதற்காகத் தோட்டத்தில் இருந்த வாழை மரங்களைக் குறிவைத்துச் சுட்டார். குண்டுகள் வாழை மரத்தின் அடிப்பாகத்தை ஊடுருவி அப்பால் சென்றன. அதற்குப் பின்னர் தாவர விஞ்ஞான விஷயமாக அவர் எண்ணியிருந்த ஒரு திட்டமான முடிவைப் பரிசோதிப்பதற்காக அவரிடமிருந்த சில ரஸாயனப் பொருளை வாழை மரத்தில் ஏற்பட்ட புதிய துவாரங்களில் பொதித்து அருகிலேயே மருந்தூசியும் குத்தினர். அந்த வாழை மரம் தார் போட்டபோது, ஏனைய மரங்களினின்றும் பிறிதான சுவையும் விளைவும் கிடைத்தன. பக்கத்திலுள்ள வாழைக்குலைகள் முதிர்ந்து கனிவதை விடச் சோதனை மரம் குலைபழுக்க ஒரு மாதம் அதிகமாயிற்று. புதிய குலையின் பழங்கள் மிக இனிமை கொண்டிருந்தன.

தற்செயலான இந்த வெற்றி மேலும் அவரது ஊக்கத்தை அதிகமாக்கிற்று. அவரது தோட்டத்திலேயே இருந்த ஆரஞ்சு மரத்தில் அவரது சோதனை நடைபெற்றது. பருவம் காத்து, மரத்தில் கனிகள் குலுங்கும் போதுதான் ஆரஞ்சு மரத்தில் செய்த சோதனை வியக்கத் தக்க பலன் கொடுக்குமென்ற உண்மை புலனாயிற்று.


y Russell, Sir John Russell and Mr. G. D. Naidu

எந்தச் சுவையும் அதிகரித்துக்கொண்டே போகுமாயின், இறுதியில் தன்னிலையில் மாறுபட்டு எதிர்ச் சுவையே ஆகிவிடும். இன்பத்தின் எல்லை துன்பமாகவும், துன்பத்தின் விளைவு இன்பமாகவும் மாறுவது போல, ஊசி மருந்து ஆரஞ்சுக் கனியின் இனிப்பை அதன் எல்லைக்கு உயர்த்திவிட்ட காரணத்தால் அதன் கனிகள் வாயில் போட்டுச் சுவைக்க முடியாத அளவுக்குப் பெருங் கசப்பாக மாறிவிட்டது. தமது ஆராய்ச்சியின்பயனை நண்பர்களுக்குக் காட்ட விரும்பிய ஜி. டி. நாயுடு புதிய மரத்தின் கனிகளைக் கொய்து வழங்கினர். சுளைகளை உரித்து

வாயில் போட்டவர்கள் தாங்கமுடியாத கசப்பினுல் ஏமாற்றமடைந்தார்கள். வாழைக் கனியின் இனிமை ஊசி மருந்தினுல் உயர்ந்து தீஞ்சுவையாகி மகிழ்ச்சி தந்திருக்க, ஆரஞ்சுக் கனியின் சுவையே மாறிப்போய் விட்ட காரணத்தை அவரால் அறிய முடியவில்லை. எனவே, மேலும் அவரது ஆராய்ச்சியைத் தொடங்கினுர். ஓர் ஆரஞ்சுக் கனியின் சாற்றைப் பிழிந்து கோப்பை கோப்பையாகத் தண்ணீரைக் கலந்துகொண்டே போகும் பொழுது சுமார் முப்பது கோப்பைத் தண்ணீரில் ஒரு கனியின் சாறும் சிறிது சர்க்கரையும் கலந்த நிலையில் சாதாரண ஆரஞ்சு ரஸத்தின் இனிமை கிடைத்துவிட்டது இதில் அவர் கண்டறிந்த உண்மை மிகவும் தெளிவானது. மருந்தூசியின் விளைவாக முப்பது பழங்களின் இனிமை ஒரே கனியின் சாற்றில் இணைந்து இறுகிய காரணமே முதலில் சுவைத்த கசப்பின் காரணமாகும்.

தற்செயலாகக் கிடைக்கின்ற வெற்றிகளின் காரணமாகத் தாவர உண்மைகள் பலவற்றை அவர் புதிதாகக் கண்டறிய முடிந்ததுடன், மருந்தின் தன்மையிலும் சில அபிவிருத்திகள் செய்ய முடிந்தது. ஒவ்வொரு பயிராக அவரது சோதனை நடைபெற்றது. அவற்றில், பருத்தி, சோளம், பப்பாளி ஆகியவற்றில் அவர் பெற்ற வெற்றி மிகவும் ஆச்சரியமானதாகும்.

## சோள மரம் :

சாதாரணமாக சோளப்பயிரைப் பார்த்திருப்பீர்கள். நல்ல விளைச்சல் உள்ள நிலங்களில் ஒரு சோளச் செடி ஏழு அல்லது எட்டு அடி உயரம் வளரக்கூடும். ஆனுல், சோதனைச் செடி பதினெட்டரை அடி உயரம் வளர்ந்ததைக் கண்டார். தரையிலிருந்து இரண்டடி உயரத்தி

லேயே பன்னிரண்டு கிளைகளாக அது பரவி ஒவ்வொரு கிளையும் பன்னிரண்டடி நீளம் வளர்ந்தது. நடுத்தண் டின் பன்னிரண்டரை அடி உயரத்தில் மேலும் அந்தச் செடி பதினைன்கு கிளைகளும் ஒவ்வொரு கிளையும் ஆறடி நீளமுடையதாகவும் ஆயிற்று. அந்தக் கிளைகளும் ஆறடிக்குப் பிறகு இரட்டையாகக் கிளைத்தன. மொத் தம் 183 அடி நீளமுள்ள கிளைகளுடன் சோதனைச் சோளச்செடி பெரிய விருட்சமாக விளங்கியது பேரதிசய மாகும். அதில் மொத்தம் 40 பெரிய கதிர்கள் விளைந்தன.

## பருத்தி மரம் :

செடியாகவும் மரமாகவும் பருத்தி வளர்வதுண்டு. "நேடன்" பருத்தி என்பது கோவை மாவட்டத்தின் கிழக்குப் 'பகுதியில் பெரும்பாலும் காணப்படுவதாகும். இதன் விதை கருப்பாக இருக்கும். விளையும் பருத்தி யின் நீளம் முக்கால்அங்குலம், செடி நான்கு அடி உயரம் இருக்கும், இந்தப் பருத்தியில் நாயுடுவின் ஆராய்ச்சி நடைபெற்றது. இதன் பயனாக அந்தச் செடி பத்தரை அடி உயரத்துடன் கப்பும் கிளையுமாகப் பரவி எழுந்தது. முதல் தட்வையில் கிடைத்த பருத்தி ஒரு செடிக்குப் பன்னிரண்டு ராத்தல்கள் ஆகும். ஒரு பருத்தியின் நீளம் இரண்டேகால் அங்குலங்களாகும். சுடான் பருத்தி என்ற ஒரு வகையின் நீளமே சாதாரணமாக இரண்டங் குலங்கள்தான் இருக்கும். இந்தச் செடியில் இரண்டா வது மூன்ருவது ஈடுகளில் ஆறு ராத்தல்கள் வீதம் பருத்தி விளைந்தது.

விவசாய இலாகா நிபுணர்களே இதைக்கண்டு அதி சயித்தனர். மற்ருெரு முக்கியமான விஷயம்தான் தாவர விஞ்ஞானிகளையே திகைக்கவைத்திருப்பதாகும். தாவரங் களை விஞ்ஞான முறைகளால் அதிக வளர்ச்சியும் விளைவு

முடையனவாக மாற்றுவது புதிதல்ல. ஆனால், அந்த மாற்றங்கள், ஒரு செடியின் அந்த ஒரு தலைமுறையில் மட்டும்தான் வெற்றிகரமாக இருக்குமேயல்லாது அதன் விதைகளைப் போட்டால் மீண்டும் பண்டுபோல் சாதாரண நிலைக்குப் போய்விடும். நாயுடு அவர்களின் ஊசி மருந்தினால் விளைவு பெருகிய இந்தத் தாவரங்களின் வித்துக்களிலோ தாய்ச் செடி பெற்ற புதுவளர்ச்சியின் தன்மையைத் தாங்கி வளர்கின்ற சக்தி சேர்ந்திருக்கின்றது. இது தாவர விஞ்ஞானத்திலேயே புதிய உண்மையாகுமென்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இது நிபுணர்களால் ஆராயப்பட்டு வருகிறது. இரண்டொரு செடிகளில்தான் இச் செயற்கை முறை



யில் விளைவைப் பெருக்க முடிகிறது. பெரிய நிலப்பரப்பில் பயிர்ச் செயலாக இதைச் செய்யமுடியாது என்று சில தாவர நிபுணர்கள் ஐயுற்றார்கள். அதைப் போக்குவதற்காக நாயுடு தமது விவசாயப் பண்ணையில் சோளம், வாழை, பருத்தி, பப்பாளி ஆகியவற்றைப் பெருவாரியாகப் பயிர்செய்து காட்டியிருக்கிறார்.

## புதிய தொழில்கள் :

மூன்ருவது உலக யாத்திரைக்குப் பிறகு அவரது வாழ்வில் பல திருப்பங்கள் ஏற்பட்டு விட்டன. போதிய அனுதாபமும் ஆதரவும் இல்லாமல் பல தொல்லைகளும் அவருக்கு ஏற்பட்ட காரணத்தால் அவரது தொழிற் சாலைகளெல்லாம் முடங்கிக் கிடந்தன என்ருலும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் ஐரோப்பிய யாத்திரை செய்யவும், பல புதிய தொழில் ஊக்கங்களில் ஈடுபடவும் அவருக்கு விருப்பம் உண்டாயிற்று. நான்காவது முறையாக மீண்டும் 1950-ல் அவர் ஐரோப்பிய யாத்திரையை மேற்கொண்டு மேலை நாடுகளிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய்களுக்குப் பற்பல புதிய தொழிலுற்பத்திச் சாதனங்களைச் சேகரித்து வந்திருக்கிருர். அவற்றில் மிகவும் முதன்மையானதும், இந்தியாவிலேயே இதுவரை இல்லாததுமான புதிய தொழில் கடிகார உற்பத்தியாகும்.

வெளிநாடுகளிலிருந்து வருகின்ற நூற்றுக்கணக்கான ரூபாய் விலையுள்ள கெடிகாரங்கள் அவரது தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் பத்து அல்லது பதினைந்து ரூபாய்ச் செலவில் தயாராக முடியுமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஊற்றுப் பேனுக்கள் செயயும் தொழிற்சாலை யந்திரங்களும் அங்கு வேலை செய்துகொண்டிருக்கின்றன. தாவர விஞ்ஞான வெற்றிகளை உலகப் பிரசித்திப் பெற்ற சர் ஜான் ரஸ்ஸல் என்ற நிபுணர் வந்து பார்த்து வியப்படைந்தார். சர். சி. வி. ராமன் அவர்கள் நாயுடுவின் தோட்டத்தில் விளைந்த அருமையான பப்பாளிப் பழத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் காட்சியையும் மேலே படத்தில் காணலாம்.

# 4 வாழ்க்கை லட்சியம்

## உழைப்பின் உயர்வு :

மனித வாழ்க்கை சமூக அடிபடையில் இயங்குவது ஆகும். நாட்டு மக்களின் நல்வாழ்வை விரும்பி வாழும் தனி மனிதனே சமூகத் தலைவனாகவும் சரித்திர நாயகனாகவும் விளங்குகின்றான். அத்தகையப் பெரியார் நமது நாயுடு.

நாயுடுபோன்ற பெரியார்களின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியது **உழைப்பின் உயர்வே** யாகும். இந்த உலகில் மக்களின் போற்றுதலுக்குப் பாத்திரமாக விளங்கும் பெரியார்கள் பலரும், தங்கள் உழைப்பின் பெருமையினாலேயே மேன்மையடைந்திருக்கிறார்கள்.

பெற்றோர் தேடிவைத்த பெருஞ் செல்வத்தைப் பிள்ளைகள் பிறப்புரிமையாகப் பெற்றுப் பயன்படுத்துவது தொன்றுதொட்டு வழக்கமாக இருந்து வருகிறது. அது போன்றே நமது முன்னோர்களின் அறிவு, ஆற்றல், உழைப்பு, உயர் நோக்கு, தியாக வாழ்வு, ஆகிய நற்பண்புகளையும் வழிவழியாக மக்கள் மேற்கொண்டு ஒழுகுதல் சாலச் சிறந்ததாகும்.

நமது நாடும், மொழியும் மிகவும் தொன்மையான மரபையுடையன. கல் தோன்றி மண் தோன்றாத மிகப் பழங்காலத்திலிருந்தே மேலான பண்பாடும், நாகரிகமும் கொண்டு வாழ்ந்தவர் நமது முன்னோர்.

புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அண்மையில், சிந்து நதிக்கரையில் தோண்டி யெடுத்த பெரு நகர் களையும், அவற்றில் காணப்படும் அரிய அமைப்புக்களை யும், கலைப்பொருள்களையும் நோக்குங்கால், அவை யனைத்தும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளின் முன்னர் நமது முன்னோரால் இயற்றப்பட்டவை என்று தெரிகிறது. இதை எண்ணும்போது நமது உள்ளத்தில் பெருமிதமும் ஊக்கமும் பிறக்கின்றன. கவியரசரான பாரதி யாரும்

"..............................................எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சிலே"

என்று பாடியிருக்கிறரல்லவா? நமது தந்தையரும் முந்தையோரும் கல்வி கேள்விகளிலும், அறிவாற்றல் களிலும், கலை ஞானங்களிலும், உழைப்புத் திறனிலும் சிறந்து விளங்கிய செய்திகளைப் படித்து அறியும்போது, நாமும் அவர்களைப் பின்பற்றி முன்னேற வேண்டுமென்று ஆவல்கொள்கிறோம்.

மனிதன் இன்று படைத்திருக்கும் செல்வமெல்லாம், உலகை உற்று நோக்கியும், உய்த்துணர்ந்தும், கற்றுத் தேர்ந்தும், உழைத்துச் சேர்த்தும் பெற்றவையே யாகும். மனிதர்கள் தனித்தனியாக நின்று செய்து முடிக்கும் அருஞ் செயல்கள் பலவும் அவர்கள் பிறந்து வாழும் நாடு முழுமைக்குமே பொதுவான தனிச் சிறப்பாக அமைந்து விடுகின்றன. இவற்றின் தொகுப்புச் சரி தையே நாட்டு வளர்ச்சியைக் காட்டும் அளவுகோலாகத் திகழ்கிறது.

**அன்புள்ளம்:**

எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அற வோராக விளங்கும் நாயுடு அவர்கள், 'உழைப்பால் ஒரு

மனிதன் உயர்வு பெறலாகும்' என்ற உண்மைக்கு உய ரிய சான்ருக விளங்குகின்ற பெரியார். நாட்டின் மீதும், படிப்பறிவில்லாமல் இன்னமும் இருளில் கிடக்கும் கோடிக் கணக்கான மக்களின் மீதும் அவர் கொண்டுள்ள பற்று அவரைச் சிறந்த தலைவராக ஆக்கியுளது. சாதி யினுலோ, தொழிலினுலோ ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்ற வேற்றுமையை அவர் பாராட்டுவ தில்லை. அவரிடம் கால் நூற்ருண்டுக்கு மேலாக உழைத் துப் பெரும் பயன் பெற்ற மாணவர்களும் எண்ணிலர்; பொது நிறுவனங்களுக்கு வழங்கிய நன்கொடைகளும் மிகப்பல.

பள்ளியில் பயிலாவிட்டாலும் பற்பல கல்வித்துறை களிலும் மிகுந்த ஊக்கம் செலுத்தியவர் திருவாளர் ஜி. டி. நாயுடு ஆவர். பெற்ருேர் விட்டுச்சென்ற பெருஞ் செல்வத்திற்கு உரிமைப் பிள்ளையாக, பொருள் அருமை அறியாத பொறுப்பற்ற வாழ்க்கையை அவர் மேற் கொள்ளவில்லை. உடல் வருந்தி உழைத்தும், கருத் துடன் பல கலைகளையும் நாடிப் பயின்றும், அரிதின் முயன்று பொருளீட்டியும், எளியோர்க்கு அதனை அன்பு டன் வழங்கியும் மேலான வாழ்வு வாழும் நமது நாயுடு அவர்கள், உழைப்பின் உயர்வுக்கும், அதனுல் பெறும் இணையிலா இன்பத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கு கிருர் அன்ருே!

நாயுடு போன்ற மேதைகள் ஒரு நாட்டின் சிறப் புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிருர்கள். அவர்களைப் பின்பற்றி உயர்வடைய ஒவ்வொருவரும் முயல்வது பெரும் பயன் தருவதாகும்.

# UZHAIPPIN UYARVU

( G. D. NAIDU )

BY

THIRULOKA - SITHARAM

**PRICE Rs. 0-14-0**

★

THE IDEAL PUBLISHERS,

**No. 1, Chinnakammala St., :: TIRUCHIRAPALLI.**

Wrapper Printed at the City Press, Madurai Road, Tiruchy.